
சேவைக்கு ஓய்வு
பக்கம் 9


பஸ கவிழ்ந்தது
பக்கம் 11


எதிரானவை அல்ல
பக்கம் 15


ஆபிரிக்கா
பக்கம் 21

www.onlineuthayan.com

பக்கங்கள்: 24

# உதயன்

சுடர் 27
கதிர் 96

வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 18 வியாழக்கிழமை (01/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# ஜெனிவா இராஜதந்திரப் போர் உச்சம் இலங்கைக்காகக் களத்தில் தக்ஷின்

## கொழும்பு கோரியதால் லத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க நாடுகளுடன் அவசரப் பேச்சு

கொழும்பு, மார்ச் 1

ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் இலங்கைக்கு எதிரான பிரேரணையொன்றை நிறைவேற்ற அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் கங்கணம் கட்டிச் செயற்பட்டு வரும் தற்போதைய சூழ்நிலையில், இலங்கைக்கு ஆதரவு பெற்றுக்கொடுக்கும் இராஜதந்திரச் செயற்பாடுகளில் தாய்லாந்தின் முன்னாள் பிரதமரும் உலகக் கோடீஸ்வரர்களில் ஒருவருமான தக்ஷின் ஷின்வத்ரா களமிறங்கியிருக்கிறார் என இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து நம்பகரமாக அறியமுடிகின்றது.



இலங்கையுடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருக்கும் தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் ஷின்வத்ரா, தற்போதைய தாய்லாந்து பிரதமர் யிங்லக் ஷின்வத்ராவின் சகோதரராவார்.

இலத்தீன் அமெரிக்க மற்றும் ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களுடன் தக்ஷின் ஷின்வத்ரா மிக நெருக்கமான நட்புறவைக் கொண்டிருப்பதால் இம்முறை ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிரான பிரேரணையைத் தோற்கடிக்கச் செய்யும் இராஜதந்திர முயற்சியில் அவரின் உதவியையும் பெற அரசு தீர்மானித்தது. 23

# ஜெனிவாவில் எக்காரணம் கொண்டும் இலங்கையை ஆதரிக்கக் கூடாது

## கருணாநிதி, ஜெயலலிதா மன்மோகனுக்குக் கடிதம்



கொழும்பு, மார்ச் 1

ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக மேற்குலக நாடுகள் கொண்டுவரவிருக்கும் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இலங்கை அரசை இந்தியா ஆதரிக்கக் கூடாது என தி.மு.க. தலைவரும் முன்னாள் முதல்வருமான மு.கருணாநிதி, தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா ஆகியோர் இந்தியப் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளனர்.



இதுதொடர்பில் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரி 23

# இலங்கைக்கு கியூபா ஆதரவு

கொழும்பு, மார்ச் 1

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை நிறைவேற்றிக்கொள்வதில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் புதிய இராஜதந்திர வியூகங்களை வகுத்து நேரடியாகவே களத்தில் இறங்கி கடும்பிரயத்தனங்களை முன்னெடுத்துவரும் தற்போதைய பரபரப்பான சூழ்நிலையில், கொழும்புக்கு எதிரான பிரேரணையை தோற்கடிப்பதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று கியூபா நேற்று அதிரடியாக அறிவித்துள்ளது.

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிர்ப்பு வலுத்துவரும் நிலையிலேயே இலங்கைக்கு பூரணமான ஆதரவை வழங்கத் தாம் தயார் என்று கியூபா அறிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிரான மனித உரிமைகள் குற்றச்சாட்டுக்களை அன்று நிராகித்தது போல் இன்று மட்டுமல்ல என்றும் கியூபா இலங்கைக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்றும் அந்நாடு உறுதிபூண்டுள்ளது.

இலங்கை விவகாரம் தொடர்பாக கியூபா நாட்டு 23

# ஜெனிவாவில் கடமை முடித்த கையோடு நாடு திரும்ப அமைச்சர்களுக்கு உத்தரவு

## அரச தலைமைப்பீடம் அதிரடி

கொழும்பு, மார்ச் 1

ஜெனிவா மாநாடு தொடர்பில் தங்களது உத்தியோகபூர்வ கடமைகள் நிறைவடைந்த கையோடு அங்கு தங்கியிருக்கும் அமைச்சர்கள் குழாம் நாடு திரும்ப வேண்டும் என அரச தலைமைப்பீடம் நேற்றுப் பணிப்புரை விடுத்துள்ளது என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

அமைச்சர்கள் குழாம் நாடு திரும்பினாலும், ஜெனிவாவில் தங்கியுள்ள இலங்கையின் உயர்மட்ட இராஜதந்திரிகள் குழு, ஜெனிவா மாநாடு நிறைவடையும் வரை இலங்கை விவகாரத்தைக் கையாளும் என்றும் தெரியவருகின்றது.

ஜெனிவாவில் 23

# டக்ளஸை ஜெனிவா அனுப்பியது உலகில் மிகப் பெரிய நகைச்சுவை

## கிண்டலடிக்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, மார்ச் 1

அமெரிக்காவுக்கு எதிராக உள்நாட்டில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து கடுமையான எதிர்ப்பை வெளியிடும் அரசு, ஜெனிவாவில் அந்நாட்டின் கோரிக்கைக்குப் பணிந்து மண்டியிட்டுள்ளது. அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் உரை இதனை அம்பலப்படுத்திவிட்டது - என்று பரபரப்பான குற்றச்சாட்டொன்றை அதிரடியாக முன்வைத்துள்ளது ஜே.வி.பி.

வடக்கில் ஈ.பி.டி.பி. சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுகின்றது என்றும், ஆயுதங்கள் வைத்திருக்கின்றது என்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு நிலையில், அமைச்சர் டக்ளஸை அரசு ஜெனிவாவுக்கு அனுப்பியது உலகில் மிகப்பெரிய நகைச் சுவை 23

# ஜூன் 31 இல் மனிக்பாம் மூடப்படும்

வவுனியா, மார்ச் 1

இடம்பெயர்ந்தோர் தங்க வைக்கப்பட்டுள்ள மனிக்பாம் நலன்புரி நிலையம் ஜூன் 31 ஆம் திகதியுடன் முற்றாக மூடப்படும் என மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் எல்.குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அந்த நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று அங்கு நடைபெற்றது. வவுனியா அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ். சாள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனிக்பாம் நலன்புரி 23

# முன்னாள் புலிப் பிரமுகர் வாகனத்தில் கடத்தப்பட்டார்

கிளிநொச்சி, மார்ச் 1

தடுப்பு முகாமில் இருந்து புனர்வாழ்வு பெற்றுப் பின்னர் சமூகத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் புலிப் பிரமுகர் ஒருவர் கடந்த 27 ஆம் திகதி இரவு கிளிநொச்சியில் வைத்து இனந்தெரியாதோரால் வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

முத்தையா சுப்பிரமணியம் என்ற புலிப் பிரமுகரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக அவரது குடும்பத்தினர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் காலை முறைப்பாடு செய்துள்ளனர்.

முன்னாள் புலி உறுப்பினரான இவர் புனர்வாழ்வு பெற்ற பின் 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி சமூகத்துடன் இணைக் 23

# கூட்டமைப்பு நாளை கூடுகிறது

கொழும்பு, மார்ச் 1

நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஜெனிவா மனித உரிமைக் கூட்டம் தொடர்பாகக் கலந்தாலோசிப்பதற்காக நாளை வெள்ளிக்கிழமை அவசர கூட்டம் ஒன்றுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த 27ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமான மனித உரிமைக் கூட்டத் தொடரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளாதமை குறித்துப் புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியிலும் தாயகத் தமிழர்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள குழப்பநிலை தொடர்பாகவும், கூட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள கருத்து முரண் 23

### புலிகளுக்கு நிதி சேகரிப்பாம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் குடியேறியுள்ளோரில் ஒரு தொகுதி தமிழர்கள் நிதி உதவி செய்து வருவதாக ஆஸ்திரேலியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர், அட்மிரல் திஸர சமரசிங்க குற்றம் சாட்டியுள்ளார். அட்மிரல் திஸர சமரசிங்க ஆஸ்திரேலிய வானொலி ஒன்றுக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

### புகைப் பிடிப்பதற்கு தடை புதிய சட்ட மூலம்

பொது இடங்களில் புகை பிடிப்பதற்குத் தடை விதித்து சட்டமூலம் ஒன்றை கொண்டுவர தீர்மானித்துள்ளதாக பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். குறித்த சட்ட மூலம், சட்டமூல திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். சட்ட மூலத்தை திணைக்களத்திற்கு வருடாந்தம் அனுப்பி வைக்கப்படுகின்ற போதும் தமிழ் மொழிப் பெயர்ப்பில் ஏற்பட்டுள்ள தாமதத்தால் காலதாமதமாவதாக பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர் இதனைக் குறிப்பிட்டார்.

### பிரிட்டனில் இருந்து 52 பேர் நாடு திரும்பினர்

பரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரிய 52 இலங்கையரை கொண்ட மற்றுமொரு தொகுதியினர் பிரிட்டன் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பலத்த பாதுகாப்புடன் நேற்று புதன்கிழமை நாடு திரும்பியுள்ளனர். பிரிட்டன் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளினால் நாடு கடத்தப்பட்ட இவர்கள் விசேட விமானமொன்றின் மூலம் ஹீத்ரூ விமான நிலையத்திலிருந்து நாடு திரும்பியுள்ளனர். இவர்களில் 29 தமிழர்கள், 10 முஸ்லிம்கள் மற்றும் 13 சிங்களவர்கள் அடங்குகின்றனர். இவர்களில் 45 ஆண்களும் ஏழு பெண்களும் உள்ளனர். கொழும்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, களுவாஞ்சிக்குடி, திருகோணமலை, வத்தளை, வவுனியா மற்றும் நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

### வவுனியாவில் இருவர் கைது

இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் ஆவணங்களைத் தயாரித்து விற்பனை செய்ததாகக் கூறப்பட்டு இருவர் வவுனியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர். வெளிநாட்டிலுள்ள தமிழர்களை வவுனியா முகாம் இராணுவத்தினர் விசாரணைக்கு அழைப்பதாகக் கூறி குறித்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு போலி முத்திரைகளுடன் விற்பனை செய்யப்பட்டு வந்ததாக வவுனியா குற்றப்புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு ஆவணங்கள் தயாரிப்பதன் மூலம் வெளிநாட்டிலுள்ள தமிழர்களின் இருப்பை பாதுகாக்க இவர்கள் எடுக்கும் முயற்சியால் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். வவுனியா தெற்கு சுகாதார அலுவலகத்தில் பணிபுரியும் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு அந்தோனியார் திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பம்

## ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

**யாத்திரிகர்கள் இரவு அங்கு தங்கியிருந்து 4ஆம் திகதி அங்கு நடைபெறும் காலை வழிபாடுகளிலும் பங்கு பற்றமுடியும்.**

யாழ்ப்பாணம், மார்ச் 1

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. திருவிழாத் திருப்பலி 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவுக்கான ஏற்பாடுகளைக் நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு ஏ.அமல்ராஜ் மேற்கொண்டுள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலகம், வேலணை பிரதேச செயலகம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக அதிகாரிகள், கடற்படையினர், இராணுவத்தினர், பொலிஸ் பிரிவினர் இணைந்து இந்த விழா ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

இம் முறை திருவிழாவுக்கு இலங்கையிலும் இந்தியாவிலும் இருந்து அண்ணளவாக 7 ஆயிரம் வரையான யாத்திரிகர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத் திருவிழாவில் பங்கு பற்றும் இலங்கை, இந்திய யாத்திரிகர்களுக்கான அறிவுறுத்தல்கள் அடங்கிய கடிதம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் உரிய தரப்பினர்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. யாத்திரிகர்களுக்கான பாதுகாப்பு மற்றும் குடிதண்ணீர், உணவு, மலசலகூடம் சுகாதாரம், அவசர மருத்துவம் உட்பட ஏனைய விடயங்களிலும் இலங்கைக் கடற்படையினரும் மாவட்ட மட்ட அரச உத்தியோகத்தர்களும் உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

திருவிழாவில் பங்கு பற்றும் இலங்கை யாத்திரிகர்கள் நாளை முதல் கச்சதீவுக்கு பயணம் மேற்கொள்ள முடியும். நாளை மறுதினம் பயணிக்கும் யாத்திரிகர்கள் இரவு அங்கு தங்கியிருந்து 4ஆம் திகதி அங்கு நடைபெறும் காலை வழிபாடுகளிலும் பங்கு பற்றமுடியும்.

மேலும் யாத்திரிகர்கள் செல்வதற்காக குறிகாட்டுவான், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, குருநகர், பாசையூர், மண்டைதீவு, நாவாந்துறை ஆகிய துறைகளினூடாக படகுகளில் கச்சதீவுக்கு பயணம் மேற்கொள்ள முடியும். குறிகாட்டுவானில் இருந்து கச்சதீவுக்கு ஒரு வழிக்கட்டணமாக 200 ரூபாவும் நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கு ஒரு வழிகட்டணமாக 150 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நெடுந்தீவில் இருந்து நாளை மறுதினம் காலை 9.30, முற்பகல் 10.30, 11.30 மற்றும் நண்பகல் 12.30 ஆகிய நேரங்களில் படகுச் சேவை இடம்பெறும்.

கச்சதீவில் யாத்திரிகர்களுக்கான உணவுத் தேவைக்காக நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத்தின் உணவு மையங்கள் நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நெடுந்தீவு பிரதேச சபையின் அனுமதி பெற்று தனியார் விற்பனை நிலையங்களும் அமையப்பெற்றுள்ளன. யாத்திரிகர்களுக்காக தண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்திய யாத்திரிகர்களின் தேவைகருதி பணப்பரிமாற்றலுக்காக இலங்கை வங்கியின் கிளை ஒன்றும் கச்சதீவில் இயங்கவுள்ளது. அவசர தேவை கருதி பயன்படுத்துவதற்காக 'கியூமெடிக்கா' நிறுவனத்தின் அம்புலன்ஸ் படகு சேவையும் இடம்பெறும். தேவை கருதி நடமாடும் நீதிமன்று மற்றும் இலங்கை சுங்கத் திணைக்கள அதிகாரிகளின் சேவையும் பெறப்பட்டுள்ளது. பொலித்தீன் பிளாஸ்ரிக் பொருள்களினை கொண்டு வருவதனையும் மற்றும் தொற்றுப் பரவாது தடுப்பதற்காக விவசாய உற்பத்திப் பொருள்கள் ஆகிய வற்றினை யாத்திரிகர்கள் தம்முடன் எடுத்துவருதல் தவிர்க்கப்பட வேண்டும் என அரச அதிபர் கேட்டுள்ளார். (த)

# ஜனநாயக உட்கட்டமைப்பு கூட்டமைப்புக்கு அவசியமானது

## சிவாஜிலிங்கம் கூறுகிறார்

**தனி நபர்களின் சர்வாதிகாரத்தை இனிமேலும் அனுமதிக்க முடியாது.**

கொழும்பு, மார்ச் 1

ஐந்து கட்சிகளைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு திட்டவட்டமான ஒரு உட்கட்டமைப்பும் ஜனநாயக சூழலும் உடனடியாகத் தேவைப்படுகிறதென்று தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) நேற்று அறிவித்திருக்கிறது.

கூட்டமைப்பு ஜெனிவா பயணத்தை இரத்துச் செய்திருப்பது தொடர்பில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் அரசியல் தலைவர் சிவாஜிலிங்கம் விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

ஜெனிவாவுக்குப் போகப் போகிறோம் என எமது மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்திவிட்டு இப்பொழுது திடீரென நாங்கள் போகவில்லை, பிரச்சினைகளை ஏற்படுத்த நாங்கள் விரும்பவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் இரா. சம்பந்தன் அறிவித்திருப்பது அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

அத்துடன், இந்த முடிவை நாடாளுமன்றக் குழு எடுக்காமல் சம்பந்தன் உள்ளிட்ட மிகச் சிறிய குழுவினரே எடுத்தனர் எனச் சொல்லப்படுகின்றது. இந்த நிலைமை மிகவும் கவலைக்குரியது. எமது இனத்தின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு இந்த முடிவில் சாதக, பாதகங்களைப்பற்றி நாம் எடுத்துக்கூற விரும்பவில்லை.

ஐந்து கட்சிகளைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஓர் திட்டவட்டமான உள்கட்டமைப்பும், ஜனநாயகச் சூழலும் உடனடியாகத் தேவைப்படுகின்றது. தனி நபர்களின் சர்வாதிகாரத்தை இனிமேலும் அனுமதிக்க முடியாது. அப்படி அனுமதிப்போமானால் நாங்கள் எல்லோரும் சேர்ந்து 2001 ஆம் ஆண்டில் உருவாக்கிய ஒற்றுமைப் பேரணி சிதறிப்போய்விடும். - இவ்வாறு அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-சி)

# திரும்புகின்ற திசையெங்கும் அரசுக்கு ஆப்பும் ஆபத்துமே!

## ஐக்கிய சோஷலிஸ கட்சி சாட்டை

கொழும்பு, மார்ச் 1

திரும்பும் திசையெங்கும் மஹிந்த அரசுக்கு ஆப்பும், ஆபத்தும் காத்திருக்கின்றன. அராஜக அரசுக்கு எதிரான மக்கள் எதிர்ப்பை முடக்கி அவர்களின் கண்களில் மண் தூவுவதற்கு அரசு முயற்சிக்கின்றது. எந்தப் பக்கம் சென்றாலும் பாரிய ஆபத்தில் விழவேண்டிய பரிதாபநிலை மஹிந்த அரசுக்கு ஏற்பட்டுள்ளது. மஹிந்த அரசின் இந்நிலையானது ''பாக்குவெட்டியில் அகப்பட்ட பாக்கைப் போல்'' உள்ளது என ஐக்கிய சோஷலிஸ கட்சி கூறியுள்ளது.

எரிபொருள் விலையேற்றத்தின் காரணமாக நாட்டு மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இந்நிலையில், ஏனைய பொருள்களின் விலையும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இது ஆரம்பம் மட்டும்தான். இன்னும் 2, 3 மாதங்களில் பொருள்களின் விலையேற்றம் உக்கிரமடைந்து ரூபாவின் பெறுமதி நன்றாகக் கீழிறங்கி நாட்டில் மக்கள் வாழமுடியாத அபாயகரமான நிலை ஏற்படப்போகின்றது என ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் செயலாளர் சிறிதுங்க ஜெயசூரிய அபாயச் சங்கு ஊதியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டு எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசின் நாசகாரச் செயற்பாடுகளினால் நாட்டு மக்கள் பெரும் துன்பநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். துன்பத்தை தாங்கிக்கொள்ள முடியாத மக்கள் அரசுக்கு எதிராக வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். மக்களின் எதிர்ப்பை கட்டுப்படுத்துவதற்காகவும், அவர்களின் கவனத்தைத் திசைத் திருப்பும் வகையிலும் பல்வேறு நாடகங்களை அரசு நடத்திவருகின்றது.


சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அரசு பெற்ற அதிக வட்டியுடன் கூடிய கடனைச் செலுத்துவதற்காக நாட்டின் அப்பாவி மக்களைப் பசியில் வாட்டியும், மாணவர்களின் இலவசக் கல்விக்கு இடையூறு விளைவித்தும் மக்களிடமிருந்து பணத்தை அறவிடுகின்றது.

அரசின் அராஜகங்களை மூடி மறைப்பதற்காக உலக வர்த்தக சந்தையின் நிலைவரம் மற்றும் அரசுக்கு அழுத்தம் கொடுத்துவரும் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றைப் பயன்படுத்தி மக்களிடையே கபட நாடகத்தைக் காட்டிவருகின்றது.

நாட்டில் மனித உரிமை மீறல் சம்பவங்களில் அரசு முன்னிற்பதன் காரணமாகச் சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு மஹிந்த அரசு முகங்கொடுக்கவேண்டியுள்ளது. நாட்டில் ஏகாதிபத்திய ஆட்சிக்கு வித்திடும் வகையில் நாடு முழுவதும் இராணுவ ஆட்சியை அரசு நிலை நாட்டி வருகின்றது.

மக்களின் சொல்லொணாத் துன்பங்களை எடுத்துரைத்து மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க நாம் தயாராக உள்ளோம். அரசின் வஞ்சக செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக நாம் அரசுக்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க உள்ளோம் - என்றார். (த-சி)

## எங்களையும் கவனிப்பீங்களா?



நன்றி: மௌபிம

# அருவி வெட்டும் இயந்திரத்தில் சிக்கி படுகாயம்

யாழ்ப்பாணம், மார்ச்1

வயலில் அருவி வெட்டிக்கொண்டிருந்த இயந்திரத்தினுள் ஒருவரின் கால் அகப்பட்டுக் கொண்டதால் பாதத்தில் படுகாயமடைந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் சண்டிலிப்பாயில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த பாலசிங்கம் ஜெகதாஸ் (வயது 28) என்பவரே படுகாயமடைந்தார். (த-4)

# கிளிநொச்சியிலும் பேரணி

ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்படும் பிரேரணையைக் கண்டித்தும் ஜனாதிபதி மஹிந்தவுக்கு இறையாசி வேண்டியும் பிரார்த்தனைகளையும் பேரணிகளையும் நடத்துமாறு அரச உயர் மட்டத்தினால் விடுக்கப்பட்ட அழுத்தத்தை அடுத்து கிளிநொச்சியில் மாவட்ட செயலகம் பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஊழியர்கள் பேரணிகளை நடத்தியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பேரணி மாவட்ட செயலகத்தில் இருந்து கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் வரை இடம்பெற்றது. அரசுக்கு ஆதரவான பதாகைகளைத் தாங்கியபடி பேரணியில் ஊழியர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் பேரணியாகக் கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலை வந்தடைந்து பூஜைகளில் ஈடுபட்டனர். இந்தப் பேரணி மற்றும் பூஜைகளில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ. ஸ்ரீனிவாவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை கரைச்சிப் பிரதேச செயலகத்தின் பேரணி பிரதேச செயலகத்தில் இருந்து கந்தசாமி கோயில் வரை இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் புனித திரேசம்பாள் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டனர். (த-15-06)

# கூரை பிரித்து திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 1

பட்டப்பகலில் வீட்டின் கூரை பிரித்துத் திருடிய சம்பவம் ஒன்று நேற்றுக் கோப்பாய் தெற்கு பழைய தபாற் கந்தோர் வீதியில் இடம்பெற்றுள்ளது.

பணம், நகை உட்பட ஐந்தரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் இந்த வீட்டில் திருடப்பட்டுள்ளதாகக் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வீட்டில் யாருமில்லாத சந்தர்ப்பத்திலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-3)

# இப்படியும் ஒரு நடத்துநர்

யாழ்ப்பாணம், மார்ச். 01.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் சேவையில் ஈடுபட்ட 750 வழித்தட இ.போ.ச. பஸ்ஸில் பருவகாலச் சீட்டை வைத்திருந்த பயணி ஒருவரை மீண்டும் பயணச்சீட்டுப் பெறுமாறு நடத்துநர் வற்புறுத்தியதுடன் பயணச்சீட்டை பெறப் பயணி மறுத்ததால் அவரை பஸ்ஸில் இருந்து இறக்கிவிட்டார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது:-

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் பயணத்தை மேற்கொண்ட டபிள்யு.பி.என்.ஏ.1157 என்ற இலக்கம் கொண்ட 750 வழித்தட இ.போ.ச. பஸ்ஸில் பயணி ஒருவர் ஏறினார்.

பயணச் சீட்டுப் பெறுமாறு கோரிய அந்த பஸ் நடத்துநரிடம் குறித்த பயணி தனது பருவகாலச் சீட்டைக் காண்பித்தார். அதனைப் பார்வையிட்ட நடத்துநர் குறித்த பருவகாலச் சீட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. ''ரிக்கெட் எடுக்காவிட்டால் பஸ்ஸை விட்டு இறங்கிவிட வேண்டும்'' எனக் கடும் தொனியில் எச்சரித்தார்.

இதனையடுத்துக் குறித்த பயணி இ.போ.ச. உயர் அதிகாரி ஒருவரின் கைத்தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தி தனது பிரச்சினையைக் கூறியுள்ளார். பிரச்சினையைப் புரிந்துகொண்ட இ.போ.ச. உயர் அதிகாரி கைத்தொலைபேசியை நடத்துநரிடம் கொடுக்குமாறு கூறினார். பயணியும் கைத்தொலைபேசியை நடத்துநரிடம் கொடுக்க, அதனை வாங்க மறுத்த அவர் ''என்னை யாரும் ஒன்றும் செய்ய இயலாது'' என்று இறுமாப்புடன் கூறினார்.

அத்துடன் பஸ்ஸை விட்டு இறங்குமாறும் அச்சுறுத்தினார். இதனால் குறித்த பஸ்ஸை விட்டு இறங்கி 45 நிமிடம் கழித்து அந்த இடத்துக்கு வந்த 750 வழித்தட பிறிதொரு இ.போ.ச. பஸ்ஸில் பருவகாலச் சீட்டைக் காண்பித்துப் பயணித்தார் அவர். (த-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## "பூமராங்" பாயும் என்பதனை மறந்து செயற்படும் அரசு

ஜெனிவா மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தை எதிர்த்து, கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கடந்த திங்களன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் விலைவாசி உயர்வுகளுக்கு எதிரான மக்களின் போராட்டங்களை மழுங்கடிக்கும் நோக்கத்துடனேயே திட்டமிடப்பட்டன என்று ஐ.தே.கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த 11ஆம் திகதி எரிபொருள் விலைகள் உயர்த்தப்பட்டதால் பஸ் மற்றும் தனியார் வாகனக் கட்டணங்கள் பெரும் அளவில் உயர்ந்தன. 15ஆம் திகதி மின்சாரக் கட்டணமும் உயர்த்தப்பட்டது. கடந்த வாரம் பாண் விலை உயர்ந்தது. அடுத்து சமையல் எரிவாயு, பால்மா என்று பட்டியல் நீளப்போகிறது. நாணய மதிப்பு குறைக்கப்பட்டதால் இறக்குமதிப் பொருள்களின் விலைகள் எகிறுகின்றன.

இப்படியான நிலையிலேயே கடந்த திங்கட்கிழமை இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானத்தை எதிர்த்து பெரும் அளவில் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் இலங்கை ஜனாதிபதியை அமெரிக்கா நிறுத்தப் போகிறது போன்ற பிரமை மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் தீர்மானம் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்பட்டதே. இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தும் வாசகம் எதுவும் அதில் கிடையாது. அவ்வாறு இருந்தாலும் இலங்கைக்கு அவ்வாறான ஆபத்து மிகவும் அரிதாகவே உள்ளது என்கிறார் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். டி. சில்வா.

ஒன்று: இலங்கை 'ரோம்' பிரகடனத்தில் கையெழுத்திடவில்லை. மற்றையது: ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு தீர்மானம் வந்தாலும் சீனாவும், ரஷ்யாவும் தமது வீட்டோவைப் பயன்படுத்தி தடுத்துவிட முடியும். சாத்தியமான ஒரே ஒரு வழி வழக்குத் தொடுநர்நாயகம் ஒருவர் தாமாகவே விசாரணைகளை ஆரம்பித்து, அதனுடன் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையையும் சான்றாகச் சமர்ப்பித்து, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம் என்பது மட்டுமே என்கிறார் முன்னாள் பிரதம நீதியரசர். புலம்பெயர் தமிழ் அமைப்புகள் இப்படியான ஒரு திட்டத்துடனேயே செயற்படுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அரசு பெரிதுபடுத்துவது, விலைவாசி உயர்வால் உள்நாட்டில் அரசுக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பை திசை திருப்பவே என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது; புரிகிறது.

இலங்கை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் சிபாரிசுகளையே நடைமுறைப்படுத்துமாறு அமெரிக்கா கோருகிறது. அதனை இலங்கை எதிர்க்கிறது. தீர்மானத்தை முறியடிக்கும் முயற்சியில் இலங்கை அரசு கோடிக்கணக்கான பணத்தை இதுவரை செலவிட்டுள்ளது. கடந்த திங்களன்று ஏற்பாடு செய்யப்பட்ட நாடளாவிய ஆர்ப்பாட்டங்களுக்கும் பெரும் தொகையான பணம் செலவாகி இருக்கும் என்பதனைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

விலைவாசி உயர்வால் மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அடுத்த மாதம் வீட்டுப் பாவனைக்கான மின்சாரக் கட்டண 'பில்' வரும்போது தான் மக்களுக்கு தம்மீது சுமத்தப்பட்டுள்ள சுமை புரியப்போகிறது.

மின்சாரம் ஓர் ஆடம்பரப் பொருள் அல்ல. அத்தியாவசியப் பொருள். அரசு இதனை மறந்துவிட்டது. அமெரிக்காவுக்கு எதிரான உணர்வு அலைகள் ஆகக் கூடியது இன்னும் ஒரு மாதம்தான் நின்று பிடிக்கும்.

உலக சந்தையில் எரிபொருள்களின் விலைகள் உயர்ந்து விட்டன என்று அரசு காரணம் கூறுகிறது. ஆனால், ஒப்பீட்டளவில் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு விலைகள் இங்கு உயர்த்தப்பட்டுள்ளன. இதை மக்கள் எதிர்ப்பார்கள் என்ற அச்சம் தானும் அரசுக்கு இல்லை.

மக்களைப் பாதிக்கும் நடவடிக்கைகளை, அவர்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் கண்மூடித்தனமான செயற்பாடுகளை மேற்கொள்வதனை மூடி மறைப்பதற்கு, மறக்கச் செய்வதற்கு -

அரசு கையில் எடுத்துள்ள போர் வெற்றியென்ற மூடுதிரை நாளடைவில் ஒரு கட்டத்தில் தென்னிலங்கை மக்களாலேயே கிழித்தெறியப்பட்டுவிடும்!

நீண்ட நாள்களுக்கு ஜெனிவாப் பூச்சாண்டி தொடர்ந்தும் எடுபடாது. யதார்த்த நிலையை உணர்ந்து அரசு செயற்படவேண்டும்.

ஜெனிவா மாநாட்டில் இலங்கையைக் காப்பாற்றுவதற்கான முயற்சி என்ற பெயரில், அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் என்ற வகையில் பெரும் "பட்டாளம்" அரச தரப்புச் செலவில் நாள்களை சுவிற்சர்லாந்தில் கழிக்கிறது.

மக்களின் வரிப் பணத்தை இத்தகைய தேவையற்ற, பயனற்ற வழிகளில் செலவழித்துக்கொண்டு மக்களின் வயிற்றில் அடிக்கும் விலை உயர்வுகளை நடைமுறைப்படுத்துவது "பூமராங்" போன்று குறுகிய காலத்தில் தன்னை நோக்கிப் பாயும், மக்கள் எதிர்ப்புப் பெருகும் என்பதனை அரசாங்கம் உணரத் தலைப்படக் கூடாதா?

# தேசிய நல்லிணக்கம்; அர்த்தம் தான் என்ன?

### விளக்குகிறார் கலாநிதி சரவணமுத்து

கொழும்பு, மார்ச்.1

போர்க்குற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு நடவடிக்கை எடுத்தால் அது நல்லிணக்கம் தொடர்பான நடவடிக்கைகளைப் பெரிதும் பாதிப்பதாய் அமைந்துவிடும் என்று அரசு தரப்பினர் கருதுவார்களானால் அது வெறும் அரசியல் நோக்கம் கொண்ட அற்பத்தனம் என்றே சொல்ல வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மாற்று அரசியல் கொள்கைகளுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து. கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு அவர் அளித்துள்ள நேர் காணலில் இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இந்த நாட்டில் நல்லிணக்கத்தை கெடுப்பதான நடவடிக்கைகள் எவை? தமிழ் மக்களால் தமது தேசிய கீதத்தை தமது மொழியில் பாட முடியாமல் இருக்கிறது. இதுதான் தேசிய நல்லிணக்கத்தைக் கெடுக்கும் செயல்.

கொழும்பின் மத்தியில் வெள்ளவத்தையில் ராமசாமி பிரபாகரன் என்ற மனிதர் கைது செய்யப்பட்டார். காவலில் வைக்கப்பட்டார். 28 மாதங்கள் சித்திரவதை செய்யப்பட்டதன் பின் விடுவிக்கப்பட்டார். அதனால் அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றை பதிவு செய்தார். அந்த வழக்கு விசாரணைக்கு வருவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னதாக அவரை வெள்ளை வானில் வந்தவர்கள் கடத்திச் சென்று விட்டார்கள். இது தான் நல்லிணக்கத்தை கெடுக்கும் செயற்பாடுகள்.

மக்களிடமும் அவர்களின் அரசியல் பிரதிநிதிகளிடமும் காணாமல் போயுள்ளவர்களின் பெயர்ப் பட்டியலைத் தாருங்கள். உங்களின் அன்புக்குரியவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற விவரம் தரப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. இவ்வாறு கடந்த வருடம் மூன்று தடவைகள் நடந்துள்ளது. ஆனால் விவரம் தரப்படவில்லை. இவை தான தேசிய நல்லினக்கத்தைக் கெடுக்கும் செயல்கள்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை அமுல்படுத்தும்படி சிவில் அமைப்புகள் யாவும் வலியுறுத்துகின்றன. ஆனால் இந்த அறிக்கை சுயாதீனமான ஒரு குழுவினால் தயாரிக்கப்பட்டது. அது அரசாங்கத்தின் அறிக்கையல்ல என்கிறது அரசு. அதனால் விரிவாக கலந்துரையாடப்படாமல் அதனை அமுல் செய்வது ஜன நாயகத்துக்கு முரணானது என்பது அரசின் நிலைப்பாடாக இருக்கிறது. இதற்கு உங்கள் பதில் என்ன என்று கேட்கப்பட்டதற்கு கலாநிதி பாக்கியசோதி கூறிய தாவது;

அரசு முழுமையாகவே ஏமாற்றிக் கொண்டிருக்கிறது என்றுதான் நான் சொல்வேன். 18 வது அரசமைப்பு திருத்தத்தின் மீது விரிவான கலந்துரையாடல் எங்கே நடைபெற்றது? 18 வது திருத்தம் வருமுன் இரண்டு தேசிய தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஒன்றிலாவது இந்தத் திருத்தம் பற்றி பேசப்பட்டதா? இம் மாதிரி முழுதும் ஏமாற்றத்தனமான கருத்துக்களை வெளியிடாமல் அரசு சுத்தமானதாக செயல்பட வேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை எடுத்துக் கொண்டால் அதில் பல பரிந்துரைகள் சில தினங்களிலேயே செயல்படுத்தக் கூடியவையாக உள்ளன. சட்டங்கள் தேவைப்படுமானால் அதற்குத் தடையாக எதுவும் இல்லை. தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததெனில் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்று அடுத்தகணமே சட்டமாக்கி விடலாம்.

இங்கே என்னநடக்கிறது அரசு ஒரு ஆணைக்குழுவை நியமிக்கிறது. ஆணைக்குழு அறிக்கை தருகிறது. அரசு உடனே இது எமது அறிக்கையில்லை என்கிறது. இதில் பிரச்சினை என்னவென்றால் தங்களுக்கு சாதகமாக இல்லாவிட்டால் அதற்கு தாங்கள் பொறுப்பில்லை என்றுவிடுகிறார்கள். அவ்வாறானால் முதலில் ஏன் ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும்? யாரை மூட்டாள்களாக்கப் பார்க்கிறார்கள். அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மிடையிலான பேச்சுக்களில் முட்டுக் கட்டை ஏற்பட்டிருப்பது பற்றிய கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் கூறியது.

கடந்த வருடம் இந்த இரு தரப்புப் பேச்சுக்கள் ஆரம்பமாகின. தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது முன்மொழிவுகளை முன் வைத்துள்ளது. அரசாங்கம் இன்னமும் தனது பிரதிபலிப்பை வழங்கவில்லை.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தனது முன் மொழிவுகளை அரசு முன் வைக்க வேண்டும். அவர்கள் போக்கிடமில்லாத சிறிய கட்சிகளிடம் பாரத்தை போட்டு விடுகிறார்கள். ஜே.வி.பி.யால் அரசை வீழ்த்த முடியுமா? விமல் வீரவன்சவால் அரசை வீழ்த்த முடியுமா? ராஜபக்ஷவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அவ்வளவு ஆபத்திலா இருக்கிறார்கள்?

இனப்பிரச்சினைக்கு இந்த அரசாங்கம் ஒரு போதும் தீர்வை வழங்காது. அவ்வாறு செய்தால் இந்த அரசு உடைந்துபோகும் என்கிறார்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர் உங்கள் கருத்து அரசியல் தீர்வு ஒன்று தான் முக்கியம் என்றால் அதனை இவர்கள் தடுப்பதற்கு அனுமதிக் கலாகாது. அவர்கள் ஒரு சில வாக்கு களையே பெறக்கூடிய சிறிய கட்சியினர்.

தலைமைத்துவம் என்பதன் அர்த்தம் தான் என்ன? (ப)

# பாடசாலையில் பொது நிகழ்வு; ஆசிரியர் சங்கம் கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

பாடசாலை வளாகத்தில் பொது நிகழ்வுகள் நடத்தப்படுதவற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. "பாடசாலை வளாகத்தில் பொது நிகழ்வு நடத்தப்படுவதும் அதற்கு மாணவர்கள் அழைக்கப்படுவதும் நிறுத்தப்பட வேண்டும்"- என்று தெரிவித்தார் சங்கத்தின் பொதுச் செயலாளர் யோசப் ஸ்ராலின்.

வட மாகாண அதிகாரிகளுக்கான கூட்டம் நேற்று முன்தினம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம் பெற்றதை சுட்டிக் காட்டிய ஸ்ராலின், நூற்றுக்கும் மேற்பட்ட அதிகாரிகளாலும், அவர்களது வாகனங்களாலும் பாடசாலை வளாகம் நிறைந்திருந்தது. இதனால் மாணவர்களது கல்வி பாதிப்படைகின்றது. வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியினா லேயே பாடசாலை மண்டபங்கள் இவ்வாறு முறை கேடாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவை தவிர்க்கப்படவேண்டும்."- என்றார்.

விடுமுறை தினங்களில் ஆசிரியர்களுக்கு கருத்தரங்குகள் செயலமர்வுகள் நடத்தப்படுகின்றமையும் நிறுத்தப்படவேண்டும் என்றும் அவர் கூறினார். இதனால் ஆசிரியர்களுக்கு ஓய்வுகிடைக்காமல் போவதுடன், கற்பித்தல் செயற்பாடுகளும் பாதிப்படைகிறது எனவும் அவர் குறிப்பிட்டார். (உ-3)

# நிகழ்வுகள் இன்று

### செயலமர்வுகள்

சாவகச்சேரி, மார்ச்.1

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆலோசனை வழிகாட்டல் வழங்கல் ஆசிரியர் ஆகியோருக்கான சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல் தொடர்பான 'பாதுகாப்பாக இருப்போம்' பற்றிய விழிப்புணர்வு செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறும்.

செயலமர்வில் கனேடிய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் கருத்துரை வழங்கவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(வ-9)

* * *

கல்வியமைச்சின் வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவும் கனேடியன் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து வடமராட்சிக் கல்வி வலயத்தில் நடைமுறைப்படுத்தவுள்ள "பாதுகாப்பாக இருப்போம்" 5-9 வயதுக்கான தனித்துவ சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டச் செயலமர்வு புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் அமைந்துள்ள ஆசிரிய நிலையத்தில் இன்று நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களையும் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்களையும் தவறாது பங்குபற்றுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார்.

(வ)

### ஆண்டு நிறைவு விழா

சாவகச்சேரி, மார்ச்.1

புத்தூர் கிழக்கு சரஸ்வதி சன சமூகநிலைய முதலாம் ஆண்டு நிறைவு விழா பிற்பகல் 2 மணிக்கு மேற்படி நிலையத்தினூடான சமூக முன்னெடுத்தல் குழுத் தலைவர் திருமதி தர்ம ராஜா சறோஜினி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் கலந்துகொள்வார்.

(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவரங்களைத் திரட்டும் இராணுவத்தினர்

**பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு, மக்கள் மீளக்குடியமர்ந்த நிலையில் இவ்வாறான பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

முல்லைத்தீவு, மார்ச் 1

முல்லைத்தீவுப் பகுதியில் வீடு வீடாக இராணுவத்தினர் குடும்ப விவரங்களைத் திரட்டி வருவதுடன் ஒளிப்படங்களும் எடுத்து வருகின்றனர்.

முல்லைத்தீவு நகரில் மக்கள் மீளக்குடியமர்ந்து இரண்டு ஆண்டுகளாகி விட்டன. இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்த போது, இராணுவத்தினர், பொலிஸார், இராணுவப் புலனாய்வாளர்கள், கடற்படையினர் ஆகியோர் மேற்படி குடும்பங்களின் பதிவுகளை மேற்கொண்டதுடன் ஒளிப்படங்களையும் எடுத்திருந்தனர்.

இந்த நிலையில் தற்போது வீடு வீடாகச் செல்லும் இராணுவத்தினர் குடும்ப விவரங்களைத் திரட்டி வருவதுடன், குடும்ப உறுப்பினர்களைத் தனித்தனியாகவும் குடும்பமாகவும் ஒளிப்படங்களை எடுத்து வருகின்றனர்.

சில இடங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு, மக்கள் மீளக்குடியமர்ந்து இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில், இவ்வாறான பதிவுகள் தம்மை மிகவும் சிரமத்துக்கு உள்ளாக்கி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

## கிளிநொச்சியின் சில பகுதிகளில் வீடு வீடாகச் சோதனை

அக்கராயன்,மார்ச் 1

கிளிநொச்சி மாவட்டத்தின் சில பகுதிகளில் நேற்று வீடு வீடாகச் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

அண்மையில் ஸ்கந்தபுரம், யூனியன் குளம் ஆகிய இடங்களில் ஆயுத முனையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களின் எதிரொலியாகவே இந்தச் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாகனங்களில் வந்த இராணுவத்தினரும், பொலிஸாரும் காலை வேளையில் இந்தச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

வன்னேரிக்குளம், அக்கராயன் மத்தி, ஸ்கந்தபுரம், கோணாவில் யூனியன்குளம் ஆகிய இடங்களில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோதும் எவரும் கைது செய்யப்படவில்லை.

ஆனால் மக்களிடையே பதற்ற நிலை காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. பொலிஸார் மோப்ப நாய்களின் உதவியுடன் கொள்ளையர் தொடர்பான தடயங்களைக் கண்டு பிடிப்பதில் ஈடுபட்டதையும் அவதானிக்க முடிந்தது.

கொள்ளையர்கள் இராணுவத்தினர் பயன்படுத்தும் நவீன ரகத் துப்பாக்கிகளை வைத்திருந்ததாகக் கூறப்படுவதால், தேடுதல் வேட்டைகள் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது. (க-18)

## கமக்கார அமைப்பின் நிர்வாகக் கூட்டம்

கிளிநொச்சி,மார்ச் 1

கிளிநொச்சி திருவையாறு ஏற்று நீர்ப்பாசன கமக்கார அமைப்பின் நிர்வாகக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

திருவையாறு முதலாம் பகுதி பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு திருவையாறு ஏற்று நீர்ப்பாசன கமக்கார அமைப்பின் தலைவர் சு.கதிர்காமநாதன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

இதில் திருவையாறு முதலாம் பகுதி, இரண்டாம் பகுதி, மூன்றாம் பகுதி மகளிர் திட்டம் ஆகியவற்றுக்கு ஏற்கனவே இருந்த ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கை விடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு அதுவரையான காலத்தில் சிறுபோகச் செய்கைகளை மேற்கொள்ள வழிவகை செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்வது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (க-6)

## விலையுயர்ந்த மரங்கள் தென்பகுதிக்கு

**சட்ட விரோதமான முறையில் மரங்கள் வெட்டி அகற்றப்படுகின்றமைக்கு எவ்வித தடையும் விதிப்பதில்லை. இங்குள்ள காணிகளைச் சட்டவிரோதமான முறையில் அபகரிப்பதற்காகவே இந்த நடவடிக்கை.**

சன்னார், மார்ச் 1

மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சன்னார் கிராமத்தில் வெற்றுக்காணிகளில் உள்ள விலையுயர்ந்த மரங்கள் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்டுத் தென்பகுதிக்குக் கொண்டு செல்லப்படுவதாகத் தெரிய வருகின்றது.

சன்னார் கிராமத்தில் தமிழ் மக்கள் குடியமர்வு செய்யப்பட்டுள்ள பகுதிக்குப் பின்புறம் உள்ள காணியில் விலையுயர்ந்த காட்டு மரங்கள் காணப்படுகின்றன.

இந்த மரங்களைத் தனிப்பட்ட சிலர், சில அதிகாரிகளின் ஆதரவுடன் கனரக வாகனங்கள் மூலம் வெட்டி அகற்றி வருகின்றனர். வெட்டப்படுகின்ற மரங்கள் வாகனங்களில் ஏற்றப்பட்டு வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

இந்தப் பகுதியில் இராணுவத்தினர் உள்ள போதும் சட்ட விரோதமான முறையில் மரங்கள் வெட்டி அகற்றப்படுகின்றமைக்கு எவ்வித தடையும் விதிப்பதில்லை. இங்குள்ள காணிகளைச் சட்டவிரோதமான முறையில் பெற்றுக்கொள்ளுவதற்காகவே, அந்தப் பகுதியில் உள்ள மரங்கள் வெட்டப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வனத்துறையினரின் அனுமதியின்றிக் குறித்த பகுதியில் உள்ள விலையுயர்ந்த மரங்கள் வெட்டப்படுகின்ற போதும், அங்குள்ள படையினரும் அரச அதிகாரிகளும் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல், அவர்களுக்குத் துணைபோவதாக அங்கு வசிக்கும் மக்கள் விசனமும், கவலையும் தெரிவிக்கின்றனர். (க-12)



குமுழமுனையிலுள்ள பாடசாலையொன்றின் துப்புரவுப் பணிகளில் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலாரும் இணைந்து ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். (435)

## திருவையாறில் பொதுச் சந்தை

கிளிநொச்சி,மார்ச் 1

கிளிநொச்சி திருவையாறுப் பகுதியில் சந்தை ஒன்று அமைக்கப்பட வேண்டுமெனப் பலதரப்புக்களாலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி திருவையாறுப் பகுதியில் கடந்த 1960 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆனால் இந்தப் பகுதியில் இன்று வரை பொதுச் சந்தை ஒன்று ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தப் பகுதிக்குத் தனியான சந்தை ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனப் பலதடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதும் இதுவரை பொதுச் சந்தை அமைக்கப்படவில்லை.

திருவையாறு கனகாம்பிகை அம்பாள் ஆலயத்துக்கு முன்பாகப் பொதுத் தேவைகளுக்கு என ஒன்பது ஏக்கர் காணி உள்ளதாகவும் இதில் பொதுச் சந்தையை அமைக்க வேண்டும் எனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## குறைபாடுகளுடன் நிறைவான சேவையை வழங்கும் பொது நூலகம்

துணுக்காய்,மார்ச் 1

மல்லாவி பொது நூலகம் வசதி குறைவுகளுக்கு மத்தியில் ஓரளவு சிறப்பான சேவையை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நூலகத்துக்கு அவசியம் தேவையான மலசலகூடவசதி, குடிதண்ணீர் வசதி, தொலைபேசி மற்றும் கணினி வசதிகள் இதுவரையில் ஏற்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் இங்கு உள்ள சுமார் 5 ஆயிரம் நூல்கள் சர்வதேச நியம விதிகளின் பிரகாரம் விடயவாரியாக ஒழுங்குபடுத்தப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் இலங்கையில் வெளிவரும் சகல மொழி தினசரிப் பத்திரிகைகளும் இந்த நூலகத்தில் வாசகர்கள் அனைவரதும் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

சிறுவர்களை மகிழ்வூட்டும் வகையில் தொலைக்காட்சி நிகழ்வுகளும் இங்கு இடம் பெறுகின்றன. விஞ்ஞானம் மற்றும் துறைசார் பாடவிதான நூல்கள் குறைந்த அளவிலேயே இங்கு உள்ளதாக வாசகர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் வாராந்த, மாதாந்த சஞ்சிகைகளும் இந்த நூலகத்தில் இல்லாமை குறிப்பிடத்தக்கது. இருந்த போதிலும் மாணவர்கள், ஆசிரியர்கள், அரச அலுவலர்கள், பொது மக்கள், பாதுகாப்புத் தரப்பினர் எனப் பலரும் இந்த நூலகத்தைப் பயன்படுத்தி வருகின்றமைசிறப்பம்சமாகஉள்ளது.

பிரதம நூலகர் வே.லவேந்திரா பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட பின்னர் நூலகச் செயற்பாடுகளில் முன்னேற்றம் காணப்படுவதாகவும் வாசகர்களால் தெரிவிக்கப்படுகின்றது. (க-415)

## 12 மாணவர்களுடன் இயங்கும் பாடசாலை

நெடுங்கேணி,மார்ச் 1

12 மாணவர்களுடன் இந்தப் பாடசாலை இயங்கி வருகின்றபோதிலும் எமது பாரம்பரியத்தை இன்றைய நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வாறு நெடுங்கேணிப் பிரதேசம் கற்குளம் கிராம சேவகர் பிரிவிலுள்ள அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போது வவுனியா வடக்குக் கல்வி வலயத்தைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் தி.இ.இந்திரராஜா குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் ஆரம்பித்து நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:

1946 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்திலிருந்து குறைந்தளவு மாணவர்களுடன் ஒரு கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது. தற்போது 12 மாணவர்களுடன் இந்தப் பாடசாலை இயங்கி வருகின்றது. ஆனால் இன்றைய நிகழ்வுகள் எமது பாரம்பரியத்தை நினைவு கூரும் வகையில் அமைந்திருந்தன.

மேலும் மாணவர்களை விட பெற்றோர்கள் இந்த நிகழ்வில் அதிகளவில் கலந்து கொண்டு சிறப்பித்தமை மனதுக்கு மகிழ்ச்சியளிக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பாடசாலையில் தரம் ஐந்து வரையான வகுப்புக்களே இடம்பெற்று வருகின்றன. அதிபரே சகல கற்றல் செயற்பாடுகளிலும் தனி ஒருவராக ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-435)

## கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு 50 லட்சம் ரூபா செலவில் சுற்றுமதில்

கிளிநொச்சி,மார்ச் 1

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு 50 லட்சம் ரூபா செலவில் சுற்றுமதில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி சேகரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 1985 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகப் போர் அனர்த்தங்களைச் சந்தித்த ஒரு பாடசாலையாகக் கிளிநொச்சி மத்திய கல்லூரி காணப்படுகின்றது. இவ்வாறு கிளிநொச்சி மத்திய கல்லூரியின் அதிபரும் மேற்படி பாடசாலையின் பழைய மாணவருமாகிய மு.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு ஆயிரத்து 3[illegible] அடி நீளமான முன்பக்க மதிலை அமைப்பதற்குப் பழைய



மாணவர் சங்கத்தால் நிதி சேகரிக்கும் ஆரம்ப நிகழ்வு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கல்லூரியின் முதல்வர் மு.ரவீந்திரன் தலைமையில் கடந்த 2[illegible] ஆம் திகதி இடம்பெற்றது.

அதிபர், அங்கு தலைமையுரையாற்றும் போது இந்தப் பாடசாலையானது நூற்றாண்டு விழாவைக் காணுகின்ற ஒரு கல்லூரியாக உள்ளது.

கடந்த 1984 இற்குப் பின்னர் தொடர்ச்சியாகப் பல இழப்புக்களை எதிர் கொண்ட ஒரு கல்லூரியாகவும் விளங்குகின்றது. இருந்த போதும் வருடாந்தம் 40 மாணவர்களை உயர் கல்விக்கு அனுப்பி வருகின்றது.

அத்துடன் இந்த மாவட்டத்தின் அறுபது வீதமான புத்திஜீவிகளையும் அறிவியலாளர்களையும் உருவாக்கியுள்ளது. இன்று இந்தக் கல்லூரி சிதைந்து கிடக்கின்ற ஒரு நிலையைத் தினமும் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். தற்போது தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் வாழுகின்ற பழைய மாணவர்களின் நிதியைத் திரட்டி அதன் மூலம் இந்தச் சுற்றுமதிலை அமைக்கும் தீர்மானத்தை இன்று எடுத்துள்ளோம், என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


கிளிநொச்சி மத்திய கல்லூரி மற்றும் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆரம்பப்பாடசாலை ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் ஆயிரத்து 350 அடி நீளமான மதிலை அமைப்பதற்குத் தற்போது 50 லட்சம் ரூபா நிதி தேவையெனவும் இதற்கான நிதியை இலங்கையில் வசிக்கும் பழைய மாணவர்களிடமும், வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்களிடமும் திரட்டுவது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டு, அதன்படி நிதிதிரட்டும் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றுள்ளது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வில்லங்கத்துக்காக நடக்கிறோம்....







நல்லூர் பிரதேச செயலரும் ஊழியர்களும் பதாகைகளைத் தாங்கியபடி ஆலயத்துக்கு ஊர்வலமாகச் செல்வதையும் ஜனாதிபதிக்கு ஆசி வேண்டி அரச அதிபர் ஆலயத்தில் பூசை வழிபாட்டில் ஈடுபட்டிருப்பதையும் ஊழியர்கள் அனைவரும் போராடப் போய்விட்டதால் வெறிச்சோடிக் கிடக்கும் நல்லூர் பிரதேச செயலகத்தையும் படங்களில் காணலாம்.

# மேலிடத்துக்குப் பயந்து அதிகாரிகள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

ஜெனிவாவில் இலங்கை மீது கொண்டுவரப்படவுள்ள பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவும் ஆசியும் வேண்டியும் யாழ். மாவட்டத்திலுள்ள அரச அதிகாரிகள் நேற்று ஆலயங்களில் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

நல்லூர், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவு அதிகாரிகளும் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனை அதிகாரிகளும் சுலோகங்களைத் தாங்கியபடி ஊர்வலமாக கோயில்களுக்குச் சென்றனர்.

பொதுநிர்வாக அமைச்சின் வற்புறுத்தலை அடுத்தே இது நடைபெற்றது.

நெடுந்தீவு பிரதேச செயலர் தலைமையில் சந்தையடியில் இருந்து பிரதேச செயலகம் பிரதேச சபை மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் பொது மக்களும் கலந்து கொண்டு அரசுக்கு ஆதரவான கோஷங்கள் எழுப்பிச் சென்றனர் என்று எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.





யாழ்.மாவட்டச் செயலக அரச ஊழியர்கள் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் மாவட்ட செயலகத்திலிருந்து அரச வாகனங்களில் புறப்பட்டுக் கச்சேரி நல்லூர் வீதியில்அமைந்துள்ள மூத்த விநாயகர் கோயிலுக்கு சென்றனர்.

''ஜனநாயகத்தையும் மனித உரிமையையும் பாதுகாப்போம்'', ''இலங்கையின் சுதந்திரம், இறைமையில் கைவைக்க வேண்டாம்'' என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கிப் பிடித்துக்கொண்டு கோயிலுக்கு முன்பாக நின்றனர். அரச அதிபர் மற்றும் ஒரு சில அதிகாரிகள் மட்டும் கோயிலினுள் சென்று பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

''தமிழர்களுக்கு ஆசி வேண்டியே அரச அதிபரால் அர்ச்சனைத் தட்டு கோயில் பூசாரியிடம் கொடுக்கப்பட்டது.

பெரும்பாலான அரச உத்தியோகத்தர்கள் கட்டாயத்தின் பேரில் வேண்டா வெறுப்பாகவே இதில் கலந்து கொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

அத்துடன் சகல இடங்களில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளையும் புகைப்படமெடுத்து அனுப்புமாறு பிரதேச செயலர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

''காலையில் பிரதேச செயலர் எம்மை அழைத்து மேலிடத்து உத்தரவு என்பதால் எந்த எதிர்க்கருத்துகளும் இன்றி அனைவரும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினார். கட்டாயம் இதனைச் செய்ய வேண்டும் என்றும் இதற்கு எதிராக தம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்றும் எம்மிடம் தெரிவித்தார்.'' என்று அரச ஊழியர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். அவரது கூற்றை நூற்றுக் கணக்கான பணியாளர்களும் அதிகாரிகளும் உறுதிப்படுத்தினர். (உ-5)

## முன்னறிவிப்பற்ற மின்தடையால் பெரும் துன்பத்தில் யாழ்.மக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ். குடாநாட்டில் வீதித்திருத்த வேலைகளுக்காக முன்னறிவித்தலுடன் மின்சாரம் நிறுத்தப்படுகின்ற போதும், முன்னறிவித்தல் இல்லாமலும் பல வேளைகளில் மின் தடை நடைமுறைப்படுத்தப்படுவதாக மக்கள் குறை கூறுகின்றனர். இதனால் தமது அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிப்படைவதாகவும் கூறுகின்றனர்.

தற்போது யாழ்.குடாநாட்டின் பிரதான வீதிகள் நான்கிலும் வீதி அகலிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் வீதிக் கரையில் அமைக்கப்பட்டிருந்த மின் கம்பங்களை மாற்றி பின்னோக்கி நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக இலங்கை மின்சார சபையினால் முன்னறிவித்தலுடன் காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை மின் தடைப்பட்டிருக்கும். மாலை 5 மணிக்கு மின்சாரம் கிடைக்கும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தாலும் இரவு ஏழு மணியளவிலேயே மின்சாரம் வழங்கப்படுகின்றது.

சரியான நேரத்துக்கு மின் தடை நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதும் உரிய நேரத்துக்கு மின்சாரம் மீண்டும் வழங்கப்படுவதில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

இதனைவிட முன்னறிவித்தல் வழங்கப்படாத நாள்களில் மின்சாரம் நிறுத்தப்படுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மண்ணெண்ணையின் விலையேற்றத்துக்கு மத்தியில் மின் தடையும் தொடர்வதால் சிரமம் இரட்டிப்பாகின்றது என்கின்றனர் மக்கள். திடீர் மின் தடை நாள் முழுவதும் அமுலில் இருப்பதால் பொதுமக்களின் அன்றாடச் செயற்பாடுகளும், சிறு தொழில் முயற்சியாளர்களும் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக சுன்னாகம் மின்சார நிலையப் பொறியியலாளரிடம் கேட்டதற்கு ''எமக்கு அறிவிக்கப்படும் பிரதேசங்களையே மின்தடைக்கான முன்னறிவித்தலில் வழங்குகின்றோம். முன்னறிவித்தல் இல்லாமல் மின் தடை ஏற்படுவது தொடர்பில் எமக்கு எதுவும் தெரியாது'' என்றார்.

அண்மையில் யாழ். மாவட்டத்துக்கு வந்திருந்த மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க, மின்தடை பற்றி ஊடகங்களில் முன்னறிவித்தல் வழங்குவதுடன் மின் தடைக்கு உள்ளாகும் பிரதேசங்களில் அதுபற்றி ஒலிபெருக்கி மூலம் அறிவிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார். (உ-5)

## பனம் தொழில்நுட்பம் இந்தியாவுக்கு ஏற்றுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாணத்தில் இருந்து பனம் கைத் தொழில்நுட்பம் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

இதற்கென இந்தியாவில் இருந்து 5 பேர் கொண்ட குழு நேற்று இங்கு வந்து சேர்ந்தது.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த செ.நல்லசாமி என்பவரின் தலைமையிலான குழுவே யாழ்ப்பாணம் வந்து பனம் பொருள் உற்பத்தி நுட்பத்தைப் பார்வையிட்டு வருகின்றனர்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினத்தைச் சந்தித்துக் கலந்துரையாடிய இந்தியக் குழு, யாழ்ப்பாணத்தில் உள்ள பனம் பொருள் உற்பத்தி நிலையங்களுக்கும் நேரில் சென்றனர். பனம்பொருள் உற்பத்திகளின் தராதரத்தை அறிவதற்கே இந்தக் குழுவினர் யாழ்ப்பாணம் வந்ததாகப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் தெரிவித்தார். (உ-03)

**ஈரோடு விவசாய சம்மேளனக் குழுவே யாழ். வந்து பனம் பொருள் உற்பத்தி நுட்பத்தை பார்வையிடுகிறது.**

## நாகர் கோயில் கிழக்கில் கண்ணி அகற்றல் பூர்த்தி

யாழ்ப்பாணம், மார்ச் 1

நாகர்கோயில் கிழக்குப் பகுதியில் முழுமையாக வெடிபொருள்கள் அகற்றி முடிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் வ.முருகதாஸ் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு உட்பட்ட நாகர் கோயில் கிழக்குப் பகுதி மிக நீண்ட காலம் யுத்தம் இடம் பெற்ற பகுதி. இந்தப் பகுதியில் அதிகளவான வெடி பொருள்கள் புதைக்கப்பட்டிருந்தன.

கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் இந்தப் பகுதியில் 'ஹலோட்ரஸ்ட்' கண்ணி வெடி அகற்றும் பிரிவு பணிகளை ஆரம்பித்திருந்தது. இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுக் கண்ணி வெடி அகற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

98.565 சதுர கிலோ மீற்றர் பரப்பு ஒரு பகுதியாகவும் 80.631 சதுர கிலோமீற்றர் பரப்பு இன்னொரு பகுதியாகவும் பிரிக்கப்பட்டுக் கண்ணி வெடி அகற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது 9 ஆயிரத் 202 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இதில் தனிநபர் எதிர்ப்பு மிதிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடி பொருள்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன என்றார்.

இந்தப் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி கண்ணிவெடிகள் அகற்றி முடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## காசு உண்டு; காணிதான் இல்லை அல்லாடும் சுகாதார அலுவலகம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுவிட்ட போதும் காணி இல்லாததன் காரணத்தால் நிரந்தர அலுவலகத்தை அமைக்க முடியாது அல்லாடுகின்றனர் அதிகாரிகள்.

''விரைவில் பொருத்தமான காணியைத் தேடி பணிகளை ஆரம்பிக்கவில்லையாயின் நிதி திரும்பிவிடும்'' என்று அச்சம் தெரிவித்தார் நல்லூர் வைத்திய அதிகாரி மருத்துவர் கே.ரி.சிவபாதம்.

கட்டடம் அமைப்பதற்கென ஒதுக்கப்பட்ட நிதியில் காணி கொள்வனவு செய்ய முடியாது என்பதால் யாராவது காணியை அன்பளிப்புச் செய்ய வேண்டும் அல்லது அரச காணி ஒதுக்கப்பட வேண்டும். கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலிப் பகுதிகளில் பொருத்தமான அரச காணிகள் ஏதும் இல்லை என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதனால் நிதியை எவராவது காணியை அன்பளிப்புச் செய்தால் அல்லது நிதி திரட்டிப் பொருத்தமான காணியைக் கொள்வனவு செய்தால் மட்டுமே நிரந்தரக் கட்டடத்தை அமைக்க முடியும் என்று சுகாதாரத் துறை அதிகாரிகள் சுட்டிக் காட்டினர்.

ஒதுக்கப்பட்ட நிதி, இந்த வருட இறுதிக்குள் திரும்பிவிடும் என்பதால் விரைந்து நடவடிக்கை எடுப்பது அவசியம் என்று மருத்துவர் கே.ரி.சிவபாதம் தெரிவித்தார். (உ-01)

### பங்குச் சந்தை நிலவரம்

COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம், 398/1, ஆஸ்பத்திரி வீதி, 2221455.

மாசி 29, 2012

பங்குச்சந்தை விலைச்சுட்டிகள்
அனைத்துப்பங்குச் சுட்டி(ASPI) 5458.09↑
மிலங்கா சுட்டி (MPI) 4751.06↑
உரிமை முதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1,679.73 Mn
பங்குகளின் அளவு (No.) 26.00 Mn
வியாபாரம் (No.) 6,004
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers) விலை Rs.
சிகிரியா விலேஜ் - 114.00
ஏ.ஏம் லைபனான்ஸ் - 400.00
ஈ.பீ கிரேசி 1000.00
செரன்டிவ் லான்ட் - 2330.00
செலான் மேச்சன் X - 0.50
குறைவு(Top 5 losers) - விலை Rs.
பேறுவல இன் - 114.00
சிலோன் வுறுவரி - 310.00
அக்மி - 23.50
டெடன்ஸ 69.10
ஏசியஸ் பிலாஸ்ரிக் - 105.10
மேலதிக தகவல்கள்- www.cse.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் உரிமைப் போருக்கு பலம் கூட்டச் சேர்ந்து வாருங்கள்

## பரு. பிரதேச சபை உபதலைவர் அறைகூவல்

வடமராட்சி, மார்ச் 1

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திவரும் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்துக்கு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து பலம் சேர்க்க வேண்டும் என பருத்தித் துறைப் பிரதேச சபையின் விசேட கூட்டத்தில் பேசிய உபதலைவர் மா. லோக சிங்கம் கூறினார்.

சபைத் தலைவர் பொ. சஞ்சீவன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் கூறிய தாவது:

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் ஆதரவளித்து எம்மை இந்தச் சபைக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். தமிழ் மக்களுக்கான உரிமைப் போரை முன்னெடுக்க வேண்டும் என்பதற்காகவே மக்கள் எங்களைத் தெரிவு செய்துள்ளார்கள்.

**எமது உரிமைப் போராட்டத்துக்கு பங்கம் விளைவிக்காத வகையிலும் மக்களின் ஆதரவை பிரதிபலிக்கக் கூடியதாகவும் உறுப்பினர்கள் நடந்துகொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பலம் சேர்க்க வேண்டும்.**

எமது உரிமைப் போராட்டத்துக்கு பங்கம் விளைவிக்காத வகையிலும் மக்களின் ஆதரவை பிரதிபலிக்கக் கூடியதாகவும் உறுப்பினர்களாகிய நாம் நடந்துகொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பலம் சேர்க்க வேண்டும்.

அரச ஊழியர்கள் விடயத்தில் நாம் தலையிடக் கூடாது. அவர்களுக்கும் பல துன்பங்கள், மன உளைச்சல்கள் இருக்கக் கூடும். அவர்களின் சுய கௌரவத்துக்கு உறுப்பினர்களாகிய நாம் இடையூறாக இருக்கக் கூடாது. அவர்களை நாம் அழைத்துச் செல்ல வேண்டும்.

மக்கள் எங்களைத் தெரிவு செய்துள்ளார்கள். அவர்களின் பிரச்சினைகளையே நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்தச் சபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அனைவருமே தலைமைக்குப் பொருத்த மானவர்கள்தான். அதற்குரிய சக்தி எமது உறுப்பினர்கள் அனைவருக்கும் உண்டு. தலைவரைவிட இந்தச் சபைக்குத்தான் அதிகாரம் அதிகம் இருக்கிறது. ஏனைய சபைகளுக்கு முன் மாதிரியாக இந்தச் சபை அமைய வேண்டும். அதற்கேற்றவாறு நாம் சபையை நடத்துவோம்- என்றார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் எம். மணிதரன் பேசுகையில், சபைக்குத் தெரியாமலேயே சில அலுவல்கள் நடைபெறுகின்றன என்றார். ''ஆட்டிறைச்சிக் கடை, மாட்டிறைச்சிக்கடை விவகாரம் போல் மருதங்கேணி அலுவலக நடைமுறைகளும் எமக்குத் தெரியாமலேயே நடைபெற்றுள்ளன. சபையினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சபை உறுப்பினர்களுக்குத் தெரிய வேண்டும்'' என்றார்.

ஆளும் தரப்பைச் சேர்ந்த எஸ்.தவயோகநாதன், ''உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வந்து சில அலுவல்களை நிறைவேற்றியுள்ளார். அதனை முன்கூட்டியே நாம் செய்தாலென்ன?'' எனக் கூறி கேள்வி எழுப்பினார். (உ-8)

### சிறுவர் துஷ்பிரயோக சந்தேக நபருக்கு பிணை

யாழ்ப்பாணம், மார்ச்.1

13 வயதுச் சிறுவனை பாலியல் ரீதியில் துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் மூன்று மாதங்களாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த குடும்பஸ்தர் யாழ். நீதிமன்றால் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த வழக்கு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ். பொலிஸ் நிலைய சிறுவர், பெண்கள் பிரிவுப் பொலிஸார் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

யாழ்.நகரில் பணியாற்றி வந்த கொழும்பு, கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த சுமார் 48 வயதுடைய குடும்ப நபர் கடையில் பொருள் வாங்க வந்த 13 வயதுச் சிறுவனை பாலியல் ரீதியில் துன்புறுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அவர் மூன்று மாதங்களாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார். நேற்றுமுன்தினம் ஐயாயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியாக இரு ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டார்.

இந்த வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக இரண்டு வாரங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (உ-4)

### மாத நடுப்பகுதியில் யாழ்.வருகிறார் ரணில்

யாழ். மாவட்டத்துக்கு இந்தமாதம் நடுப்பகுதியில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருகை தரவுள்ளனர்.

இந்தமாதம் 16 ஆம் திகதி மற்றும் 17ஆம் திகதிகளில் இவர்கள் வருவர் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். குடாநாட்டில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளுக்கு நேரடியாகச் செல்லும் இந்தக் குழுநிலைமைகளை நேரடியாகப் பார்வையிடும்.

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் செல்லும் திட்டத்தைக் கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஒவ்வொரு தொகுதிகளுக்கும் உரிய அமைப்பாளர்களையும் நியமிக்கவுள்ளார் என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (உ- 5)



இராணுவத்தின் வடபகுதிக் கட்டளைப் பீடத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'யாழ்' என்ற ஒளிப்படக் கண்காட்சி நிகழ்வு யாழ்.பொது நூலகத்தில் நடைபெற்றது. முதல்நாள் நிகழ்வில் கலந்துகொண்ட நல்லை ஆதீன குரு முதல்வரும் யாழ்.நாகவிகாரை பீடாதிபதியும்.

### பளையில் 4 வீதிகளை திருத்த ரூ.33 மில்லியன்

பளைப் பிரதேசத்தில் சேதமடைந்த நிலையிலுள்ள வீதிகள் 33.7 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட இருக்கின்றன. இதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து அடுத்த மாதம் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

போரால் இந்தப் பிரதேசத்தில் இருந்து வெளியேறிய மக்கள் சமாதான சூழ்நிலையைத் தொடர்ந்து, சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்துள்ளனர். சேதமடைந்த அரச திணைக்களங்களின் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவருகின்றன. அடுத்த கட்டமாக, சேதமடைந்த நிலையிலுள்ள வீதிகளைப் புனரமைப்பதில் பிரதேச சபை ஈடுபட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியுடன் 33.7 மில்லியன் ரூபா இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. சுமார் 5 கி.மீ நீளத்துக்கு உட்பட்ட நான்கு வீதிகள் இந்த நிதியிலிருந்து புனரமைக்கப்படவுள்ளன.

1.2கி.மீ நீளமான புலோப்பளை கிழக்கு, முல்லையடி வீதி 7.9 மில்லியன் ரூபாவிலும், 1.32 கி.மீ நீளமான புலோப்பளை- அல்லிப்பளை வீதி 8.4 மில்லியன் ரூபாவிலும், 1.3 கி.மீ நீளமான மாசார் பாடசாலை வீதி 8.7 மில்லியன் ரூபா செலவிலும் 1.35 கி.மீ நீளமான முகாவில் வீதி 8.7 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன. (உ-115)

### நவீன தவறணை விரைவில்

யாழ்ப்பாணம், மார்ச்.1

பிரதேச செயலக பிரிவு ரீதியாக நவீன முறையில் மெருகூட்டப்பட்ட கள்ளுத் தவறணைகள் அமைக்கும் திட்டம் தம்மிடம் உள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவ:-

கிராமங்களின் மூலை முடுக்குகளிலுள்ள பாரம்பரிய முறையிலான கள்ளுத் தவறணைகளை அகற்றுமாறு மக்கள் வலியுறுத்தி வருகின்றனர். கிராமத்துக்கு அநாகரிமாக இருக்கிறது எனவும் கள்ளு அருந்த வருபவர்கள் அநாகரிகமாக நடந்து கொள்கின்றனர் எனவும் பொதுமக்களிடமிருந்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே கிராமங்களில் இருக்கும் கள்ளுத் தவறணைகளை தற்போதுள்ள நிலையிலிருந்து மாற்றியமைக்க வேண்டியுள்ளது. அத்துடன் கள்ளு விற்பனைக்கான நிலையமாக அவற்றைத் தரமுயர்த்த வேண்டியுள்ளது.

பிரதேச செயலக ரீதியாக நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட மெருகூட்டப்பட்ட கள்ளுத் தவறணைகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த வருட இறுதிக்குள் நவீன முறையில் அமைக்கப்பட்ட நிலையத்தில் கள்ளு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது - என்றார். (உ-03)

## வாழ்வெழுச்சித் திட்டம் நேற்று முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச். 1

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 'வாழ்வெழுச்சி' வேலைத்திட்டத்தின் ஊடாக வீட்டுக்கு வீடு தேசிய வேலைத் திட்டம் நேற்று முதல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சகல நிரந்தர குடியிருப்பாளர்களிடமிருந்தும் மனைப்பொருளாதாரத்துக்கான திட்டமிடல்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

'வாழ்வெழுச்சி' தேசியவேலைத் திட்டத்தின் வீட்டுப்பொருளாதார அலகைத் திட்டமிடும் பொருட்டு மாவட்டத்தில் வசிக்கும் சகல நிரந்தர குடியிருப்பாளர்களது வீடுகளுக்கும் திவிநெகும வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் நேரடியாகச் செல்லவுள்ளனர். வீட்டை பொருளாதார உலகமாக திட்டமிடுவதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை அவர்கள் வழங்குவர்.

வீட்டுத்தோட்டத்தை திட்டமிடுதல், விதைகளில் மீன் வளர்த்தல், ஏற்றுமதிக்கான மலர்ச்செய்கை, அபிவிருத்திக்கான முன்னேற்றங்களை அடையாளம் காணல், டெங்கு நிவாரணம் குறித்து மக்களைத் தெளிவுபடுத்துதல், கழிவு முகாமைத்துவம், வணிக ரீதியான பயிர் அபிவிருத்தி, மேலதிக வருமான மூலங்களை அறிமுகப்படுத்தல் வீட்டுக் கைத்தொழிலுக்கான சந்தர்ப்பங்களை அறிமுகப்படுத்தல், கால்நடை வள அபிவிருத்திச் சந்தர்ப்பங்களை அறிமுகப்படுத்தல், பண்ணை மீன் வளர்ப்பு போன்றவற்றில் கூடுதல் அவதானம் செலுத்தி அதிகாரிகள் ஆலோசனைகளை வழங்குவர். வீடுகளுக்கு வருகைதரும் அதிகாரிகளிடம் பொதுமக்கள் தங்கள் தேவைகளை தெரிவித்து மனைப் பொருளாதார அலகை சிறப்பாக திட்டமிட முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்த மாதம் 31 ஆம் திகதி வரையில் இந்தத் திட்டமிடல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. எதிர்வரும் 26 ஆம் திகதி வரையில் பிரதேச செயலக மட்டத்திலான ... பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு அது அனுப்பப்படவுள்ளது. (உ-5)

## சட்டம் தெரியாது என எவருமே கூறமுடியாது

### நீதிமன்றில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,மார்ச் 1

''ஒரு தவறைச் செய்துவிட்டு சட்டம் தெரியாது என எவரும் சொல்வதைச் சட்டம் ஏற்றுக்கொள்ளாது. எல்லோரும் சட்டத்தைத் தெரிந்து வைத்திருப்பது அவர்களது கடமை'' இவ்வாறு, அனுமதியின்றி கட்டடம் கட்டியமை தொடர்பான வழக்கு ஒன்றில் சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் சட்டத்தரணி அ.இராஜரட்ணம் சுட்டிக் காட்டியுள்ளார்.

**அனைவரும் சட்டத்தைத் தெரிந்து வைத்திருப்பது அவர்களது கடமை. ஒரு தவறைச் செய்துவிட்டு சட்டம் தெரியாது என்று யாரும் தெரிவிக்கக்கூடாது.**

யாழ்.மாநகரசபை எல்லையினுள் நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் முன் அனுமதி பெறாது கட்டடம் கட்டினார் என்ற குற்றச் சாட்டின் கீழ் நபர் ஒருவருக்கு எதிராக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பெப்ரவரி நடுப்பகுதியில் யாழ்.நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ்.மாநகர ஆணையாளர் சார்பாக ... உத்தியோகத்தர் ...கணேசலிங்கம் வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

குற்றஞ் சாட்டப்பட்டவர் தரப்பில் மன்றில் வாதாடிய சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம், சட்டம் பற்றிய முழுமையான அறிவின்மையால் இப்படி நடந்திருப்பதாகவும் அதனை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட நபருக்குப் போதிய கால அவகாசம் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, குற்றஞ் சாட்டப்பட்டவர் கட்டடத்தின் வரைபடத்தை நீதிமன்றில் சமர்ப்பிக்க கால அவகாசம் வழங்கி விசாரணையை அடுத்த மாதத்துக்கு ஒத்தி வைத்தார் நீதிவான். (உ-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பு புறக்கணிப்பு

## திட்டமிட்ட சதி என்கிறார் காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர்

அம்பாறை, மார்ச் 1

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அம்பாறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்ந்த பதவி நிலை முக்கியஸ்தர்கள் கலந்து கொள்வதற்கான அழைப்புகள் விடுக்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்ட இந்தக் கூட்டத்தில் மாவட்டத்திலுள்ள அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

**பிரதேச அபிவிருத்திக்கு நாம் ஒருபோதும் தடையாக இருக்கப்போவதில்லை. ஆனால் இத்தகைய புறக்கணிப்புகள், அரசே எம்மைப் பிரித்துவிடுவது போன்ற செயலாக அமைந்துள்ளது.**

இந்த மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கு இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பு அனுப்பப்படாதது திட்டமிட்ட புறக்கணிப்பு என்று காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் செல்லையா இராசையா கண்டனம் தெரிவித்தார்.

''பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நாம் ஒருபோதும் நடையாக இருந்ததில்லை. இருக்கப் போவதுமில்லை.

ஆனால் எமக்கு மட்டும் திட்டமிட்ட வகையில் இத்தகைய புறக்கணிப்புக் காட்டப்படுவது அரசே எம்மைப் பிரித்து விடுவது போன்ற செயலாக அமைந் துள்ளது. நாமும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தான்'' என்று அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு, நாவிதன்வெளி, ஆலையடிவேம்பு, திருக்கோயில் ஆகிய பிரதேச சபைகளின் ஆட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமிருப்பது குறிப்பிடத்தக்கது. (ச-30)

# மாணவிகளால் மீண்டும் வைக்கப்பட்டது சிலை



வெல்லாவெளி,மார்ச்.1

மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலையில் கடந்த 22 ஆம் திகதி வைக்கப்பட்டு சில மணித்தியாலங்களில் அகற்றப்பட்ட சரஸ்வதி சிலை மாணவிகளினால் கடந்த திங்கட்கிழமை மீண்டும் அங்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிலை முன்பு வைக்கப்பட்டபோது மட்டக்களப்பு மெதடிஸ்த திருச்சபையினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்துடன், குறித்த சிலையை அகற்றுமாறு கோரி மெதடிஸ்த ஆசிரியர்கள், மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

கடந்த 23ஆம் திகதி பொருளாதார அபி விருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மட்டு. வின்சன்ட் மகளிர் பாடசாலைக் கட்டடத் திறப்பு விழாவுக்கு வருகை தரவிருந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சிலை நிறுவுவது தொடர்பில் இறுதி முடிவு எடுப்பதற்கு ஒரு மாத கால அவகாசம் வழங்குமாறு கோரி மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் எம்.ரி.நிசாம் தெரிவித்தார்.

இதேவேளை, பாடசாலை முடிவடையும் நேரத்தில் மாணவிகளினால் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் அறையொன்றினுள் வைத்துப் பூட்டப்பட்ட நிலையில் முன்னர் சிலை வைக்கப்பட்டிருந்த அதே இடத்தில் சரஸ்வதி சிலை மீண்டும் வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பாடசாலை வளவுக்குள் எவரும் நுழைய அனுமதிக்காது நுழைவாயிலை மாணவிகள் பூட்டியதுடன், சிலை அகற்றப்படமாட்டாது என்ற உத்தரவாதம் அதிகாரிகளால் வழங்கப்பட்ட பின்னரே பாடசாலையின் நுழைவாயில் திறக்கப்படும் என்று தெரிவித்தனர்.

இந்தநிலையில், மட்டக்களப்புத் தலைமையகபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நவரட்ன பண்டார பாடசாலைக்குச் சென்று மாணவிகளுக்கு வழங்கிய உத்தரவாதத்தையடுத்து, நுழைவாயில் திறக்கப்பட்டதுடன் மாணவிகளும் பாடசாலையை விட்டு வெளியேறினர்.

இந்நிலையில் சிலைக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என மாணவிகள் விடுத்த கோரிக்கையை அடுத்து பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (ச)

# கல்முனையில் நவீன வசதிகளுடன் புதிய பஸ்நிலையம்

அம்பாறை, மார்ச் 1

கல்முனையில் பயணிகள் நலன்கருதித் தனியார் பஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

கல்முனைப் பிரதேசத்தில் பல்வேறு குறைபாடுகளுடனும், பயணிகளுக்கான வசதிகள் இன்றியும் தனியார் பஸ் நிலையம் இயங்கி வருகிறது.

இதன் அவல நிலையைத் தனியார் பஸ் உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எல்.துல்கர் நயீமின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இதன் பயனாக உறுப்பினர் துல்கர் நயீம் மாகாண போக்குவரத்து அமைச்சர் விமலவீர திஸநாயக்கவுடன் தொடர்பு கொண்டு நவீன வசதிகளுடன் கூடிய தனியார் பஸ் நிலையமொன்றை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

மாகாண போக்குவரத்து அமைச்சின் 30 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கல்முனையில் தனியார் பஸ் நிலைய நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் புதிய பஸ் நிலையம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாகக் கல்முனை மாநகர முதல்வர் கலாநிதி முஹமட் சிராஸ் மீராசாகிப் தெரிவித்தார். (ச-30)



எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து மக்கள் விடுதலை முன்னணியின் மாற்றுக் குழுவினர் கண்டியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மேற்குலகின் சதி முயற்சிகளை ஒன்றிணைந்து முறியடிப்போம்

## ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு

அம்பாறை,மார்ச்.1

எமது நாட்டின் நிரந்தர சமாதானத்தை சீர்குலைக்கும் மேற்குலக நாடுகளின் சதி முயற்சிகளை கட்சி பேதங்களுக்கப்பால் ஒன்றிணைந்து முறியடிப்போம் என்று அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பத்தொன்பதாவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவிருக்கும் மனித உரிமை மீறல்கள் குற்றப் பிரேரணையை எதிர்த்து அரசுக்கு ஆதரவாக கல்முனை மற்றும் சாய்ந்தமருதில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணிகளில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத்தால் வடக்குக் கிழக்கு மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது போர்ச் சூழ்நிலை நீங்கி இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் எமது மக்களை மீண்டும் ஒரு பயங்கரவாத சூழ்நிலைக்குள் தள்ளி எமது நாட்டை ஒரு வறிய நாடாக மாற்றி மேற்குலக நாடுகளிடம் கையேந்தி நிற்கும் நிலைக்குத் தள்ளிவிட மேற்குலக நாடுகள் முயற்சிக்கின்றன.

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளின்றியும், தொழில் வாய்ப்புகளின்றியும், மாணவர்கள் சிறந்த கல்வி வசதிகளின்றியும் அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு மேற்குலக நாடுகள் மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வாராமல் தற்போது இருக்கின்ற நிம்மதியைக் கூட இல்லாமல் ஆக்குவதற்கான முயற்சியாகவே இவற்றைப் பார்க்கத் தோன்றுகின்றது- என்றார். (ச)

# அதிக பஸ் கட்டணம் அறவீடு; திருமலை பயணிகள் விசனம்

மூதூர், மார்ச் 1

திருகோணமலை - புல்மோட்டை வீதியில் சேவையில் ஈடுபடுகின்ற பஸ்களில் அதிகூடிய பஸ் கட்டணங்களை அறவிடுவதோடு, பயணிகளுக்கு மிகுதிப் பணமும் வழங்கப்படுவதில்லை என்று பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் சேவையில் ஈடுபடுகின்ற இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களில் 79 ரூபா அறிவிடப்படுகின்றபோதிலும், தனியார் பஸ்களில் 96 ரூபா அறவிடப்படுகின்றது. அத்தோடு, இந்த வீதியிலுள்ள குச்சவெளி, திரியாய், கும்புறுப்பிட்டி, நிலாவெளி, புடவைக்கட்டு ஆகிய பகுதிகளுக்கு மாறுபட்ட உயர்ந்த பஸ் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன என்று பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இந்த விடயத்தில் கிழக்கு மாகாணப் போக்குவரத்துப் பயணிகள் அதிகார சபையினரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கிழக்கு மாகாணத்தில் அரச ஆதரவு ஆர்ப்பாட்டங்கள்

கல்முனை, மார்ச் 1

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள பிரேரணைக்கு கண்டனம் தெரிவித்து அரசுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் கிழக்கில் நேற்றுமுன்தினமும் நடைபெற்றன.

இந்தஆர்ப்பாட்டங்கள்அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ், கல்முனை மாநகர சபை முதல்வர் சிராஸ் மீராசாஹிப் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் துல்கர் நயீம் ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்றன.

# குடைசாய்ந்தது ஒட்டோ



கல்முனை, மார்ச் 1

கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியின் அட்டாளைச்சேனை, மீனோடைக்கட்டுப் பகுதியில் ஒட்டோ ஒன்று நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை காலை குடைசாய்ந்ததில் நபரொருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நிந்தவூரிலிருந்து பயணித்த ஒட்டோவே இந்த விபத்துக்குள்ளானது. இதன்போது சாரதியுடன் நால்வர் பயணித்திருந்தனர்.

காயமடைந்தவர் அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துக் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-31)

# அடி காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு

அம்பாறை - கல்ஓயா சந்தி பாலத்துக்கு அண்மையில் அடிகாயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் நேற்று புதன்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளதாக அம்பாறை பொலிஸார் தெரிவித்தனர்.

செங்கல் உற்பத்தி செய்யும் வாடியில் வேலை செய்யும் அம்பாறையைச் சேர்ந்த தரங்க (வயது-29) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

செங்கல் உற்பத்தி செய்யும் வாடியில் வேலைக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை வேலைக்குச் சென்றவர் இரவு 12 மணியாகியும் வீடு திரும்பாததையடுத்து இவரை நேற்றுக் காலை உறவினர்கள் தேடிச் சென்றபோது பொல்லால் தாக்கப்பட்ட காயத்துடன் செங்கல் உற்பத்தி செய்யும் வாடிக்கு செல்லும் வீதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக அம்பாறை போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் அம்பாறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியசாலை நோயாளர் பராமரிப்பு சேவைக்கு ஆட்சேர்ப்பு

யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென்.ஜோன் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு ஆண், பெண் இருபாலாரும் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர். நாள் ஒன்றுக்கு ஆண் பராமரிப்பாளர் ஒருவருக்கு ரூபா 1000/= வழங்கப்படும்.

இச் சேவையில் சேர விரும்புவோர் எதிர்வரும் 04.03.2012 ஞாயிற்றுக்கிழமை பி.ப 04.00 மணிக்கு யாழ். போதனா வைத்திய சாலையில் உள்ள சென்.ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்துக்கு நேரில் சமுகம் தரவும்.

மேலதிக விபரங்களுக்கான தொடர்பு இலக்கம் : 021 222 3166

**அவசர அமபுலன்ஸ் சேவைக்கான இலக்கம்:**
**021 321 4444**

சென்.ஜோன் அம்புலன்ஸ், யாழ். மாவட்டம்.
(15140)(25-7-8)

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை-கந்தசாமி

(லிப்டன் கந்தசாமி)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை - கந்தசாமி கடந்த (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப் பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் இளைய மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் நமசிவாயத்தின் சகோதர னும், ராஜகோபால், கமலாதேவி, ஆகியோரின் சகலனும், பூமணி, குணேஸ் வரி, சிவநேசன், ஆகியோரின் மைத்துனரும், அன்னலக்ஸ்சுமி, மகேஸ்வரன், ஜெகதீசன், ஜெயராணி, திருமாள், கெங்காதரன், ஜெயதர்சினி, மயூரா, ரஜீவா, ரவீனா, ஆகியோரின் தம்பி என அழைக்கப்படும் பாச மிகு சித்தப்பாவும், உதயநேசன், மாலினி, நிர்மலா, சுரேஸ், தயாளினி, பாலேஸ்வரன், ரமேஸ், அன்பழகன், ஆகியோரின் பாசமிகு மாமனும், ஆரதி, அரிஸ், ராகுல், அர்ஜின், அனுசன், அஞ்சலன், அபினாஸ், சிவா னுஜன், சரண்றாஜ், கஜானன், ஜசிகன், திரிஷா, அஜி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2012) வியாழக் கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது வடலியடைப்பு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மனைவி, பெறாமக்கள்**

**வடலியடைப்பு.** (15190)(25-7-8)

## 'கண்ணா செடி'யினில் கை வைத்தால் அபராதம்

யாழ்ப்பாணம்,மார்ச்.1

கடற் கரையை அண்மித்து அரிதாக வளர்ந்திருக்கும் 'கண்ணா செடி'யை விறகுக் காக அனுமதி யின்றி வெட்டி எடுத்துச் சென்ற குற்றத்துக்காக நான்கு பேருக்கு ஊர்காவற்துறை நீதி மன்றம் இரண்டாயிரம் ரூபா அபரா தம் விதித்துள்ளது.

கரையை அண்மித்த சில இடங்களில் மட்டுமே மிக அரிதாக இந்தச் செடி காணப் படுகிறது. மண்டை தீவுக் கடற்கரையிலும்இவ் வாறான செடிகள் காணப்படுகின்றன. அவை மீன்கள் வளர, பெருக உதவுபவை. இதனாலும் பிற காரணங்களாலும் அந்தச் செடியை வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நாவாந் துறையைச் சேர்ந்து நான்கு பேர் அந்தச் செடிகளை வெட்டி எடுத்துச் சென்ற போது கடற் படையினர் நால்வரையும் கைது செய்தனர். ஊர்காவற் றுறைப் பொலிஸில் ஒப்படைத் தனர். அனுமதியின்றி அவற்றை வெட்டி எடுத்துச் சென்றனர் என்று வழக்குப் பதிவு செய்து நீதிவான் ஆர்.எஸ்.எம். மகேந்திரராஜா முன்னிலையில் அவர்கள் முற்படுத்தப்பட் டனர்.

நால்வரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 500 ரூபா வீதம் இரண்டாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (உ-4)

## வரிப்பத்திரம் ஒட்டாதவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,மார்ச்.1

வாகன வரிப்பத்திரத்தின் பிரதியை வாகனத்தின் முன் பக்கக் கண்ணாடியில் ஒட்டாமல் வாகனத்தைச் செலுத்திச் சென்றவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் மூவாயிரத்து 500 ரூபா அபராதம் விதித் துள்ளது.

சங்கானையைச் சேர்ந்த நபர் ஊர்காவற்றுறைக்குச் சென்ற போதே பொலிஸார் அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தனர். நீதிவான் ஆர். எஸ் . எம் . மகேந்திரராஜா அபராதம் விதித்தார். (உ-4)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை பாக்கியம்



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பாக்கியம் 26.02.2012 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கட்டையன் முத்துவின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி தெய்வானையின் அன்பு மருமகளும், சின்னத்துரையின் அன்பு மனைவியும் நிர்மலா, பிறேமாவதி (ஜேர்மனி), செல்வராசா, கேமராசாவின் அன்புத் தாயும், குலேந்திரன் (ஜேர்மனி), ரஞ்சிதமலர், சுகந்தியின் மாமியும், தங்கா, சங்கரன், வசந்தன், சஞ்சீபன் (ஜேர்மனி), முரளிதரன் (டோகா), நிசாளினி, நிரூஜா, நிறேக்கா (ஜேர்மனி), விஜியகாந், சஞ்சீபன், கவுசிகா, ஜனுஷா, லலிசன், சுஜிபா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய் யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.** (15141) (6,7,10)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வாழும் கலை

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்ஜி அவர்களின் பிரதான சீடர்
சுவாமி சத்தியோயாதா அவர்கள் யாழ்ப்பாண வருகை

மனம், மன அழுத்தம்
ஜோதிடம், உரை, கேள்வி நேரம்
இடம்: வீரசிங்கம் மண்டபம்
திகதி: 02.03.2012
நேரம்: 5 மணி - 6.30 வரை

**தொ.பே. 077 0474757**



தேவார பாராயணம்
வடமராட்சியில்,
இடம்: நெல்லியடி
மகா வித்தியாலயம்
திகதி: 03.03.2012
நேரம்: 4 மணி - 5.30 வரை

(15198(45-21-7)

# மரண அறிவித்தல்



## திருமதி
## கந்தசாமி சரஸ்வதி

தெல்லிப்பழை, பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி சரஸ்வதி 28.02.2012 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகசாமி மற்றும் வள்ளிப் பிள்ளை, சிவனேஸ்வரி காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கஜேந்திரன், சுமங்கலா, குலேந்திரன், மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும், தர்சனா, அகிலன், ஷயந்தி, கஜேந்திரரூபி ஆகியோரின் பாசமிகு மாமியும்,கோபிதன், ஜெய்ஷன், ஆரதி, கதிலன், மேதினிகா, சனுஜா, கைலிஷா, சர்மிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தேவயானி, வேலாயுதம், பாலசுப்பிர மணியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2012) வியாழக் கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பன்னாலை, தெல்லிப்பழை.**

தகவல்:
சி. கந்தசாமி (கணவர்),
க. மகேந்திரன் (மகன்-மோகன்)

(15143) (7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரோடு இப்படியும் மோதலாம்

நிர்வாணக்கோலத்திலிருந்த பருமனான பெண்ணொருவர், காலை நேரம் வீதியில் சென்று கொண்டிருந்த காரொன்றின் மீது ஏறி காரின்முன்கண்ணாடியை சேதமாகிய சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

25 வயதான ஜோன் நைட் எனும் இளைஞர் அவ்வேளையில் காரைச் செலுத்திக் கொண்டிருந்தார். கலிபோர்னியா மாநிலத்தின் சன்பிரான்ஸிஸ்கோ நகரிலுள்ள வீதியொன்றில் இடம்பெற்ற இச்சம்பவத்தை சிலர் படம் பிடித்துள்ளனர்.

ஹெவி செட் என குறிப்படப்படும் அந்தப் பெண் பயணிகள் பலரை தாக்கியதால் வாகனமொன்றிலிருந்து இறக்கப்பட்டு பொலிஸாரினாலும் மருத்துவர்களாலும் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்.

அவர் மீது போர்த்தப்பட்டிருந்த போர்வையை திடீரென மருத்துவர்கள் மீது வீசியெறிந்த அப்பெண் வீதிக்குச் சென்று அங்கிருந்த காரொன்றின் மீது ஏறி முன்கண்ணாடியை உடைத்துள்ளார்.

மேற்படி காரின் சாரதியான ஜோன் நைட் இது தொடர்பில் விவரிக்கையில்,

சிவில் உடையிலிருந்த பொலிஸார் வந்து அப்பெண்ணை காரின் கூரையிலிருந்து இறக்கி கைவிலங்கு அணிவிக்கும் வரை அப்பெண் எனது காரின் கண்ணாடியை உடைத்த வண்ணம் இருந்தார் எனத் தெரிவித்துள்ளார். காருக்கு ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீடு பெற காப்புறுதி நிறுவனத்துக்குச் சென்ற போது நான் கூறியதை அவர்கள் முதலில் நம்ப முடியாமல் இருந்தனர் என ஜோன் நைட் கூறினார்.

# பஸ் மீது கொலைவெறி

## பாகிஸ்தானில் 18 ஷியா முஸ்லிம்கள் சாவு



இஸ்லாமாபாத், மார்ச் 1

பாகிஸ்தானின் வடக்குப் பகுதியில் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த 18 பயணிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஷியா இன முஸ்லிம்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடரணியாகச் சென்று கொண்டிருந்த நான்கு பஸ்களை, இராணுவ சீருடை அணிந்த துப்பாக்கித்தாரிகள் தடுத்து நிறுத்தி தாக்குதல் நடத்திய போதே இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அந்த பஸ்களில் பயணம் செய்து கொண்டிருந்தவர்களின் அடையாள ஆவணங்களை சோதித்த அந்த ஆயுததாரிகள் ஷியா முஸ்லிம் இனத்தவரை தனிமைப் படுத்தி சுட்டுக் கொன்றுள்ளனர்.

கடந்த காலங்களிலும் பாகிஸ்தானில் இன மோதல்களின்போது, ஷியா இனத்தவர்கள் இலக்கு வைத்துத் தாக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் அரசு இத்தகைய வன்முறைகளைத் தடுக்க சிறிதளவான நடவடிக்கைகளையே எடுக்கின்றன எனச் செய்தியாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### இணைந்த கரங்கள்...




பிரிட்டனில் நடைபெற்றுவரும் சோமாலியாவுக்கான மனிதாபிமான உதவிகள் குறித்த மாநாட்டின் இடைவேளைப் பொழுதில் அமெரிக்க மாற்றும் பாகிஸ்தானிய வெளிவிவகார அமைச்சர்கள் சந்தித்துக் கொண்டனர்.

## முதல் ஆட்டத்திலேயே 'அவுட்'

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளிலிருந்து சிரியாவின் பிரதிநிதிகள் வெளியேறியுள்ளனர். சிரிய அரசு பிரிவினை வாதத்தைத் தூண்டுவதாக ஐ.நாவின் அமர்வுகளில் தெரிவிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அவர்கள் வெளிநடப்புச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் சிரியா மீது அநாவசியத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளமை தமது மக்களை சிரமத்துக்கு உள்ளாக்கியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையில், சிரியாவில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. இதேவேளை சிரியாவில் தொடரும் மனித அவலங்கள் நிறுத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தநிலையில் சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத் பதவி விலக வேண்டும் எனத் தெரிவித்து போராட்டங்கள் வலுப்பெற்றுவருகின்றன.

## முட்டையைத் திருடி மாட்டிக் கொண்டவர்



இங்கிலாந்து நாட்டில் போ நகரில் வசித்துவரும் மேத்யு கோன்ஷா(49) என்பவர் 700 வகையான அரிய பறவைகளின் முட்டைகளை திருடி அவற்றைத் தனது வீட்டில் காட்சிப் பொருளாக வைத்திருந்திருக்கிறார்.

இவர் ஸ்கொட்லாந்து நாட்டில் உள்ள பறவைகள் சரணாலயத்துக்குச் சென்று அங்கு வசிக்கும் அரிய வகை தங்கப் பருந்துகள், குருவிகள், மற்றும் நெருப்புக் கோழிகள் போன்றவற்றின் முட்டைகளை திருடி வந்தார். பின்னர் அவற்றை தனது வீட்டில் கண்காட்சி போல வைத்து இருந்தார்.

சில முட்டைகளில் குஞ்சு உருவாகி இருப்பதை அறிந்த அவர் அந்த முட்டையில் துளையிட்டு அதன் மூலம் அக்குஞ்சுகளை சிதைத்து வெளியேற்றி இருக்கிறார்.

இதுகுறித்து தகவலறிந்த பறவை ஆர்வலர்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். இதைத் தொடர்ந்து பொலிஸார் மேத்யு கோன்ஷாவை கைது செய்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் 6 மாதம் சிறை தண்டனை மற்றும் 10 ஆண்டுகளுக்கு பறவைகளின் இனப்பெருக்க காலத்தில் ஸ்கொட்லாந்து நாட்டுக்குள் மேத்யு பிரவேசிக்க கூடாது என்று உத்தரவிட்டனர்.

## சிரியாவில் தலையிடோம் : நேட்டோ

வாஷிங்டன், மார்ச் 1

லிபியாவில் புரட்சிப் படையினருக்கு ஆதரவாக களமிறங்கியது போல, சிரியாவில் தலையிடும் எண்ணம் இல்லை என்று நேட்டோ படைத் தலைவர் கூறினார்.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையின் தலைவர் ஆண்டர்ஸ் போக் ராஸ்முசன், வாஷிங்டனில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: சிரியாவில் நிலவும் சூழ்நிலையை நேட்டோ படை உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. அதிபர் பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக போராடும் மக்களை ராணுவ தாக்குதல் நடத்தி கொல்வது கண்டனத்துக்கு உரியது. லிபியாவில் அதிபர் கடாபியின் ஆட்சிக்கு எதிராகப் போராடியவர்களுக்கு ஆதரவாக நேட்டோ வான் வழித் தாக்குதல் நடத்தியது. ஐ.நா. முடிவு மற்றும் அந்த பிராந்தியத்தில் உள்ள நாடுகள் ஆதரவின் பேரிலேயே நேட்டோ தலையிட்டது. அதுபோன்ற நிலை சிரியாவில் இல்லை.

எனவே, லிபியா விடயத்தில் நேட்டோ படை தலையிடாது. இவ்வாறு ஆண்டர்ஸ் கூறினார்.

## மலசலகூட ஆக்கிரமிப்புப் போராட்டம்

சீனாவில் பெண்களுக்கான பொது மலசலகூடம் போதிய அளவில் இல்லை என்று கூறி பெண்கள் போராட்டம் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. சீனத் தலைநகர் பீஜிங்கில் பெண்களுக்கான பொது மலசலகூடங்கள் போதுமான அளவு இல்லை என்று கூறி பெண்கள் நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தினர். ஆண்களின் மலசலகூடத்தில் புகுந்து கொண்டு கோஷம் எழுப்பினர்.

அவசரத்தில் வந்த ஆண்களை உள்ளே நுழைய விடாமல் தடுத்தனர். மலசலகூடங்களுக்கு வெளியே பதாதைகளை ஏந்தியபடி கோஷமிட்டனர். கல்லூரி மாணவிகளே இந்த போராட்டத்தில் அதிகளவில் பங்கேற்றனர்.

'அவசரத்தில்' வந்த ஆண்களை உள்ளே நுழைய விடாமல் தடுத்தனர். மலசலகூடங்களுக்கு வெளியே பதாதைகளை ஏந்தியபடி கோஷமிட்டனர்.

மலசலகூடப் போராட்டத்துக்கு தலைமையேற்ற கல்லூரி மாணவி லி டிங்டிங் கூறுகையில்,

பெண்களுக்கான பொது மலசலகூடங்கள் சீனாவில் போதுமானதாக இல்லை. மலசலகூடத்தின் முன்பு நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டி உள்ளது. பெண்களுக்குக் கூடுதலாக மலசலகூடங்கள் அமைக்க வேண்டும் அல்லது ஆண்களின் மலசலகூடத்தைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். உயரதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கவே இந்த மலசலகூட ஆக்கிரமிப்பு போராட்டம் நடத்துகிறோம் -என்றார்.

## புதிய தளபதி



பாகிஸ்தானில் விமான படைக்கு புதிய தளபதியாக தாஹிர் ரபக் பட் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் யூசுப் ரசா கிலானியின் ஆலோசனையின் அடிப்படையில் ஜனாதிபதி புதிய தளபதியை நியமித்துள்ளதாக பிரதமர் அலுவலகச் செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் விமானப் படை தளபதியாக இருக்கும் ராவ் குவாமர் சுலைமான் எதிர்வரும் 17ஆம் திகதியுடன் ஓய்வு பெறுகிறார்.

ஓய்வு வயதை நீட்டித்து பதவியில் தொடர விருப்பம் இல்லை என அவர் தெரிவித்துள்ளதால் புதிய தளபதியாக பட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சுலைமான் கடந்த 1977 ஆம் ஆண்டு பாகிஸ்தான் விமானப் படையில் சேர்ந்தார். பல்வேறு விதமான போர் விமானங்களையும் கையாண்டுள்ளார். இவர் எயார் மார்ஷலாக கடந்த 2009ஆம் ஆண்டு பதவியேற்றார்.

## நூறாண்டு சேவைக்கு ஓய்வு



நயகரா நீர்வீழ்ச்சியின் அருகே பயணிகளை அழைத்துச் செல்லும் படகுச் சேவையை மெய்ட் ஓவ் தி மிஸ்ட் என்ற நிறுவனம் வழங்கி வருகிறது.

இந்த என்ற நிறுவனம் கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலாக, உல்லாச பயணிகளை நீர்வீழ்ச்சியின் அருகே அழைத்துச் சென்றது.

ஆனால் தற்போது அந்த நிறுவனத்திற்குப் பதிலாக கலிபோர்னியாவைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றிடம் அந்தச் சேவையை நடத்தும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

கலிபோர்னிய நிறுவனம், எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் இருந்து சேவையை வழங்குமெனத் தெரிவிக்கப் படுகிறது.

புதிய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தம் காரணமாக, மேலதிகமாக 300 மில்லியன் டொலர் வருமானம் கிடைக்கும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பழையபடி தொடங்கியது பள்ளிச் சூடு

அமெரிக்காவின் ஒஹியோ பள்ளியில் துப்பாக்கிச் சூடு நடந்தது. இதில் மாணவன் ஒருவன் பரிதாபமாக கொல்லப்பட்டான். மேலும் 4 பேர் படுகாயம் அடைந்தனர்.

அமெரிக்காவின் ஒஹியோ மாகாணத்தில் உள்ள கிளவ்லேண்ட் நகரில் உள்ளது சார்டன் தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளி. இங்கு நேற்றுமுன்தினம் காலை பள்ளி தொடங்குவதற்கு முன் மாணவ, மாணவிகள் சிற்றுண்டிச் சாலையில் சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண் [illegible] வன் திடீரென மாணவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினார். அதை பார்த்து மாணவர்கள் அலறிக் கொண்டு ஓடினர். சிலர் தொடக்க பள்ளிக்குள் ஓடி ஒளிந்து கொண்டனர். காயம் அடைந்த மாணவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அவர்களில் ஒரு மாணவன் பரிதாபமாக இறந்தான் என்று பொலிஸ் தலைவர் திமோதி கூறினார். சம்பவத்தை நேரில் பார்த்த மாணவி ஹீத்தர் ஜிஸ்கா கூறுகையில், “நாங்கள் காலை 7.30 மணிக்கு சிற்றுண்டிச் சாலையில் இருந்தோம். அப்போது அந்த மாணவன் கோபமாக வந்தான். திடீரென துப்பாக்கியால் சுடத் தொடங்கினான். அனைவரும் சிதறி ஓடினார்கள்”- என்று மரண பீதியுடன் கூறினார்.

பொலிஸ் தலைவர் திமோதி கூறுகையில்,

“துப்பாக்கிச் சூடு நடத்திய மாணவன் சிறுவன் என்பதால், அவனுடைய பெயர் வெளியிடப்படவில்லை. எனினும் அவன் மீது வழக்குப் பதிவு செய்து தொடர்ந்து விசாரணை நடக்கிறது என்றார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து பள்ளிக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுனாமியால் இறந்தவர்கள் பேயாக உலா

### ஜப்பானில் பீதி

டோக்கியோ,மார்ச்1

கடந்த ஆண்டு ஏற்பட்ட சுனாமிப் பேரழிவில் சிக்குண்டு உயிரிழந் தவர்கள் பேயாக மாறி பொதுமக்களை பய முறுத்தி வருவதாக இஷினோமகி நகரில் கடும் பீதி ஏற்பட்டுள்ளது.

ஜப்பானில் கடந்தாண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி ஏற்பட்ட நிலநடுக்கம், சுனாமியால் கடும் பாதிப்பு ஏற்பட்டது.

கட்டடங்கள் மற்றும் வீடுகள் இடிந்ததில் 19 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். மேலும் புகுஷிமா அணு உலை வெடித்ததில் கதிர் வீச்சு பரவி பல்லாயிரக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

தற்போது சிறிது சிறிதாக அணு உலை சீரமைக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் சுனாமியில் சிக்கி உயிரிழந்தவர்கள் பேயாக மாறி பொதுமக்களைப் பயமுறுத்தி வருவதாக இஷினோமகி நகரில் கடும் பீதி ஏற்பட்டுள்ளது.

அங்கு இறந்தவர்க ளின் சத்தங்கள் மற்றும் அலறல்கள் கேட்பதாக பலரும் கூறி வருவதால், மக்கள் நடமாட அஞ்சுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனிடையே நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் உயிரிழந்தவர்களின் ஆன்மா சாந்தியடைய பரிகாரப் பூசைகளைச் செய்வதில் மதகுருமார்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

# எதிர்பாராத வெடி விபத்து

### சீனத் தொழிற்சாலையில் சம்பவம்

பீஜிங்,மார்ச்1

சீனாவின் வட பகுதியில் அமைந்துள்ள இரசாயனத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இந்த வெடிப்புச் சம்பவத்தில் மேலும் 40 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வெடிப்புச் சம்பவதில் இயந்திரங்கள் சில சேதமடைந்துள்ளதுடன், தொழிற்சாலையிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ள வீடுகளின் யன்னல்களும் சேதமடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**இந்த வெடிப்புச் சம்பவத்தில் கிட்டத்தட்ட 12 பேரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளதாகவும் 40 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.**




குறித்த தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்துக்கு தொழிலாளர்களின் கவனமின்மையே காரணம் என முதற்கட்ட விசாரணைகளி னின்றும் தெரிய வந்திருக்கிறது.

ஆயினும் அண்மைக் காலமாக சீனாவில் அதிகரித்திருக்கும் சதி முயற்சிகளில் ஒன்றாக இது இருக்கலாம் என்று ஆராய விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.




அமெரிக்காவில் நடைபெற்று வரும் ஜனாதிபதித் தெரிவுக்கான இடைத் தேர்தலில் அரிசோனா மாநிலத்தில் மிட் ரொம்னி வெற்றிபெற்றுள்ளார்.

## 30 நிமிடங்களில் 337 கோழிக் கால்கள்




அமெரிக்காவின் பிலடெல்பியா நகரில் ஆண்டு தோறும் 'சிக்கன்' சாப்பிடும் போட்டி நடத்தப்பட்டு, இப்போட்டியில் அதிகமான சிக்கன் லெக் பீஸ் சாப்பிடுபவருக்கு பத்து லட்சம் ரூபாய் பரிசளிக்கப்படும்.

அண்மையில் நடைபெற்ற இந்த ஆண்டுக்கான போட்டியைக் காண்பதற்கு 20 ஆயிரம் பேர் திரண்டிருந்தனர். மசாலா தடவப்பட்டு நன்றாகப் பொரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான லெக் பீஸ்கள் தயாராக இருந்த நிலையில் மணி ஒலித்து, போட்டி தொடங்கியது.

இப்போட்டியின் இறுதியில் ஜப்பானைச் சேர்ந்த டகெரு கொபாயஷி என்ற இளைஞர் அரை மணி நேரத்தில் 337 லெக் பீஸ்களை சாப்பிட்டு பரிசைத் தட்டிச் சென்றார்.

இதற்கு முன் ஜேர்மனியைச் சேர்ந்த ஒருவர் 255 லெக் பீஸ்களைச் சாப்பிட்டு சாதனை படைத்திருந்தார்.

தற்போது அந்தச் சாதனையை ஜப்பான் நாட்டைச் சேர்ந்த டகெரு கொபாயஷி முறியடித்துள்ளார்.

(14)

## ஒசாமாவுக்குப் பாதுகாப்பளித்த ஐ..எஸ்.ஐ

வாஷிங்டன்,மார்ச்1


பாகிஸ்தானில் அபோதாபாத் நகரில் பதுங்கியிருந்த பின்லேடன் கடந்த ஆண்டு மே மாதம் அமெரிக்கப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் நடந்த ஓரிரு நாளில் ஸ்ட்ராட்பர் என்ற புலனாய்வு நிறுவனத்தின் துணைத் தலைவர் பரட் பர்டன் என்பவர், அதே நிறுவனத்தின் தெற்கு ஆசியப் பிராந்திய இயக்குநருக்கு ஒரு ஈ-மெயில் அனுப்பி உள்ளார்.

அதில், பாகிஸ்தானின் ராணுவம் மற்றும் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ உயர் அதிகாரிகள்தான், ஒசாமா தங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர். குறிப்பாக ஓய்வுபெற்ற மேஜர் ஒருவர், ஒசாமாவுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு பேசி உள்ளார் என அந்த ஈ-மெயிலில் கூறியிருந்ததாக விக்கிலீக்ஸ் செய்தி வெளியிட் டுள்ளது.

பாகிஸ்தானில் முஷாராப் ஆட்சிக் காலத்திலும் தற்போதைய கிலானி ஆட்சிக் காலத்திலும் இந்தத் தகவலுக்கு எதிரான கருத்துக்களே முன்வைக்கப்படுகின்றன.

அதாவது, பாகிஸ்தான் ஒபாமாவுக்கு ஆதரவு மற்றும் புகலிட அனுமதியை ஒரு போதும் வழங்கவில்லை என தொடர்ந்தும் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பூமிக்கு வந்த மிகப் பெரிய வேற்றுக்கிரக விமானம்



இதுவரை தாம் பல வேற்றுக்கிரக மனிதர்களைக் கண்டதாகவும், அவர்கள் பறக்க பாவிக்கும் விமானங்களையும் தாம் கண்டதாகவும் பலர் தெரிவித்துள்ளனர்.பல வீடியோக்களும் வெளியாகியுள்ளது. இருப்பினும் தற்போது வெளியாகியிருக்கும் வீடியோ உலகையே அதிர்ச்சியில் அழ்த்தியுள்ளது.

இக் காணொளியானது உண்மையாகப் படமெடுக்கப்பட்டது என அதனைப் பகுப்பாய்வுசெய்தவர்கள் தெரிவிக்கிறார்கள்.

## லண்டன் பள்ளிகளில் புதிய பாடம் அறிமுகம்

லண்டன்,மார்ச்1

ஓரினச் சேர்க்கையாளர் திருமணத்தின் முக்கியத்துவம் பற்றிப் பள்ளிகளில் கற்றுத்தரும் வகையில், பிரிட்டனில் சட்டத்திருத் தம் கொண்டு வரப்பட உள் ளது. பிரிட்டனில் ஓரினச் சேர்க்கையாளர் திரு மணத்தின் முக்கியம் பற்றி மாணவர்களுக்கு கற்றுத்தர அரசு திட்டமிட்டுள்ளது. அதற்கேற்ப ஓரினத் திருமணம் என்ற சொல்லுக்குச் சட்டத்தில் தற்போது அளிக்கப்பட்டுள்ள அதே விளக்கம், ஓரின சேர்க்கை திருமணம் என்ற சொல்லுக்கும் பொருந்தும் வகையில் திருத்தங்கள் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி ஓரினச் சேர்க்கையாளர் திருமணத்தின் முக்கியத்துவம் பற்றிப் பள்ளிகளில் ஆசிரியர்கள் விளக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். இதற்கு மறுப்புத் தெரிவிக்கும் ஆசிரியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

ஓரினச் சேர்க்கை ஓரினத் திருமணம் என்ற சொல்லுக்கு சட்டப்பூர்வ விளக்கம் அளிக்க அடுத்த மாதம் அரசு அறிவிப்பு வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்குப் புத்திஜீவிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

## பெயரைக் கேட்டாலே தரையிறக்கம்



போர்ட்லேண்ட்,மார்ச்1

விமானத்தில் பயணித்த இளைஞர் திடீரென ஒசாமா பின்லேடனின் புகழ் பாடி, ஊழியர்களைத் தாக்க முயன்றதால் ஏற்பட்ட பரபரப்பை அடுத்து விமானம் உடனடியாகத் தரையிறக்கப்பட்டது.

அமெரிக்காவின் ஆரிகன் மாநிலம் போர்ட்லேண்ட் நகரில் இருந்து டெக்சாஸ் மாநிலம் நோக்கி தனியார் விமானம் ஒன்று புறப்பட்டது. அதில் ஏராளமான பயணிகள் இருந்தனர். சவூதி அரேபியாவைச் சேர்ந்த யாசீத் முகமது அபுநயன் (19) என்ற இளைஞரும் விமானத்தில் இருந்தார். விமானம் பறக்கத் தொடங்கிய பின், அபுநயன் திடீரென எலக்ட்ரானிக் சிகரெட்டை பற்ற வைத்தார். ஒசாமா பின்லேடன் புகழ் பாடும் வரிகளையும் பெண்களுக்கு எதிராகவும் திடீரென பாட்டு பாடிக் கோஷம் போட்டார். புகை பிடிப்பதையும் கோஷம் போடுவதையும் நிறுத்துமாறு பயணிகள், ஊழியர்கள் கூறினர். மறுத்து அபுநயன் அவர்களை அடிக்கப் பாய்ந்தார். இதனால் பரபரப்பு நிலை ஏற்பட்டது. உடனடியாக விமானம் போர்ட்லேண்ட்டில் தரையிறக்கப்பட்டது. விமான நிலையத்தில் அபுநயன் கைது செய்யப்பட்டார். சாதாரண விஷயங்களுக்குக்கூட உணர்ச்சி வசப்படும் சிசோபெர்னியா என்ற மன நல பாதிப்பால் அவர் அவதிப்பட்டு வருகிறார். கடந்த 3 வாரங்களாக மருந்து, மாத்திரை சாப்பிடாததால் இவ்வாறு நடந்துகொண்டார் என்று அபுநயனின் சட்டத்தரணி கூறியுள்ளார்.

## காயமடைந்தவர் மீட்கப்பட்டார்

ஹோம்ஸ்,மார்ச்.1

சிரியா மோதலில் காயமடைந்து, ஹோம்ஸ் நகரில் அகப்பட்டிருந்த பிரிட்டிஷ் செய்திப் படப்பிடிப்பாளரான பால் கொன்ரோய் அங்கிருந்து கடத்தப்பட்டு, எல்லை கடந்து, பாதுகாப்பாக லெபனானுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறார்.



முற்றுகைக்கு உள்ளாகியிருக்கும் மாவட்டமான பாபா அம்ரில் இருந்து அவர், சிரியஎதிர்ப்புப் படையினரின் உதவியுடன் கடந்த திங்கட்கிழமை காப்பாற்றப்பட்டுக் கொண்டுவரப்பட்டதாக இராஜதந்திர வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

இவர் பாதுகாப்பாக அங்கிருந்து கடத்தி வரப்பட்ட நடவடிக்கைகளில் செஞ்சிலுவைச் சங்கத்துக்கோ அல்லது சிரியாவின் செம்பிறை அமைப்புக்கோ தொடர்பு எதுவும் கிடையாது என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஹோம்ஸ் நகரில் 'சண்டே டைம்ஸ்' பத்திரிகைக்காக கொன்ரோய் அவர்கள் படப்பிடிப்பாளராகப் பணியாற்றிவந்தார். கடந்த வாரம் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்ட மேரி கொல்வினுடன் இவர் பணியாற்றியவர்.

### அமெரிக்காவுடன் சண்டையிடத் தயார்

வடகொரியாவின் தற்போதைய அதிபர் ஹிம்ஜோஸ் உன் அமெரிக்கா மற்றும் அதன் ஆதரவு நாடுகளுடன் போர் ஒன்றுக்குத் தயாராவதாகத் தெரிவித்துள்ளார். அண்மையில் வட கொரியா இராணுவப் பிரிவில் புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு படையணியின் அணி வகுப்பு மரியாதையின் போதே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

மேற்கு நாடுகள் இணைந்து முஸ்லிம் நாடுகளை மோசமாகச் சூறையாடி வருவதாகவும் அதற்குத் தாம் சீனாவுடன் இணைந்து தக்க பதிலடி கொடுக்கத் தயாராகி வருவதாகவும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு இந்தியா ஆதரவா? தமிழர்கள் மன்னிக்கவே மாட்டார்

## ராமதாஸ் சீற்றம்



சென்னை, மார்ச்1

இலங்கை அரசுக்கு இந்தியா துணை போனால் மனச்சாட்சி உள்ள எந்த மனிதரும் மன்னிக்கமாட்டார்கள் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்ததாவது:

ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை கொன்று குவித்த இலங்கை அரசுக்கு இந்தியா துணை போனால் அதை உலகெங்கும் உள்ள தமிழர்கள் மட்டுமன்றி மனச்சாட்சி உள்ள எந்த மனிதரும் மன்னிக்கமாட்டார்கள். எனவே, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்.


இலங்கையில் நடைபெற்ற இறுதிப்போரில் அப்பாவி தமிழர்களை கொன்று குவித்த சிங்கள அரசுக்கு, இந்தியா அனைத்து வகையிலும் உதவி செய்தது. அங்கு நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கோரி 2009 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தில் ஜேர்மனி உட்பட 16 நாடுகள் தீர்மானம் கொண்டு வந்தன. அந்த தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்து இருந்தால் இலங்கை இனச் சிக்கல் இந்தநேரம் தீர்க்கப்பட்டிருக் கும்.

ஆனால், சீனா உள்ளிட்ட நாடுகளுடன் சேர்ந்து கொண்டு இலங்கை அரசை பாராட்டும் வகையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற இந்தியா பெருமளவில் உதவி செய்தது.

இந்தநிலையில் இலங்கை மீது போர்க் குற்ற விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை ஆணையக் கூட்டத்தில் அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் கொண்டு வரவுள்ள தீர்மானத்தை இந்தியா எதிர்க்கும் என்று இலங்கை அறிவித் துள்ளது. அதை இந்தியா மறுக்கவில்லை.

ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை கொன்று குவித்த இலங்கை அரசுக்கு இந்தியா துணை போனால் அதை உலகெங்கும் உள்ள தமிழர்கள் மட்டுமன்றி மனச்சாட்சி உள்ள எந்த மனிதரும் மன்னிக்க மாட்டார்கள். எனவே, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்.- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# இந்தியக் கடற்படையில் இணைகிறது அணுநீர்மூழ்கி



ரஷ்யாவிடம் இருந்து பத்து ஆண்டுகள் குத்தகைக்கு வாங்கிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் இந்த மாதம் இந்தியக் கடற்படையில் சேர்க்கப்பட உள்ளது.

அணு குண்டை ஏந்திச் செல்லும் வல்லமை படைத்த அக்னி, பிருத்வி உள்ளிட்ட ஏவுகணைகளை, இந்திய பாதுகாப்பு படை வைத்துள்ளது. இதற்கிடையே வல்லரசு நாடுகளுக்கு இணையாக அணு சக்தி நீர் மூழ்கிக் கப்பலை இயக்கும் நோக்கில், ரஷ்யாவின் 'அக்குலா-2' நீர்மூழ்கிக் கப்பலை 10 ஆண்டு குத்தகைக்கு வாங்கியுள்ளது. இந்தக் கப்பல், அடுத்த மாதம் விசாகப்பட்டினம் கடற்படைத் தளத்தை வந்தடையும். அதன்பின்னர், இந்தக் கப்பலுக்கு 'ஐ.என்.எஸ்.சக்ரா' என்று பெயர் மாற்றம் செய்யப்படும். இந்தியக் கடற்படை வீரர்களால் இந்தக் கப்பலின் செயற்பாடு ஆரம்பமாகும். (வ)

# இராணுவத் தளபதியின் இஸ்ரேல் பயணத்துக்குத் தடை



இந்திய இராணுவத் தளபதி வி.கே.சிங் இஸ்ரேலுக்கு மேற்கொள்ள இருந்த மூன்று நாள் பயணத்தை இந்திய பாதுகாப்பு அமைச்சகம் ரத்துச் செய்துள்ளது.

வி.கே.சிங் மூன்று நாள் அரசு பயணமாக, எதிர்வரும் 16 ஆம் திகதி இஸ்ரேல் செல்ல இருந்தார். அங்கு அவர் அந்தநாட்டின் ராணுவத் தளபதியுடன் இரு நாடுகளும் இணைந்து, ராணுவத்தில் எதிர்காலத்தில் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்பது குறித்து விவாதிக்க இருந்தார்.

ஆனால்,அவரது பயணத்துக்கு, பாதுகாப்பு அமைச்சகம் அனுமதியளிக்கவில்லை. இதுகுறித்து மத்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் எம்.எம்.பல்லம் ராஜூ தெரிவித்ததாவது:

"மேற்காசியாவில், குறிப்பாக, சிரியாவில் தற்போது நிலவி வரும் நிலையற்ற தன்மை காரணமாக, ராணுவ தளபதியின் பயணம் ரத்துச் செய்யப்பட்டது" - என்றார்.

இதேவேளை வயது விவகாரத்தில் மத்திய அரசுடன் மோதியதன் விளைவாகவே இவரது பயணம் தடுக்கப்பட்டதற்கு காரணம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற் கிடையே வி.கே.சிங் மே 31ஆம் திகதியுடன் ஓய்வு பெறுவதற்கான அறிவிப்பாணையை இராணுவம் அனுப்பியுள்ளது. (வ)

## ஆந்திராவில் பன்றிக்காய்ச்சல்; இருவர் ஆஸ்பத்திரியில்

ஐதராபாத், மார்ச் 1

ஆந்திராவில் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இரண்டு பேர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இது குறித்து மாநில சுகாதாரத்துறை அதிகாரி டாக்டர் சுபாகர் தெரிவித்ததாவது:

மாநிலத்தல் ஆண் மற்றும் பெண் ஆகிய இரண்டு பேருக்கு எச்1என் 1 என்ற நோய் கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் இது குறித்து பீதியடையத் தேவையில்லை என்றும் சூழ்நிலை கட்டுப்பாட்டுக்குள் உள்ளது - என்றார். (வ)




இந்திய-ஈரான் நாடுகளுக்கிடையே வரம்பில்லாத வர்த்தக வாய்ப்புக்களை ஏற்படுத்துவது தொடர்பாக, ஈரான் துணை பிரதமர் ரவ்ச் சவாய்ஸ் இந்திய வர்த்தகத் துறை அமைச்சர் பிரீனித் கவுரை புதுடில்லியில் சந்தித்துப் பேசினார்.

## பாடசாலை பஸ் கவிழ்ந்தது 4 பேர் சாவு: 11 பேர் மாயம்



ராஜமுந்திரி, மார்ச்1

ஆந்திராவில் பாடசாலைக் குழந்தைகளை ஏற்றிச் சென்ற பஸ், கால்வாயில் கவிழ்ந்ததில் 4 பேர் உயிரிழந்தனர். 11 பேரைக் காணவில்லை.

ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில், கந்திபெடா புடி கிராமம் உள்ளது. இங்குள்ள தனியார் பாடசாலையில் எல்.கே.ஜி., யு.கே.ஜி.,படிக்கும் குழந்தைகள் நேற்றுமுன்தினம் பாசாலை முடிந்து, பள்ளி பஸ்ஸில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். வழியில் உள்ள கோதாவரி ஆற்றின் கால்வாயில் பஸ் திடீரென கவிழ்ந்ததில், 4 குழந்தைகள் இறந்தனர். 11 பேரை காணவில்லை. இந்த பஸ்ஸில் பயணித்த 45 குழந்தைகளில், 30 பேர் காப்பாற்றப்பட்டு விட்டனர். காணாமல் போன குழந்தைகளைத் தேடும் பணி நடக்கிறது. காயமடைந்த குழந்தை களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை அளிக்கும்படி மாநில முதல்வர் கிரண்குமார் ரெட்டி உத்தரவிட்டுள்ளார். பொலிஸார், தீயணைப்புப் படையினர் உள்ளிட்டோர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (வ)

## ஜேர்மனியருடன் தொடர்பில்லை; கூடங்குளம் எதிர்ப்பாளர்கள்

கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்பாளர்களுக்கு நிதி உதவி செய்தமை தொடர்பாக நாகர்கோயி லில் கைதுசெய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட ஜேர்மனியருக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூடங்குளம் அணுஉலை எதிர்ப்பாளர்கள்தெரிவித்துள்ளனர்.

நாகர்கோயிலில் சட்டவிரோ தமாகத் தங்கியிருந்த ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த சோன்டக் ரெய்னர் ஹெர்மான் என்பவரை சென்னை பொலிஸார் கைது செய்தனர்.

அவரிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில் கூடங்குளம் அணு மின் நிலைய எதிர்ப்பாளர்களுக்கு பண உதவி செய்தது தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் கைது செய்த ஜேர்மனி நாட்டுக் காரர் தங்களுக்கு பண உதவி எதுவும் செய்யவில்லை என்றும், தங்களுக்கும் அவருக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்றும் போராட்டக் குழுவினர் தெரிவித் தனர். (வ)

# நட்டஈடு இன்றி நகராது கப்பல் கேரள நீதிமன்று திட்டவட்டம்

## இத்தாலிய சரக்குக் கப்பல் திண்டாட்டத்தில்

திருவனந்தபுரம், மார்ச்.1

இத்தாலிக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழக மீனவர்களுக்கு நட்ட ஈடாக ரூ.3 கோடி வங்கி உத்தரவாதம் அளிக்கும் வரை இந்திய கடல் பகுதியை விட்டு கப்பலைக் கொண்டு செல்லக் கூடாது என்று கேரள உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்ட கொல்லம் மீனவர் ஜெலஸ்டீனின் மனைவி டோரா ஜெலஸ்டீன், குமரி மீனவர் அஜீஷ் பிங்கோவின் மனைவி மற்றும் படகின் உரிமையாளர் பிரடி ஆகியோர் நட்டஈடு கோரி கேரள உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

இதனை விசாரித்த நீதிமன்றக் குழு, நேற்று முன்தினம் மாலை 5 மணி வரை கொச்சியில் இருந்து கப்பலைக் கொண்டு செல்ல அனுமதிக்கக் கூடாது என்று உத்தர விட்டிருந்தது.

இந்த வழக்கு மீண்டும் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, ராதாகிருஷ்ணன் தலைமையிலான குழு கப்பலில் இருந்து மீனவர்களை துப்பாக்கியால் சுட உத்தரவிட்டது யார் என்றும், கப்டன் உத்தரவிட்டாரா? அல்லது இத்தாலியக் கடற்படை அதிகாரி உத்தர விட்டாரா? என்றும் கேள்வி எழுப்பியது. அதற்கு கப்பல் நிறுவனம் சார்பில்முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்ததாவது:

கப்பல் பாதுகாப்புக்கும், கப்பல் கப்டனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இத்தாலிய கப்பல் உரிமையாளர் சங்கமும், இத்தாலிய கடற்படைக்கும் இடையே உள்ள ஒப்பந்தத்தின் படி கப்பலுக்கு கடற்படைதான் பாதுகாப்பு அளிக்கிறது. எனவே கப்பல் பாதுகாப்பில் கப்டன் தலையிட முடியாது.

கப்பலில் உள்ள குழுவில் கப்டனின் அறிவுரையின் படிதான் கடற்படை வீரர்கள் செயற்படுகின்றனர். இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள கடற்படை வீரரான லெஸ்தோரே மாஸிமிலியானோ தான் என்ட்ரிகா லெக்ஸி கப்பலில் உள்ள கடற்படை குரூப் கப்டன்- என்றார்.

இதையடுத்து நீதிமன்றக் குழு அளித்த தீர்ப்பில் தெரிவித்ததாவது:

மீனவர்களின் உறவினர்கள் நட்ட ஈடு கேட்டு தொடர்ந்த வழக்கில் நீதிமன்றத்துக்கு வெளியே சமரசமாகப் பேசித் தீர்க்க முடியுமா? என்பது குறித்து கப்பல் நிறுவனம் தெரிவிக்க வேண்டும். நட்ட ஈடாக ரூ.3 கோடி வங்கி உத்தரவாதம் அளிக்கும் வரை இந்திய கடல்பகுதியை விட்டு கப்பலைக் கொண்டு செல்லக் கூடாது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதால், அது தொடர்பான விவரங்களை இன்றைய தினத்துக்குள் தாக்கல் செய்ய வேண்டும். இது நட்ட ஈடு தொடர்பான இறுதி உத்தரவு அல்ல. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மற்ற விசாரணையை இந்த உத்தரவு பாதிக்காது. இவ்வாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' – மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலெக்ட்ரிக்' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## சரத் பொன்சேகாவும் சவேந்திர சில்வாவும்

சிங்கள மக்களுக்கு வடக்குத் தமிழர்கள் எப்போதும் அந்நியர்களாகவே சித்திரிக்கப்பட்டு வந்திருக்கின்றனர். அவர்களுக்கு வடக்கை அடிமைப்படுத்துவது என்பது வேறொரு தேசத்தை படையெடுத்துச் சென்று கைப்பற்றிக்கொள்வதற்குச் சமமானதாக இருந்து வந்திருக்கின்றது. இதனை இலங்கை வரலாற்றுப் பக்கங்கள் முழுவதும் சொல்லியிருக்கின்றன. அவ்வாறு படையெடுத்து தமது சூழ்ச்சிகளால் தமிழர்களை அடிமைப்படுத்திய சிங்களத் தலைவர்களை இந்த நாட்டில் கதாநாயகர்களாக வைத்துக் கொண்டாடப்படும் வரலாறு இருந்துதான் வருகிறது.

ஆனால் சில தருணங்களில் இது பொய்த்துப் போய்விடுகிறது. இலங்கை அரசியல் சிங்கள மக்கள் கதாநாயகர்களாகக் கொண்டாடப்பட வேண்டியவர்கள் சிறைக்குள் தள்ளிவிடுகிறது.

இந்த நூற்றாண்டிலும் தமிழர்களை மீள முடியாத இடர் சுரங்கத்துக்குள் தள்ளிய யுத்தம் ஒன்றை சிங்கள அரசு ஏவியது. அதை முன்னின்று நடத்திய கதாநாயகர் ஒருவரை சிங்கள மக்களும் அவர்களை மந்தைத்தனமான அரசியல் வெளிக்குள் இழுத்துச்செல்லும் அரசியல்வாதிகளும் சிறைக்குள் தள்ளியிருக்கின்றனர்.

அவர் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைவரும் அறிந்ததே. இலங்கைப் படையில் இருக்கும் சிப்பாய் தொடக்கம் உயர்நிலை அதிகாரிகள் வரை செய்யும் அட்டூழியங்களைத் தான் அவரும் செய்தார். ஆனால் அவரை மிக மோசமான சிங்கள தேசிய விரோதியாகக் காட்டி இலகுவாக மக்கள் விரோதி ஆக்கிவிட்டனர். இன்றைய நிலையில் பெரும்பாலான சிங்களவர்கள் மத்தியில் சரத் பொன்சேகா ஒரு தேசத் துரோகி.

இப்படி இலங்கை இராணுவத்துறையில் இருக்கும் தேசத்துரோகிகளை இணங்கண்டு சிறையில் அடைக்கும் பொறிமுறை ஒன்று ஆரம்பம் முதலே இருந்து வந்திருக்குமானால் இன்று ஐ.நா.வில் மானங்கெட்ட சவேந்திரசில்வா அரியணையில் இருந்திருக்க மாட்டார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இலங்கைப் பாதுகாப்புச் செயலருடன் இணைந்து சவேந்திர சில்வாவும் வழங்கிய காட்டுமிராண்டித்தனமான கட்டளைகளாலேயே ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. வெள்ளைக் கொடி முதல் அரசியல் கைதிகளாக சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு பகுதியினர் இவரின் கட்டளைக்கு அமைவாகவே கோரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். இதனை நிரூபிக்கக்கூடிய வகையான போர்க்குற்ற ஆதாரங்கள் சர்வதேச ஊடகங்களில் வெளிவந்தன. உதாரணத்துக்கு வெளித்தெரிந்தவர் ஒரேயொரு சவேந்திர சில்வா மட்டும்தான். ஆனால் இலங்கை இராணுவத்தில் மிக மோசமான காட்டுமிராண்டித்தனம் புரிந்த படையினர் இருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஆயிரம் சவேந்திரசில்வாக்களுக்குச் சமமானவர்கள்.

சவேந்திரசில்வா இவ்வாறான குற்றங்களை இலங்கை மக்கள் மத்தியில் தேச வீரனாக வலம் வரும்போது அதே குற்றங்களையும் அவர் புரிந்த, அதைவிட அதிகமான தமிழர் விரோத காரியங்களையும் செய்த சரத் பொன்சேகா சிறையில் இருப்பது இலங்கை அரசியல் இப்போது ஒழுங்கான துரோகத்தனத்தைக்கூட மையங்கள் கொள்ளாது அலைவதைக் காட்டுகின்றது.

# நான் இலங்கைக்கு எதி



வெளிநாட்டு அரசு அல்லது வெளி அமைப்புக்களின் தலையீடுகள் இதில் இல்லாவிட்டால் நீண்டகாலப் போக்கில் தமிழ் மக்கள் மட்டுமல்லாது, இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் பெரும் துன்பங்களைச் சந்திக்க வேண்டி வரும்.

இவ்வாறு கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரான ஆர்.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

**கேள்வி:** கடந்த வாரம் இலங்கை ஜனாதிபதியுடன் தாங்கள் மேற்கொண்ட சந்திப்பின் போது என்ன நடந்தது?

**பதில்:** ஜனாதிபதி விடுத்த அழைப்பின் பேரில் கடந்த புதன்கிழமை மாலை 5 மணிக்கு அலரி மாளிகையில் வைத்து அதிபரை நான் சந்தித்துக் கொண்டேன். இது எங்கள் இருவருக்கும் இடையில் இடம்பெற்ற தனிப்பட்ட சந்திப்பாக அமையவில்லை. இச் சந்திப்பில், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, அதிபர் செயலாளரான லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நான் மட்டுமே ஜனாதிபதியுடன் பேச்சில் கலந்துகொண்டிருந்தேன். கூட்டமைப்புக்கும் இலங்கை அரச பிரதிநிதிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் சுற்றுப் பேச்சுக்களின் தற்போதைய நிலைப்பாடு மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு போன்றன தொடர்பாக இதில் கலந்துரையாடப்பட்டது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களை உள்வாங்கத்தான் விருப்பம் கொண்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். செப்ரெம்பர் 02 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதியுடன் மேற்கொண்ட சந்திப்பின் போது, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பது தொடர்பில் இணக்கமான உடன்பாடொன்றை எட்டிக் கொள்ள வேண்டும் என நான் அவரிடம் தெரிவித்திருந்தேன்.

ஐந்து மாதங்களில் ஏழு சுற்றுப் பேச்சுகள் நடத்தப்பட்ட போதிலும், அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் எம்மால் வழங்கப்பட்ட தீர்வுத் திட்டம் தொடர்பாக இலங்கை அரச பிரதிநிதிகள் எந்தவொரு பதிலையும் வழங்காததால், இரு தரப்புக்கும் இடையிலான பேச்சுக்கள் ஓகஸ்ட் 04 இல் இடைநிறுத்தப்பட்டன.

பின்னர் சில சந்தர்ப்பங்களில் அவசரமாகச் சந்திக்க வேண்டியிருந்ததால் பேச்சுக்களில் ஈடுபட்டோம். அதிலும் தமிழ் மக்களின் பிரச்சினை சரியான வகையில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் அக்கறையுடன் செயற்பட்டோம்.

கே: நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தங்களால் ஏன் தீர்வை எட்ட முடியாது?

ப: இலங்கை அரசின் பிரதான கட்சியான சுதந்திரக் கட்சியுடன் நாம் ஒரு ஆண்டுக்கும் மேலாக பேச்சக்களை மேற்கொண்டுள்ளோம். இக்கட்சியுடன் மேற்கொள்ளும் பேச்சுக்களில் சில முக்கிய விடயங்கள் தொடர்பில் தீர்வை எட்ட முடியாவிட்டால், இலங்கை அரசின் கடும்போக்காளர்கள் சிலரை உறுப்பினர்களாகக் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலம் தீர்வை எட்டமுடியும் என நான் நினைக்கவில்லை.

கே: இந்த விடயத்தில் ஜாதிக ஹெல உறுமய கடும்போக்கைக் கடைப்பிடிக்கும் என நீங்கள் கருதுகிறீர்களா?

ப: நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இலங்கை அரசின் பிரதான கட்சியான சுதந்திரக் கட்சியானது அரசாங்கத்தில் 95 சதவீத பிரதிநிதித்துவத்தைக் கொண் [illegible] சுதந்திரக் கட்சியால் கூட, கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட சில முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் தீர்வை எட்டமுடியாவிட்டால் வேறு எவராலும் இதனை நிறைவேற்ற முடியாது என்றே நான் கருதுகிறேன்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் எட்டப்பட்ட உடன்பாட்டின் பிரகாரமே தற்போது பேச்சுக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் அடிப்படையில் இந்த உடன்படிக்கையின் விதிகள் மீறப்பட்டுள்ளன.

கே: நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பதற்கான உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் தாங்கள் முற்றிலும் ஆர்வம் காட்டவில்லையா?

ப: இதனை ஊடகங்களின் ஊடாக நான் கையாள முடியாது. கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பாக நான் அதிபரிடம் விரிவாக விளக்கியுள்ளேன். அத்துடன் இது தொடர்பில் அதிபர் தனது ஈடுபாட்டை காண்பிக்க வேண்டும் எனவும் நான் கேட்டுக் கொண்டுள்ளேன்.

கே: இது தொடர்பில் ஜனாதிபதியின் பதில் என்ன?

ப: அவர் என்னைப் பார்த்தார். அத்துடன் சந்திப்பில் கலந்து கொண்ட ஏனையவர்களையும் பார்த்தார். பின்னர் நாம் சந்திப்பை நிறைவு செய்து கொண்டோம்.

கே: இலங்கை ஜனாதிபதியோ அல்லது கூட்டமைப்பினரோ தமது நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்காத வரை இரு தரப்புகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டிருக்குமா?

ப: நாம் இதில் பின்வாங்க வேண்டும் என்பதை நான் கூறிக் கொள்ளவில்லை, ஆனால் குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுகின்ற இந்த நேரத்தில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பத[illegible] கூட்டமைப்பு உறுப்பினர்களின் பெயர்களை தருமாறு கோரியதானது உண்மையில் நியாயமற்ற செயலாகும்.

கே: ஜெனிவாவில் காண்பிப்பதற்காக இலங்கை ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நகர்வாக இது உள்ளது என நீங்கள் கருதுகிறீர்களா?

ப: எனக்குத் தெரியாது. இது தொடர்பில் ஆராய நான் விரும்பவில்லை. ஆனால் உண்மையில் என்ன நடந்ததென்பதை நான் தெரியப்படுத்தியுள்ளேன். நாங்கள் எமது மக்களுக்காக பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளோம்.

இலங்கை என்ற இத்தீவை இரண்டாகப் பிளவுபடுத்தாது, நியாயமான, நடைமுறைக்குச் சாத்தியமான, பயனுள்ள அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான பேச்சுக்களிலேயே நாம் ஈடுபட்டுள்ளோம் என நாம் எமது மக்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம். இதனை கூட்டமைப்பு தனது கவனத்தில் கொண்டுள்ளது. என்னைச் சூழ பெரும் எண்ணிக்கையிலான மக்கள் காத்திருக்கின்றனர்.

ஆனால் நீங்கள் இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், தங்களை மக்கள் நம்பமாட்டார்கள் என நான் ஜனாதிபதியிடம்எடுத்துக் கூறினேன். நான் சொன்னதை அவர் ஏற்றுக் கொண்டார். ஜனாதிபதி உண்மையில் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கே: ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையானது பிரேரணை ஒன்றை எதிர்நோக்கவுள்ளது. இதற்கு அனைத்துலக சமூகமானது எவ்வாறான பதிலை வழங்கும் என நீங்கள் நம்புகிறீர்கள்?

ப: அவர்கள் சரியான பதிலை வழங்குவார்கள் என நான் நம்புகிறேன்.

கே: இப்பிரேரணையானது இலங்கைக்கு எதிராக மேற்குலக நாடுகளால் மேற்கொள்ளப்படும் சதி என இலங்கை அரசு கூறிவருகிறது. இதனை நீங்கள் ஏற்றுக் கொ

ப: இலங்கையில் எந்தவொ
நேரான வழியில் அல்லது சரிய
மேற்கொள்ளப்படுவதில்லை.
பிரதிநிதிகள் குழுவால் இலங்
பதியிடம் கையளிக்கப்பட்ட
என்ன நடந்தது?

இதேபோன்று நல்லிணக்க
வின் வேலைத்திட்டங்கள் ஏ
செய்யப்படாது இடைநிறுத்
இதனை இடைநிறுத்தியவர்கள்
இவ்வாறு செய்தார்கள்?

அனைத்துலக சமூகத்துக்கு
பாடு நன்றாகத் தெரியும். நா
விடயங்களையும் அறி வை
அத்துடன் இலங்கையில் இ
இறுதிக்கட்ட யுத்தத்தின்போது
என்ன நடந்ததென்பதை உ
கொள்வதற்காக அனைத்துல
விசாரணை ஒன்று மேற்கெ
வேண்டிய தேவையுள்ளது.

கே: இடம்பெற்ற நிகழ்வு
இடம்பெற்று வருவதாக நீங்க
களா?

ப: யுத்தத்தின் போது மட்
களுக்கு எதிராக வன்முறைகள்
விடப்படவில்லை.

1956, 1958, 1961, 1977,
மற்றும் அதற்குப் பிற்பட்ட
களிலும் தமிழ் மக்கள் வன்
உள்ளாகியுள்ளனர். இதனால்
பாதிப்புக்களைச் சந்தித்துள்
அவலங்களுக்கெல்லாம் சர்வ
தில் ஆதரவோடு நியாயமான
எடுக்கப்படவேண்டும். அதற்
சமூகத்தின் அழுத்தம் அவசிய

கே: இந்த விடயத்தில்
சமூகத்தின் அழுத்தங்கள் தெ
மேற்கொள்ளப்பட வேண்டும்
விரும்புகிறீர்களா?


ப: எனது அறிவுக்கு எ
யில்,இலங்கை அரசானது தான
தமிழ் மக்களுக்கு தீர்வை
போவதில்லை. அது ஒருபோது
மாட்டாது. அதாவது தமிழ் மக்
பிரச்சினைக்கான தீர்வு காண
டும் என்பதில் இலங்கை அர
சொந்தப் புத்தியைப் பயன்படு

மே 2009இல் மனித
பேரவையில் உரையாற்றி
சமரசிங்க "அரசியல் ரீதியான நட
ஊடாகவே அரசியற் தீர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரானவன் அல்லன்

## இரா. சம்பந்தன்



- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நான் மட்டுமே ஜனாதிபதியுடன் கலந்து கொண்டிருந்தேன்.
- அவர் என்னைப் பார்த்தார். அத்துடன் சந்திப்பில் கலந்து கொண்ட ஏனையவர்களையும் பார்த்தார். பின்னர் நாம் சந்திப்பை நிறைவு செய்து கொண்டோம்.
- இதனை ஊடகங்களின் ஊடாக நான் கையாள முடியாது. கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பாக நான் ஜனாதிபதியிடம் விரிவாக விளக்கியுள்ளேன்.
- எனது அறிவுக்கு எட்டிய வரையில், இலங்கை அரசானது தானாக நினைத்து தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்கப் போவதில்லை. அது ஒருபோதும் நடைபெறமாட்டாது
- இலங்கை என்ற இத்தீவை இரண்டாகப் பிளவுபடுத்தாது, நியாயமான, நடைமுறைக்குச் சாத்தியமான, பயனுள்ள அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான பேச்சுக்களிலேயே நாம் ஈடுபட்டுள்ளோம்.
- நான் சிங்கள மக்களுக்கு எதிரானவன் அல்லன் என்பதால் சிங்கள மக்களுக்கு எதிரான பிரேரணையாக நான் அதனைக் கருதவில்லை.

கொள்கிறீர்களா?
வாரு விடயமும்
ரியான வழியில்
ல. சர்வ கட்சி
லங்கை ஜனாதி
அறிக்கைக்கு

க ஆணைக்குழு
ஏன் நிறைவு
றுத்தப்பட்டது?
கள் யார்? ஏன்

கு இந்த நிலைப்
நாங்கள் எல்லா
வைத்து ளோம்.
இடம்பெற்ற
து உண்மையில்
றுதிப்படுத்திக்
துவக சுயாதீன
கொள்ளப்பட

வுகள் மீளவும்
கள் கருதுகிறீர்

மட்டும் தமிழர்
ள் கட்டவிழ்த்து

7, 1981, 1983
காலப்பகுதி
ாமுறைகளுக்கு
அவர்கள் பல
ள்ளனர். இந்த
வதேச சமூகத்
ன தீர்வொன்று
தற்கு சர்வதேச
யம்.

அனைத்துலக
தொடர்ச்சியாக
ம் என நீங்கள்

எட்டிய வரை
னாக நினைத்து
வ வழங்கப்
தும் நடைபெற
க்களின் இனப்
ணப்பட வேண்
ரசானது தனது
த்த மாட்டாது.
உரிமைகள்
றிய மகிந்த
வடிக்கைகளின்
எட்டப்படும்''

எனத் தெரிவித்திருந்தார். இவர் இவ்வாறு அறிவித்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. அவர் கூறிய அரசியற் தீர்வு எங்கே?

கே: ஜெனீவா கூட்டத் தொடரில் முன் வைப்பதற்கான மூலோபாயம் ஒன்றைத் தான் கொண்டுள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பான தங்களின் பதில் என்ன?

ப: கற்றுக் கொண்ட பாடங்களுக்கான ஆணைக்குழுவானது இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட ஒன்றாகும். அரசால் முன் வைக்கப்பட்ட ஆணைக்குழு ஒன்று அரசுக்கு எதிராக குற்றங்களை முன்வைக்கமாட்டாது.

ஐ.நா செயலாளர் நாயகத்தால் நியமிக்கப் பட்ட வல்லுனர் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கைக்கு பதிலளிக்கும் முகமாகவே நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை உள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது. இந்நிலையில் இவ் ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதற்கான எந்தவொரு உறுதிப்பாடுகளும் வழங்கப் படவில்லை.

அரசில் உள்ள அதிகாரிகள் இது தொடர் பாக பல்வேறு மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். மகிந்த சமரசிங்க கூட இப்பரிந்துரைகள் அனைத்தும் நடை முறைப்படுத்தப்படமாட்டாது எனத் தெரி வித்திருந்தார்.

கே: இதன் கருத்து என்ன?

ப: இலங்கை அரசானது கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட விடயங் களை நடைமுறைப்படுத்த மாட்டாது என்பதே இதன் கருத்தாகும். குறிப்பிட்ட காலத்தின் பின்னர் இப்பரிந்துரைகள் அனைத்தும் மறந்த சொத்தாகப் போய்விடும்.

அனைத்துலக சமூகத்தால் இது தொடர் பில் அழுத்தங்கள் வழங்கப்படும் போது மட்டுமே இந்தப் பரிந்துரைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும். இல்லையெனில், ஏனைய அறிக்கைகள் போன்று நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும் பயனற்றுப் போய்விடும்.

கே: இது தொடர்பில் அனைத்துலக அழுத் தங்கள் தொடரப்பட வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்களா?

ப: நிச்சயமாக, ஆணைக்குழுவின் பரிந் துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதற் கான ஒரேயொரு வழியாக இது மட்டுமே உள்ளது. வெளிநாட்டு அரசுகள் அல்லது வெளி அமைப்புக்களின் தலையீடுகள் இதில் இல்லாவிட்டால் நீண்ட காலப் போக் கில் தமிழ் மக்கள் மட்டுமல்லாது, இலங்கை யில் உள்ள அனைத்து மக்களும் பெரும் துன் பங்களைச் சந்திக்க வேண்டி வரும். ஆகவே, இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் நலன் பெறத்தக்க வகையில் அனைவரும் இந்த விடயத்தில் இணைந்து செயற்பட வேண்டும்.

கே: கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நீங்கள் தற்போது ஏற்றுக் கொள்கிறீர்களா?

ப: யுத்த கால பொறுப்புக் கூறல் விடயத் தில் நாம் இந்த அறிக்கையை நிராகரிக் கிறோம். பாதிக்கப்பட்ட மக்களை இவ் அறிக்கை கவனத்தில் கொள்ளவில்லை. ஆனால் பெரும்பாலான விடயங்களில் இவ் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டதை நாம் நிச்சயம் வரவேற்றுக் கொள்கிறோம். ஆகவே இப்பரிந்துரைகள் நிறைவேற்றப் படும் பட்சத்தில் மட்டுமே உண்மையில் இவ் ஆணைக்குழுவின் அறிக்கை உண் மைத்தன்மை மிக்கதாக இருக்கும்.

கே: இலங்கை அரசானது இந்த ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற முற்பட்டால் யுத்த கால மீறல்கள் தொடர் பிலும் பொறுப்புக் கூறும் என நீங்கள் கருதுகிறீர்களா?

ப: அரசுக்கு ஆலோசனை கூற நான் விரும்பவில்லை. அரசானது தன்னால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு வின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண் டும். அத்துடன் இந்த விடயத்தில் இது இதய சுத்தியுடன் நடந்து கொள்ள வேண்டும்.

கே: இலங்கைக்கு அண்மையில் வருகை தந்திருந்த அமெரிக்க அதிகாரிகளை தாங் கள் சந்தித்தபோது, அவர்களிடம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொட ரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் முன்வைக்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ள பிரேரணை தொடர்பாக வலியுறுத்தினீர் களா?

ப: நான் இலங்கைக்கு எதிரானவன் அல்ல என்பதால் இலங்கைக்கு எதிரான பிரே ரணை என நான் அதனைப் பார்க்கவில்லை. நான் சிங்கள மக்களுக்கு எதிரானவன் அல் லன் என்பதால் சிங்கள மக்களுக்கு எதிரான பிரேரணையாக நான் அதனைக் கருதவில்லை.

எனது மக்கள் நீதியுடனும் சமத்துவத் துடனும் வாழவேண்டும் என்பதற்காகவே நான் என்னை அர்ப்பணித்துள்ளேன். ஆக[illegible] யுள்[illegible] வேண்டும்.

(நன்றி: புதினப்பலகை)

# இரும்புக்கு மாய்கின்றன வயல்கள்

விநோதன்

**யாழ்.** குடாநாட்டில் பெரும் நெல் வயல் பிரதேசமான தென்மராட்சி தெற்கு தனங்களப்பு, மறவன்புலோ பகுதிகளில் இவ்வாண்டு கால போக நெற்செய்கை அதிகூடிய விளைச்சல் கண்டிருப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைகின்றனர்.

2004 ஆம் ஆண்டில் இந்தக் கிராமங்களின் மேற்குப் பகுதி மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டதும், அங்கு நெற் செய்கை பண்ணப்பட்டு எழுபது கிலோ கொண்ட ஒரு மூடை நெல் ரூபா நான்காயிரமாகவும், அதற்கு மேலும் விலை போனது. ஏனைய பகுதி 2009 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்டு தற்போது சங்குப்பிட்டி செல்லும் வீதியில் அறுகுவெளி வரையான பிரதேச வயல்கள் யாவுமே நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இங்கு அறுவடை முழுவீச்சில் ஆரம்பமாகியுள்ளது. கடந்த காலங்களில் அறுவடையை மக்களே கையால் வெட்டி வந்தனர். கடந்த காலப் போகத்தின் போது அறிமுகமான கையால் இயக்கி வெட்டும் அறுவடை இயந்திரமும், வெட்டி அடித்து நெல்லாக்கும் இயந்திரம் சில, இங்கு அறுவடையில் அறிமுகமாகின. ஆனால் இவ்வாண்டு தற்போது பல இயந்திரங்கள் வயல் வெளிகளில் அறுவடையில் ஈடுபட்டு வருகின்றமையைக் காணலாம்.

அறுவடைக்கு ஆள்களைப் பிடிப்பதில் உள்ள சிரமம், கூலியின் உச்சப்பாடு காரணமாக தொண்ணூறு வீதமானவை வெட்டி அடிக்கும் அறுவடை இயந்திரம் மூலமே அறுவடை நடைபெற்று வருகிறது. முன்பெல்லாம் தைப்பொங்கலின் பின் ஆரம்பமாகும் அறுவடை, பங்குனி மாதம் வரை நீண்டு செல்லும்.

அறுவடை ஆரம்பிக்கும் போது நெல் வயலில் சைவசமய உழவர் பாரம்பரிய முறைப்படி பிள்ளையார் பிடித்து வைத்து, கற்பூரம் கொழுத்தி, தேங்காய் அடித்து வயலில் அறுவடையை விவசாயிகள் தொடங்குவர். பின்பு அவை சூடு ஆக குவித்து வைத்து நல்ல நாளில் வைக்கப்பட்ட நெற் சூடு நெற்குவியலை வடக்கு அல்லது கிழக்குப் பக்கமாக பாயிலோ - படங்கிலோ சரித்துப் போட்டு, முன்பு மாடுகளைப் பிணைத்து சூடு அடிப்பர். பின்பு ரைக்டர் இயந்திரத்தினாலும் சூடு அடிப்பர். அதைப் பின்பு, தூற்றி நெல் குவியலைக் காவல் பண்ணி, அதன் மேல் அழகாகக் கோலம் போட்டு, குறிவைத்து, வைரவர் சூலம் எழுதி, குல்லம் எனச் சொல்லப்படும் சுளகில் அள்ளி, ஒரு குல்ல நெல்லைத் தமது வழிபடும் ஆலயத் திற்கு வைத்து விட்டு, சாக்குகளில் மீதியை மூடை களாகக் கட்டுவர். இது முந்திய வழமையாக நடைமுறையில் இருந்து வந்தது.

> “அறுவடை ஆரம்பிக்கும்போது நெல் வயலில் சைவசமய உழவர் பாரம்பரிய முறைப்படி பிள்ளையார் பிடித்து வைத்து, கற்பூரம் கொழுத்தி, தேங்காய் அடித்து வயலில் அறுவடையை விவசாயிகள்

இன்று எல்லாம் மாறிப் போனது! நினைத்த நேரத்தில் வசதிக்கேற்றபடி வெட்டி அடிக்கும் அறுவடை இயந்திரம், வயலில் இறங்கி வெட்டி நெல்லைத் தன் அகத்தே வைத்து, வைக்கோலை சக்கையாக - தூள் தூளாக வெளியில் தள்ளிவிடும். பின்பு நெல்லை உழவு இயந்திரப் பெட்டியிலோ, சாக்குகளிலோ போட்டு விவசாயிகள் எடுத்துச் செல்கிறார்கள்.

ஒரு சிலர் மாடுகளின் உணவுக்காக வைக்கோலின் தேவை கருதிப் பழைய முறையிலும் அடிப்பதைக் காணலாம். இந்த ஆண்டு நெல் அதி உச்ச விலைக்கு வரக் கூடும். தற்போது எழுபது கிலோ எடை கொண்ட ஒரு மூடை நெல் ஆயிரத்து ஐந்நூறிலிருந்து, ஆயிரத்து எழுநூறு வரை விலை போகிறது. நெல் தரம், இனம் கருதியே விலையில் இவ்வித வேறுபாடும் விலைவீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது. தற்போது இங்கு அரிசி ஆலைகளில் ஒரு கிலோ ரூபா 55 முதல் 65 வரை விற்கப்படுவதால் பாவனையாளர்களுக்கு இது மகிழ்ச்சி தான்.

இவ்வாண்டு இங்கு சுமார் நான்கு ஐந்து விவசாயிகள், அதி உயர்தரச் சம்பா நெல்லைப் பரீட்சார்த்தமாக விதைத்திருந்தனர். இரண்டு ஏக்கர் வயலில் முதல் தர சம்பா நெல்லை - பழம் பெரும் விவசாயி ஆன வியாழரத்தினம் தியாகராசா என்பவர் விதைத்திருந்தார். அந்த நெல் திறமையாக, செழுமையுடன் வளர்ந்து அதிகூடிய வளர்ச்சி கண்டிருந்தது. இதனை உயர் விவசாய அதிகாரிகளும், பெரும் எண்ணிக்கையான விவசாயிகளும் வந்து பார்வையிட்டனர். தற்போது அது அறுவடை செய்யப்பட்டுள்ளது. ஓர் ஏக்கருக்கு சுமார் முப்பது மூடை வரை விளைச்சல் கண்டுள்ளதால், அவ்விவசாயியின் விவசாயத் திறமையைப் பலரும் பாராட்டி வருகின்றனர். எழுபது வயதான 'தியாகர்' என அழைக்கப் படும் அவர், தன் சொந்த உழவு இயந்திரத்தை இன்றும் தானே ஓட்டிச் சென்று தமது விவசாய வேலைகளைக் கவனித்துச் செய்து வருகிறார்.

இங்கு தற்போது விவசாய வேலைகளுக்குக் கூலி ஆள்கள் இல்லாத காரணத்தால் எதிர்காலம் எல்லா வேலைகளும் இயந்திர மயமாகவே மாறிவிடும் என பழம் பெரும் விவசாயிகள் கருதுகிறார்கள். ✱



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அம்மாவா... அப்பாவா...?

ஒரு சிறுவனிடம் உங்கள் வீட்டில் அம்மா புத்திசாலியா? அப்பா புத்திசாலியா? என்று கேட்டார் ஒரு பெரியவர். அவன் அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே "என்ன ஐயா, இந்தக் காலத்தில் இது கூடவா தெரியாமல் இருக்கிறீர்கள்? அம்மாதான் புத்திசாலி" என்றான். இதற்கு உதாரணமாக ஒரு கதையைக் கூறலாம்.

ஓர் ஊரில் அம்மாவும் மகனும் இருந்தார்கள். அந்த மகனுக்கு திடீரென்று ஊரைச் சுற்றிப் பார்க்க ஆசை வந்துவிட்டது. அந்த அம்மாவுக்கு இது பிடிக்கவில்லை. மகனைப் பிரிந்து இருப்பதற்கு அவர்களுக்கு மனம் இடம்கொடுக்கவில்லை. "வேண்டாம்" என்று சொல்லிப் பார்த்தார். அவன் கேட்கவில்லை. "போயே தீருவேன்" என்று ஒற்றைக் காலில் நின்றான். திடீரென்று அவன் புறப்பட்டும் விட்டான். இனி இவனைத் தடுக்க முடியாது என்று முடிவு செய்துவிட்டார் அந்த அம்மா. இருந்தாலும் புத்திசாலித்தனமாக ஒரு யோசனை செய்தார். மகனைக் கூப்பிட்டு "நீ புறப்படத் தீர்மானம் செய்து விட்டாய். அதை நான் தடுக்கவில்லை. போய்வா. ஆனால் போவதற்கு முன்னால் எனக்கு ஒரு வாக்குறுதி கொடுத்துவிட்டுப் போ என்றார். "போகும்போது இரவாக இருந்தாலும் சரி, பகலாக இருந்தாலும் சரி புளியமரத்து நிழலிலேயே தங்க வேண்டும். திரும்பி வரும்போது இரவும் பகலும் நீ வேப்பமரத்து நிழலில் தங்க வேண்டும்" என்றார்.

"சரி அப்படியே செய்கிறேன்" என்று வாக்குக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார் மகன். போகும் வழியில் புளியமரத்து நிழலில் தங்கினான். தூங்கினான். அவ்வாறு ஒவ்வொரு நாளாக போய்க் கொண்டிருந்தான். ஏழாவது நாள் அவன் உடம்புக்கு முடியாமல் போய்விட்டது. மிகவும் பலவீனமடைந்துவிட்டான். நடக்க முடியாத நிலைமை யோசித்துப் பார்த்தான். இதற்கு மேல் நடக்க முடியாது என்று நினைத்துத் திரும்பிவிட்டான். திரும்பி வரும் வழியில் "வேப்பமரத்து நிழலில் தங்கித் தங்கி வந்தான். நாளுக்கு நாள் உடம்பு நிலை குணமடைந்தது. ஏழாம் நாள் வீட்டுக்கு வந்து சேரும் போது உடம்பு பூரண சுகமடைந்துவிட்டது.


மகன் திரும்பி வந்துவிட்டானே என்று அந்த அம்மா ஆச்சரியப்படவில்லை. ஏனென்றால் அவருக்குத் தெரியும். இப்படி நடக்கும் என்று. மகன் வெகுவிரைவில் திரும்பி வரவேண்டும் என்பதற்காகத்தான் அவர் இந்த யோசனையைக் கூறினார். அதற்குரிய காரணத்தையும் அவரே சொன்னார்.

"மகனே புளியமரத்து நிழல் உடம்புக்கு உஷ்ணத்தைக் கொடுக்கும். அதனால் நீ தொடர்ந்து புளியமரத்து நிழலில் தங்கியதால் நோய்க்கு ஆளாகிவிட்டாய். அதனால் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பி வந்துவிட்டாய். திரும்பிவிடும் போது நீ தங்கியது வேப்பமரத்து நிழல். அது உடம்புக்கு குளிர்ச்சியைத் தரக் கூடியது. நோயைத் தீர்க்கக் கூடியது. அதனால் சுகமாக வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டாய். உன்னுடைய பயணத்தைத் தடுப்பதற்குத்தான் இப்படிச் செய்தேன்" என்றார் அந்த அம்மா.

அம்மாவின் புத்திசாலித்தனம் இது. ஓர் அப்பா இருந்தார். அவர் 10 ரூபாவைத் தன் மகனிடம் கொடுத்து "அடுத்த ஊருக்குப் போய் அங்கே இருக்கும் மாமாவிடம் கொடுத்துவிட்டு வா வழியில் எங்கேயாவது மரத்தடியில் படுத்துத் தூங்கிவிடாதே" என்று எச்சரிக்கை செய்து அனுப்பினார்.

எச்சரிக்கையாக வாழ்வது எப்படி என்பதை மகனுக்குப் புரிய வைக்கவே இப்படிச் செய்தார். அவன் பணத்தை வாங்கிக் கொண்டு போனான். அப்பா சொன்னதை மறந்து ஒரு மரத்தடியில் படுத்துத் தூங்கிவிட்டான். அவனுக்குத் தெரியாமல் அவன் பின்னால் போன தந்தை அவன் கையில் இருந்த பணத்தை எடுத்துக் கொண்டு திரும்பிவிட்டார். மகன் முழித்துப் பணத்தை தேடினான். காணவில்லை. அழுது கொண்டே திரும்பிவந்து அப்பாவிடம் விடயத்தைக் கூறினான்.

அப்பா சிரித்துக்கொண்டே "அதற்குத்தான் ஆரம்பித்திலேயே எச்சரிக்கை செய்தேன். இனி மேலாவது நீ கவனமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிச் செய்தேன். அந்தப் பணம் எங்கேயும் போகவில்லை. நான்தான் அதை உனக்குத் தெரியாமல் எடுத்து வைத்திருக்கிறேன். இதோ அந்தப் பணம் என்று பொக்கெற்றுக்குள் கையை விட்டார். அதில் துவாரம் ஏற்பட்டிருந்தது. அதை எவரோ வெட்டி எடுத்துக் கொண்டு போய்விட்டார்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**



# தமிழ்ப் பாரம்பரியத்தோடு வளர்ந்து வரும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.



**1952** ஆம் ஆண்டு விஜயதசமி அன்று வித்தியா ஆரம்பத்துடன் ஆவரங்கால் மண்கட்டியான் கலட்டி வளவில் ஆரம்பமாகியது. ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம். இது ஊர்ப் பொதுமக்களின் ஒத்துழைப்போடு வளர்ச்சியடைந்து கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் தரம் இரண்டு பாடசாலைகளில் முன்னணியில் உள்ளது.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் ஆவரங்கால் சிவன் கோயிலுக்கு (நடராஜ இராமலிங்க கேஸ்வரம்) மேற்கு புறமாகச் செல்லும் சிவன் வீதியில் 200 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

ஆவரங்கால் கிராமத்தில் சைவமும் தமிழும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உயர் நோக்கோடு நாவலரின் வழியைப் பின்பற்றி சைவத்தமிழ் பாடசாலை ஒன்றை சடையர் உபாத்தியார் என்பவர் பிரதான வீதியில் ஆவரங்கால் சந்திக்கு அண்மையில் ஆரம்பித்து நடத்தி வந்ததாகவும். அவரால் அதனை தொடர்ந்து நடத்த முடியாத நிலையை அறிந்து மெதடிஸ்த மிஷனரிமார் விலைக்கு வங்கி மெதடிஸ்த மிஷன் பாடசாலை என்ற பெயரில் இயங்கி வந்தது. அதன் பெயர் பிற்காலத்தில் ஆவரங்கால் மகா ஜன வித்தியாலயம் என பெயர் மாற்றம் செய்யபட்டுள்ளது.

மெதடிஸ்த மிசன் பாடசாலை செயற்படத் தொடங்கிய காலச்சூழல் மதமாற்றத்துக்கும் சைவத்தமிழ் பாரம்பரியத்துக்கும் மாறுபட்ட நிலையை ஏற்படுத்தி விடும் என்ற அச்சம் பெருமளவில் ஏற்படத் தொடங்கியது. ஆவரங்கால் மக்கள் மத்தியில் இந்த குழப்பம் காரணமான களநிலையில் சைவத்தமிழ் பாடசாலை ஒன்று நிறுவப்பட வேண்டும் என்ற எண்ணம் வலுவடையத் தொடங்கியது. அந்த வகையில் உருவாகியது இந்தப் பாடசாலை.

அந்தக் காலப்பகுதியில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும் ஆவரங்கால் கிராமத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவருமான சட்டத்தரணி மாப்பாணப்பிள்ளை சுப்பிரமணியம் குறித்த இடத்தில் பாடசாலை ஆரம்பிப்பதற்கு காணி வழங்குமாறு கோரி வந்த போது 1935 ஆம் ஆண்டு ஒரு பகுதி நிலம் தர்மசானம் செய்யப் பட்டது. அதனை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சார்பாக சட்டத்தரணி பொறுப்பேற்றுக் கொண்டார்.

தற்போதைய பாடசாலை ஆரம்பிப்பதற்கு முந்திய காலப்பகுதியில் தீராவளவு சின்னத்தம்பி என்பவர் ஒரு திண்ணைப் பள்ளியை மண்கட்டியான் கலட்டி வளவில் ஆரம்பித்து நடத்தி வந்ததாகவும் அந்த இடத்தில் அமைந்திருந்த குளம் மண்கட்டியான் குளம் என்று அழைக்கப்பட்டது. அந்த இடத்தின் பெயரோடு தொடர்புபடுத்தி மண்கட்டியான் பாடசாலை என்று நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தை முதியவர்கள் அழைப்பதுண்டு தற்பொழுதும் அது பேச்சு வழக்கில் கையாளப் படுவதுண்டு.

1952 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் ஆரம்பிக்கப்பட்ட ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலத்தின் பெயர் ஆவரங்கால் கிராமத்தில் பிரதான ஆலயமான நடராஜ இராமலிங்கேஸ்வரனின் பெயரில் நிறுவப்பட்டுள்ளது. பாடசாலையில் ஆரம்பத்தில் 60 மாணவர்கள் இணைந்து கொண்டனர் ஆரம்பத்தில் நான்கு வகுப்புக்கள் (நான்காம் வகுப்பு வரை) செயற்பட்டன இரண்டு ஆசிரியர்கள் பணியாற்றினர்.

1953 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி

**ஞானி**

உதவி நன்கொடை பெறும் கனிஷ்ட இடைநிலைப் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. பாடசாலையின் முதலாவது அதிபராக கோப்பாயைச் சேர்ந்த வை. கந்தையா 1953 ஆம் ஆண்டு மே மாதம் பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார் திருமதி எஸ். சிவபாக்கியம், செல்வி. வீ.பொன்னு, செல்வி எஸ்.பொன்னுமாயில், செல்வி கே. அங்கயற்கன்னி, எஸ். ஆனந்தவடிவேல், வி. ஆறுமுகம் திருமதி கு. சிவபாக்கியம், பி.இராசரத்தினம் ஏ. குமரகுரு ஆகியோர் ஆசிரியர்களாக பணியாற்றினர்.

> **1962 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி அரச பாடசாலையாக பொறுப்பேற்கப்பட்டது. அரசாங்கம் பொறுப்பேற்கும் போது ஆவரங்கால் நடராஜ இராமலிங்க இந்து தமிழ்க் கலவன் பாடசாலை எனப் பதிவு செய்யப்பட்டது.**

வை.கந்தையா 17 வருடங்கள் தொடர்ந்து அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் பாடசாலையின் வளர்ச்சிக்கான அடித்தளம் உறுதியான நிலையில் இடம் பெற்றது.

இந்த வகையில் கட்டடங்களினாலும் பாடசாலை தர நிலையிலும் உயர்வு கண்டதோடு மாணவர் தொகையும் அதிகரிக்கத் தொடங்கியது. படிப்படியாக வகுப்புக்களும் அதிகரிக்கப்பட்டு தரம் 9 வகுப்புக்களைக் கொண்டதாக வளர்ச்சி கண்டது.

1962 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி அரச பாடசாலையாக பொறுப்பேற்கப்பட்டது. அரசாங்கம் பொறுப்பேற்கும் போது ஆவரங்கால் நடராஜ இராமலிங்க இந்து தமிழ்க் கலவன் பாடசாலை எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. முதலாவது அதிபராகப் பொறுப்பேற்று பாடசாலையின் வளர்ச்சிக்கு வை. கந்தையா ஆற்றிய அளப்பெரும் பணி பாடசாலைச் சமூகத்தினால் பசுமையுடன் நினைவு கூரப்படுகின்றது.

அச்சுவேலி புத்தூர் பகுதியில் செயற்பட்ட பிரபல பாடசாலைகளுக்கு இடையில் ஆவரங்காலில் ஆரம்பிக்கப்படும் பாடசாலையை பதிவு செய்வதிலும் உரிய முறையில் வளர்த்தெடுப்பதிலும் பல்வேறு இடர்பாடுகள் நெருக்கடிகள் ஏற்பட்ட போதிலும் குறித்த பாடசாலைச் சமூகம் பாடசாலையின் வளர்ச்சிக்கு தங்களால் இயன்றளவில் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி வந்துள்ளது.

ஆரம்பத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் பாடசாலை பொறுப்பேற்பதற்கு பொருத்தமான காணி இல்லை என தயங்கிய நிலையில் இருந்த போதிலும் தற்பொழுது நான்கு ஏக்கர் வளாகத்தில் பொருத்தமான கட்டமைப்புக்களுடனும் வள வசதிகளுடன் செயற்படுகின்றது.

பாடசாலை சமூகம் அக்கறை கொண்டால் தான் பாடசாலைகள் மேன்நிலை பெற முடியும் என்பதற்கு முன்னுதாரணமாக ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் விளங்குகின்றது. தற்பொழுது அதிபராக இலங்கை அதிபர் சேவை தரம் II ஐ சேர்ந்த அ. அருள்நந்திசிவம் அதிபராகப் பணியாற்றி வருகின்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வாழ்க்கை ஒரு தேடலே"

வாழ்க்கை ஒரு தேடல் பயணம் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். ''தேடல் உள்ளவரைதான் பசியெடுக்கும்' என்பது ஒரு கவிஞனின் பாடல் வரிகள். பசியும் தாகமும் தேடல் உள்ளவருக்கே ஏற்படும். தேடல் உள்ள ஒருவரால் மட்டுமே சாதிக்க முடியும், உண்மையைக் கண்டுபிடிக்க முடியும். வாழ்வை அனுபவித்து வாழ முடியும் என்பதே உண்மையாகும். தேடல் உள்ளவரால்தான் புதிய கண்டுபிடிப்புக்களை இந்த உலகத்துக்கு கொடுக்க முடியும். நாம் எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பது முக்கியமல்ல; எப்படி வாழ்ந்தோம் என்பதே வாழ்விற்கு அர்த்தத்தைக் கொடுப்பது. கல்லறைகளில் பிறப்பின் தினமும் சாவின் தினமும் பொறித்து வைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அதற்கிடையில் நடந்ததே நம் வாழ்வாகும். இன்றும் எத்தனையோ மனிதர்கள் வாழ்கின்றார்கள் என்று சொல்லுகின்றனர். ஆனால் உண்மையில் தேடலோடு வாழ்கின்றார்களா? எல்லாவற்றிற்கும் மேலாக நாம் தேட வேண்டியது இறைவனையே. இன்றைய எமது சூழலில் நாம் பெரும்பாலும் உலகம் தரும் தற்காலிக மகிழ்ச்சிகளை, இன்பத்தைத் தேடுவதிலேயே காலத்தைக் கழிந்துவிடுகின்றோம். நிலையற்ற செல்வங்களை, அழிந்து போகும்



## தவக்காலச் சிந்தனை

படைப்புக்களை படைத்தவருக்கு மேலாகத் தேடும் நிலையே காணப்படுகின்றது. இதனால் அர்த்த மில்லாத வாழ்வை வாழுகின்றோம்.

நாம் எங்கிருந்து வந்தோம்? எங்கு நாம் செல்ல வேண்டும்? என்ற அடிப்படையான வினாக்களே எம் வாழ்வை நேரிய திசையில் பயணிக்க உதவுகின்றன. மனிதர்கள் ஒவ்வொருவரும் இறைவனின் கரத்திலிருந்தே உருப்பெற்றவர்கள். எனவே மீண்டும் நாம் சேர வேண்டிய இடம் இறைவனே. இறைவனை அடைவதே எமது வாழ்வின் தேடலாக அமைய வேண்டும். இன்று ஒரு மனிதன் பணத்தைத் தேடலாம், புகழைத் தேடலாம், அதிகாரத் தைத் தேடி வைத்திருக்கலாம்.

ஆனால் அவை அனைத்தும் நிரந்தரமானவையல்ல என்று உணருகின்றபோதே அவனுக்கு வாழ்வின் நிஜம் புரிகின்றது. எதைக் கொண்டு வந்தோம்? நாம் இழப்பை பற்றி பேச என்ற பகவத் கீதையின் உபதேசமும், இழப்பதன் மூலமே வாழ்வை தக்கவைத்துக் கொள்ள முடியும் என்ற பைபிளின் போதனையும் இங்கு எம்மை சிந்திக்க அழைக்கின்றது. எம்மை நாம் இழக்கின்ற போது தான் இறைவனை உரித்தாக்கிக் கொள்ள முடியும். வெறுமையில்தான் பரம் பொருளைக் கண்டுணரமுடியும். இதயத்தை ஆசைகளால் நிரப்பி வைத்துக்கொண்டு இறைவனை அங்கு குடி வைக்க முடியாதல்லவா? இன்று உலக காரியங்களின் மீதுள்ள வேட்கையும், வேகமும், தாகமும், இறைவன் மட்டில் ஏற்படும்போதே உண்மையான அக மாற்றம் ஏற்படுகின்றது. பேராசைகள் நீங்கி போதுமென்ற மனம் பிறக்கின்றது. ஆணவத்தை அடக்கி ஆசைகளை வெல்லும்போதே நாம் உயர்ந்தவர்களாகின்றோம். உலகத்திற்கு சோரம்போய் வாழ்பவர்கள் உலகத்தை வெல்ல முடியாமல் நிம்மதியிழந்து வாழ்கின்றனர். இவ்வுலகில் மகிழ்ச்சியாக வாழ்வது நாம் சேர்த்து வைத்திருக்கும் உலக செல்வங்களினால் அல்ல. மாறாக நல்ல அன்புறவில், மன்னிப்பில், பகிர்வில், பிறருக்கென வாழும் வாழ்க்கை முறையில் என்பதை உணரத்தவறும் போது வாழ்வின் அர்த்தத்தை இழந்துவிடுகின்றோம். மனமாற்றம் என்பது இந்த உண்மையை அனுபவத்தில் பட்டறிந்து வாழ்வதேயாகும்.

அருட்கலாநிதி. ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.

# மெய்வன்மைப் போட்டி

அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் கலந்துகொள்வார். (வ)

# சுகாதார சேவைச் சங்கத்துக்கு வடமாகாண பிரதிநிதி நியமனம்

வடமராட்சி,மார்ச்1

ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைச் சங்கத்தின் வடமாகாண தொழிற் சங்கப் பிரதிநிதியாகப் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பணிபுரியும் ஆர். முகுந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சங்கத்தின் அங்கத்தவர்களிடையே நிலவும் தொழில் ரீதியான பிரச்சினைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக, சங்கத்தின் வடமாகாண செயற்பாட்டாளராகச் செயற்படும் இவருக்கு, தாபனக் கோவைக்கு அமைவாக தேவையான நடவடிக்கை எடுக்க உதவுமாறு சங்கத்தின் தலைவர் டபிள்யூ.கு.டி.விமலரத்ன, வடமாகாண சபை சுகாதார செயலாளர் உட்பட பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆகியோருக்குத் தெரிவித்துள்ளார். (ச-8)

# கல்வியில் வளர வேண்டுமெனில் எம்மை நாமே ஆள வேண்டும்

## சரவணபவன் எம்.பி.கூறுகிறார்



பாடசாலைகளின் அபிவிருத்திக்குத் தடைபோடுவது எமது எதிர்கால சந்ததிக்குச் செய்யும் வரலாற்றுத் துரோகமாகும். இதிலிருந்து நாம் வெற்றிபெற வேண்டுமானால் அச்சம் கொள்ளாது போராட வேண்டும்.

யாழ்ப்பாணம்,மார்ச்1

''எமது கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றில் நாம் முன்னேற வேண்டுமானால் எம்மை நாமே ஆள வேண்டும். இதன் மூலமே எம்மை வளப்படுத்தலாம்'' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

மட்டுவில் தெற்கு வளர்மதி சன சமூக நிலைய மைதானத்திலே நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று பேரினவாதம், எம்மை எமது கல்வியை, பொருளாதாரத்தை திட்டமிட்டே அழித்து வருகின்றது.

தமிழ் மாணவர்களுக்கு பயன் தராத கற்கை நெறிகளைப் புகுத்தி வருகிறது. தென்பகுதியில் பல தொழில்நுட்பக் கல்லூரிகளை அதி நவீன வசதிகளுடன் ஆரம்பித்து வருகிறது. ஆனால் இங்கு அவ்வாறான வசதிகளை, வாய்ப்புக்களை உருவாக்கவில்லை.

இதேவேளை எமது பொருளாதாரத்தில் கை வைக்கும் நோக்கோடு எமது நிதிகளைத் தென்பகுதிக்குக் கொண்டு செல்லும் முகமாக நிதி நிறுவனங்களை இங்கு கொண்டு வந்து நிறுவியுள்ளது. அவர்கள் இலகுவாக வந்துபோக வீதிகளை மட்டும் அமைத்து எமக்கான அபிவிருத்தி என்ற போர்வையில் அவர்கள் முன்னேறி வருகின்றார்கள்.

இதேவேளை இங்குள்ள பாடசாலைகளின் அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் நாம் பாடுபட வேண்டும். பேரினவாதத்துக்கு ஆதரவாக சில கல்வித் திணைக்கள உயரதிகாரிகள் தமது பதவிக்காலத்தை தக்க வைப்பதற்காக பாடசாலைகளின் அபிவிருத்திக்குத் தடை போடுகின்றார்கள். இவ்வாறான நடவடிக்கை எமது எதிர்கால சந்ததிக்குச் செய்யும் வரலாற்றுத் துரோகமாகும். இதிலிருந்து நாம் வெற்றி பெற வேண்டுமானால் அச்சம் கொள்ளாது போராட வேண் டும்- என்றார்.

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் எஸ்.மதியழகன் தலைமையிலே நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டதுடன் தமது பிரதேச அபிவிருத்தி சம்பந்தமான கோரிக்கைகளையும் முன் வைத்தனர்.

(ச-288)

# மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை அதிகாரிகள் சரிவர நிறைவேற்ற வேண்டும்

## வடமாகாண பிரதம செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்1

அரசால் மக்களுக்கு ஆற்றப்படும் சேவைகள் சரியான முறையில் நடைபெறுவதற்கு அரச அதிகாரிகள் தமது பொறுப்புக்களை உரியமுறையில் நிறைவேற்றவேண்டும். அவர்கள் பொறுப்புகளைத் தட்டிக் கழிக்க முடியாது என்று வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலக்சுமி தெரிவித்தார்.

வடமாகாணத்தின் சகல துறை அதிகாரிகளுக்குமான கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் சரியான முறையில் நடைபெற வேண்டும். அதற்கு அதிகாரிகள் தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும். பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்க முடியாது. அதிகமான அதிகாரிகள் தமது பொறுப்புக்களைத் தட்டிக் கழித்து வருகின்றனர்.

வடமாகாணத்தில் 25 ஆயிரத்துக்கும் அதிகமான அதிகாரிகள் கடமையாற்றுகின்றனர். இவ்வளவு எண்ணிக்கையான அதிகாரிகள் இருந்தும் அவர்களில் பலரின் திறமை போதுமானதாக இல்லை.

வினைத்திறனான அதிகாரிகள் வடக்கில் கடமையிலிருந்தும் அவர்கள் முன்னெடுக்கும் செய்திறன் போதுமானதாக இல்லை - என்றார். (ச-3)

வினைத்திறனான அதிகாரிகள் வடக்கில் கட மையிலிருந்தும் அவர்கள் முன்னெடுக்கும் செய்திறன் போதுமானதாக இல்லை.

# கூட்டுறவுச் சங்க பொதுக் கூட்டம்

தென்மராட்சி,மார்ச்1

தென்மராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுச் சபைக் கூட்டம் சங்க மண்டபத்தில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

சங்கத்தின் 19 கிளைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 98 பொதுச்சபை உறுப்பினர்களிலிருந்து ஏழு பேர் கொண்ட இயக்குநர் சபையைத் தெரிவு செய்யுமாறு பொதுச் சபை உறுப்பினர்களிடமிருந்து கோரப்பட்டது.

இந்தநிலையில் பொ.கனகராசா தலைமையில் ஓர் அணியும், க.கணேசலிங்கம் தலைமையில் மற்றொரு அணியும், களத்தில் இறங்கின. அங்கு நடைபெற்ற வாக்கெடுப்பில் பொன்னையா கனகராசா தலைமையிலான ஏழுபேர் கொண்ட குழு பணிப்பாளர் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டது. தெரிவு செய்யப்பட்டோர் விவரம்:

தலைவர்- பொ.கனகராசா, உப தலைவர் - சி.குஞ்சுராசா, சபை உறுப்பினர்களாக - இ.மகாலிங்கம், செல்விவை.பூபதி, சி.விநாயகமூர்த்தி, பா.காஞ்ஜீவன், த.ஜெய்கரன். (ச-9)

# கோலம், மாலை கட்டுதல் போட்டிகளில் வெற்றிபெற்ற தென்மராட்சி மாணவர்கள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட வலய மட்ட மாலை கட்டல், தோரணம் பின்னல், கோலம் போடுதல் போட்டிகளின் முடிவுகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளண.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம்:

### கோலம் போடுதல்

ந.துஷியா (மிருசுவில் அ.த.க. பாடசாலை), இ. தவநந்தினி (உசன் இராமநாதன் ம.வி.),ப.பவினயா (மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்), ப.அர்ச்சனா (நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை).

### பாராட்டுப் பெற்றோர்

த.ஜனனி (மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்), க. நிக்ஸன் (மீசாலை வீரசிங்கம் ம.வி.), ந.சானுகா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), பா.கீர்த்தனா (மட்டுவில் தெற்கு அ.மி.த.க வித்தியாலயம்), வி.ஜிதுர்ஷா (வரணி மகாவித்தியாலயம்), சி.நிதர்சன் (வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாலயம்).

### மாலை கட்டல்

டே.கிருத்திகா (சாவகச்சேரி இந்து), தெ.கேசுகி(மட்டுவில் கமலாசனி வித்தியால்யம்), ர.அருண் குமார்(மட்டுவில் தெற்கு சந்திரமௌலீச வித்தியாலயம்).

### பாராட்டுப் பெற்றோர்

ஜே.சயந்தினி(உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்),க. ரம்மியா(கைதடி குருசாமி வித்தியாலயம்), உ.கவிப்பிரியா (நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை), செ.சுவானுகா(குடமியன் அ.த.க பாட சாலை), இ.பிரபாஜினி (வரணி ம.வி.), சி.தேனிகா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), தெ.கபிலா (மீசாலை விக்னேஸ்வரா ம.வி.).

### தோரணம் பின்னல்

வி.பிரேமவதனி (சாவகச்சேரி மகளிர்), ச.விதுஷன்( சாவகச்சேரி டிறிபேக்), த.கிரிசாந்தினி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).


### பாராட்டுப் பெற்றோர்

சி.கிருசிகன்(மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.), நி.சிவரஞ்சினி (கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயம்), க.மகிந்தன் (மீசாலை வீரசிங்கம் ம.வி.). (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வில் நமக்காக தரப்பட்டு இருக்கும் பொறுப்புக்களிலிருந்து விலகுதல் சரியாகுமா?

வாழ்க்கையில் நமக்குத் தரப்பட்டிருக்கும், சகல பொறுப்புகளையும், கடமைகளையும் சரிவர நடத்த வேண்டும் அதுதான் வாழ்க்கையில் நமக்கான கடமை. இதனை எத்தனை பேர் புரிந்து கொண்டு வாழ்கின்றனர்.. சிலரைத் தவிர பலர் தம் கடமைகளில் இருந்து தவறிவிடுகின்றனர். தந்தை, தாய், கணவன், மனைவி, பிள்ளைகள் என்போர் தங்களது கடமைகளிலும், பொறுப்புகளிலிருந்தும் விலகிவிடும்போது ஒரு குடும்பமே பாதிக்கப்படுகின்றது என்பதனை ஏன் உணர மறுக்கின்றனர். சமுதாயத்தின் கேள்விகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் குடும்பம் படும்பாட்டை இவர்கள் ஏன் அறிய மறுக்கின்றனர்.



பிரச்சினைகள் இல்லாமல் வாழ்க்கை இல்லை. ஒவ்வொருவருக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன. பிரச்சினைகளின் தன்மை வேறுபடுமே தவிர பிரச்சினைகள் பொதுவானது. ஒரு விவகாரத்தை விட்டு சற்று விலகி அதை எதிரே நிற்க வைத்து கவனிக்கும்போதுதான் அதன் தன்மை தெரியும். ஒரு விவகாரத்தின் தன்மை தெரிந்தவர்களால் தான் அதனைக் கையாள முடியும். குடும்பம் என்ற பொறுப்பில் இருந்து கணவன் தவறி நடக்கும்போது மனைவியானவள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றாள். கெட்டிக்கார பெண்ணாக இருந்தால் சமாளித்துக் கொள்வாள். அதுவே உலகம் தெரியாத அப்பாவிப் பெண்ணாக இருந்தால் சீரழிந்து போய் விடுவாள்

இரண்டு சதுரங்கள் சேர்த்து வைத்த விடயம் எண்கோணம். அதில் ஒரு சதுரம் ஆண் இன்னொரு சதுரம் பெண். இரண்டு சதுரமும் சரியான கோணத்தில் பொருந்தியிருப்பின் எட்டுத் திசையும் கீர்த்தி பரவும். ஆண் போகும் வழியில் பெண் வந்து விடக்கூடாது. பெண் வரும் வழியில் ஆண் போகக் கூடாது. ஆண் ஒரு கோணத்திலும் பெண் ஒரு கோணத்திலும் பார்த்திருத்தல் வேண்டும். திசைமாறி இருக்க வேண்டும். ஆனால் ஒன்றாயிருக்க வேண்டும். மனைவிக்கு வாழ்க்கை பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். ''உனக்கு நல்ல வாழ்க்கையை தருவேன்'' என்ற நம்பிக்கையை விட ''உன் வாழ்க்கையை அழிக்கமாட்டேன் என்ற உறுதிதான் முக்கியம்''.

எத்தனையோ காலமாக இருக்கின்ற திருமணம் குடும்பம் என்கின்ற விடயங்கள் தப்பாகி விடுமா? அதிலிருந்து ஏன் விலகி ஓட வேண்டும். திருமணம், குடும்பம் இரண்டுமே அழியாதது, அழியமுடியாதது. அது அழிந்தால் உலகமே அழிந்துவிடும் மனிதனுடைய வன்முறைக் குணத்தைப் பாதியாகக் குறைப்பது திருமணம், குடும்பம் என்பவை தான். அவை இல்லை என்றால் ஒருவரை ஒருவர் வெட்டிக் கொண்டு மனித இனமே அழிந்து போய் விடும். இவ்வாறான மகத்தான, புனிதமான, பந்தத்தின் பொறுப்பில் இருந்து விலக நினைப்பது சரியான முடிவாகுமா?

**வந்தனா, கரவெட்டி**




## உன் இலட்சியம்

நீ என்னை
அலட்சியம்
செய்கிறாய் என
பலமுறை
அழுதிருக்கிறேன்
என்னை அழவைத்துப்
பார்ப்பது
தான் உன்னுடைய
இலட்சியம்
என புரியாமல்........

கி.விதுரன்

## அருந்ததிராய்; ஓர் யுகத்தின் தேடல்



உனது பேனாமுனையிலிருந்து தெறித்துவிடும்
தோட்டாக்களை கண்டு தான்
அஞ்சி நடுங்குகிறார்கள்
பல அதிகார வர்க்கத்தினர்

உண்மைகளை உச்சாடனம் செய்யும்
உனது எழுத்துக்களால் வீரியம் பெறுகிறது
தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின்
விடுதலை மீதான ''நம்பிக்கை''!

வல்லரசு என்ற அடைமொழிக்காய் ஏங்கிடும்
பேயரசு தான் உன் தாயரசு என்ற போதிலும்
தெளிந்த சிந்தனையோடு
நீ முன் வைக்கும் கருத்துக்கள்
செத்துப் போன ''ஜனநாயகம்'' மீதான
உனது கண்டனங்கள்

எம் இருதயச் சிறையில் உன்னை விலங்கின்றி
கைது செய்ய காரணமாய் அமைகிறது!

ஏழைகளின் இருதயக்கதவுகளை திறந்திட
அரசியல் வாதிகள் உச்சரிக்கிறார்கள்
பல ''சங்கேத'' வார்த்தைகளை
ஆனபோதும் திறந்து கொள்ளாத அந்த இருதயக் கதவுகள்
உனது புன்னகைப் பார்வைக்கு திறந்து விடுகிறது!

உனது பரந்துபட்ட சிந்தனை வீச்சில் ஜீவிக்கப்பட்டு
உணர்வூட்டப்படுகிறது எாது தாயகப் பிரச்சினையும்!

''கோவணம் கட்டிக் கொண்டு கையில் வெறும்
வில்லையும் அம்பையும்
வைத்திருக்கும் மக்களிடம் சென்று நீங்கள்
அதையும் பறிக்க முற்படும் போது
நான் உங்கள் பக்கம் நிற்க வேண்டும்
என்றால் அது என்னால் முடியாது'' என்கின்றதான
உனது வார்த்தைகளில் மரித்து விடாமல்
ஜீவித்துக் கொண்டிருக்கிறது மனிதம் இன்னமுமாய்....

தோழர்களின் போராட்டக் களத்தில்
பேனா ஏந்திய ''போராளி''யாய்
நீ கொண்ட வசியாகம்
''மாவோயிஸம் இந்தியாவின் உள்நாட்டு அபாயம்''
என்கிறதான அரசின் பொய்ப் பரப்புரைகளை
துடைத்தெறிய காரணமாய் அமைகிறது!



# இன்றைய நிலையில் கல்வி....

இன்றைய கல்விச் சமூகத்தைப் பாதிக்கும் காரணிகளில்

**1. பாடசாலை தலைமைத்துவம்,**

**2. நிர்வாக பீடங்கள்,**



ஆகிய இரண்டு பகுதியினரும் முக்கிய பங்கினை வகிக்கின்றார்கள். இங்கு சகலரையும் குற்றம் சாட்டுவது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. ஒரு சிலரின் தலைமைத்துவமும், நிர்வாக செயற்பாடும் கூர்ந்து அவதானிக்கத்தக்கது. அவை கல்வி என்ற அடிப்படையில் பொருத்தமற்றதாகவே காணப்படுகிறது. பொருத்த மற்றவர்களை வீட்டுக்கு அனுப்பலாம்.

## விமர்சனப் பகுதி

வலிகாமம் வலயத்தில் வரலாற்றுச் சிறப்பினைக் கொண்ட ஒரு பாடசாலை, இசுரு பாடசாலையாக முன்னெடுக்கப்படுகிறது. நல்ல விடயம். ஒரு காலத்தில் பொறியியலாளர்களையும், வைத்தியர்களையும், பேராசிரியர்களையும் உற்பத்தி செய்த பாடசாலை அதுதான். ஆனால் இப்போது வைத்தியத்துறைக்கோ, கணித பொறியியல் துறைக்கோ மாணவர்களைத் தயார் செய்ததாகத் தெரியவில்லை. அல்லாமலும், விளையாட்டுத் துறையில் நல்ல நிலையிலிருந்த அந்தப் பாடசாலை இற்றைவரை எதையுமே சாதித்ததாகத் தெரியவில்லை. மற்றும் எந்தப் போட்டிகளிலும் (நாடகத்தைத் தவிர) வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை. மாணவர்களது ஆக்கமுயற்சி பூச்சியம் என்றே கூறலாம். ஆனால் அந்தப் பாடசாலையை நடத்தும் முதல்வருடைய படங்கள், பட்டங்கள், சாதனைகள் மட்டுமே ஊடகங்களில் தப்பாமல் வருகிறது.

இந்த நிலை கல்விச் சமூகத்தவர்களிடமும் காணப்படுகிறது. அப்பாடசாலை சமூக சேவை என்று பிதற்றுகின்ற ஓர் அலுவலகமாக மாறிவிட்டது. பாவம் மாணவர்கள். வரலாறு இதனைத் தூற்றியே தீரும். அப்போது தெரியும் மாணவ சமுதாயம் கண்ணீர் வடிக்கக்கூடாது. நிர்வாக பீடமும் கண்டும் காணாமல், அடுத்த பட்டத்துக்குத் தயாராகிறது. பாவம் மாணவர்கள்?

பூமகள், சுன்னாகம்

## இளவல்கள் வட்டம்

### விமர்சனம்

பாடசாலை அதிபர்கள், கல்வி நிர்வாகத்தினரிடையேயான உட்பூசல்களும், பழிவாங்கல்களும் இன்றைய கல்வி சமூகத்தை பாதிப்பது தொடர்பில் இளம் சமூகத்தினர் தங்கள் விமர்சனங்களை அனுப்பலாம்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

விவாதமேடைப் பகுதியில் 'வைதிஸ் கொலைவெறி' பாடலை தமிழர்கள் தமக்கானதெனச் சொந்தம் எனக் கொண்டாட முடியாது என்ற அணி வெற்றி பெற்றுள்ளது.

அந்த அணிக்காக வாக்களித்தவர்களில்

1. கருணாகரன் சோபிகா – சாவகச்சேரி
2. எல்.கீர்தனன் – சென். பற்றிக்ஸ் கல்லூரி
3. செ. சாருகா – சாவகச்சேரி

சிறந்த ஆக்கத்தை அனுப்பியவர் :

தி. வைதேகி – யாழ்ப்பாணம்.



### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**

*'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

பெயர் :-..............................................

முகவரி :- ..............................................

..............................................

.............................. ..............................

திகதி கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவினைவாதம் மீண்டும் எழ எப்போதும் இடமளிக்கக்கூடாது

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்.1

நாட்டில் பயங்கரவாதமும் பிரிவினைவாதமும் மீண்டும் தலைதூக்க இடமளிக்கக் கூடாது. இவ்வாறான சூழ்நிலையொன்றை நாம் ஏற்படுத்த உறுதி பூண வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 'ராவய' பத்திரிகையின் வெள்ளிவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**இலங்கைப் படைகள் இறுதிக்கட்ட போரில் அதிகளவு படுகொலைகளையோ, சட்டத்துக்குப் புறம்பான கொலைகளையோ மேற்கொள்ளவில்லை.**

நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைப் படைகள் இறுதிக்கட்ட போரில் அதிகளவு படுகொலை களையோ, சட்டத்துக்குப் புறம்பான கொலைகளையோ மேற்கொள்ளவில்லை. இந்தநாட்டில் ஜனநாயகம் முழுமையாக நிலைநாட்டப்பட்டுள்ளது. இனவாதத்தை நாம் ஒருபோதும் தூண்டவில்லை.

இலங்கையில் ஏற்பட்ட கிளர்ச்சிகள் மற்றும் 30 வருட கால பயங்கரவாதம் இந்த நாட்டில் இரத்தத்தையும் கண்ணீரையுமே ஏற்படுத்தின. இந்த நிலையில், நாம் பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டோம் என்று திருப்தியடைய முடியாது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக தீர்மானமொன்றை கொண்டுவருவதற்கு ஒரு பகுதியினர் முயற்சிக்கின்ற நிலையில், மக்கள் அரசுக்கு ஆதரவை வெளிப்படுத்துவதற்காக வீதியில் இறங்கினார்கள்.

சர்வதேச அளவில் தற்போது நமது நாட்டுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அழுத்தங்களுக்கு நாம் பணிந்து விடக் கூடாது. மக்கள் சுயமாக உணர்ந்து அதற்கு எதிரான சக்தியாகத் திகழ வேண்டும்.

இதன் மூலமே, சமாதானத்தையும் ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும். அது மக்கள் இலங்கை மீது கொண்டுள்ள பற்றுறுதியை வெளிப்படுத்தும் - என்றார். (ச)

# நாட்டுக்காகக் குரல் கொடுக்க பொன்சேகா எப்போதும் தயார்

**பொருத்தமற்ற நபர்களைப் பயன்படுத்தி நாட்டைப் பாதுகாக்க முடியாது. ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் நாட்டுக்கு எதிரானதல்ல.**



கொழும்பு,மார்ச்1

நாட்டுக்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குரல் கொடுக்கத் தயார் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பொருத்தமற்ற நபர்களைப் பயன்படுத்தி நாட்டைப் பாதுகாக்க முடியாது. ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் நாட்டுக்கு எதிரானதல்ல என்று அவர் தெரிவித்தார்.

இந்த நாட்டின் ஊழல் மோசடி மிக்க ஆட்சியாளர்களுக்கு எதிராகவே தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளது.

இவ்வாறான ஒரு நிலைமைக்கு இந்த ஆட்சியாளர்கள் தள்ளப்படுவார்கள் என்பதனை நாம் முன்கூட்டியே அறிந்திருந்தோம் என்று அவர் தெரிவித்தார்.

படைவீரர்களை கண்டுகொள்ளாத இந்த ஆட்சியாளர்கள் ஜெனிவா மாநாட்டில் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# பொலிஸ் அதிகாரப் பிரச்சினையை விரைவில் பேசித் தீர்க்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி குற்றச்சாட்டுக்களுக்கு தீர்வு காணப்படவேண்டும். அரசியல் தீர்வில் சர்ச்சைக்குரிய பொலிஸ் அதிகாரம் குறித்து அனைத்துத் தரப்புகளுடனும் பேசி விரைவில் தீர்வை எட்ட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்ற விசேட நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவாவில் தற்போது குளிர்காலம் என்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அங்கு போகவில்லை என்று அர்த்தமல்ல.

நாட்டுக்கு எதிரான தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடாது என்பதற்காகவே உள்நாட்டிலிருந்து அவர்கள் ஜெனிவாவுக்கு செல்லவில்லை என்பதையிட்டு நாம் சந்தோஷப்பட வேண்டும்.

இளைய சமூகத்தினர் தொடர்பில் ஆளும் தரப்புக்கள் நேர்மையாகச் செயற்படுவதில்லை. தொழில்வாய்ப்புக்கள், திறந்த சந்தர்ப்பங்கள் எனப் பலவும் புறக்கணிக்கப்படுகின்றன. உண்மையான சூழலை அறிந்து செயற்பட வேண்டும்.

மின்சார கதிரை தொடர்பாகவும் கதிரையைக் கைப்பற்றுவது தொடர்பாகவும் போட்டி போடுகையில் தேசிய மறுசீரமைப்பை எவ்வாறு ஏற்படுத்த முடியும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் கூடாது என்று ஜே.வி.பி.யை ஆட்சிக்குக் கொண்டுவர பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. பின்னர் ஜே.வி.பி. கூடாது என்று ஜாதிக ஹெல உறுமய தொடர்பாகப் பேசினார்கள். ஆனால் இன்று ஐ.தே. க. மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தவிர ஏனையவை புறக்கணிக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் உள்ளது.

ஜப்பான் போன்ற நாடுகளில் இரண்டு வருடத்துக்கு மேல் பிரதமர் ஒருவர் ஆட்சியில் இருப்பதில்லை. இது நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயமாகும். தற்போது இலங்கையில் அங்கீகாரம் பெற்றுள்ள கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடை முறைப்படுத்தி உள்நாட்டு, வெளிநாட்டு குற்றச்சாட்டுகளுக்குத் தீர்வுகாண வேண்டும்.

அரசியல் தீர்வில் சர்ச்சைக்குரிய பொலிஸ் அதிகாரம் குறித்து அனைத்து தரப்புகளுடன் பேசி விரைவில் தீர்வை எட்ட வேண்டும்.

இந்த நிகழ்வில் கூட்டமைப்பின் பிரசன்னத்தைக் காணும் போது மகிழ்ச்சியாக உள்ளது. நாட்டில் காணப்படும் இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வுக்கு விரைவாக நகர வேண்டும் - என்றார். (ச)




அதிகரித்து வரும் வாழ்க்கை செலவு நெருக்கீட்டை குறைக்கும் வகையில் தமக்கு கூடிய சம்பளம், சீருடைகள் ஆகியவற்றை வழங்க வேண்டும் எனவும் சனிக்கிழமை விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும் எனவும் கோரி சுகாதார சேவைகள் தொழிற்சங்க சம்மேளனத்தினர் நேற்று புதன்கிழமை சுகாதார அமைச்சுக்கு முன்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# பொலிஸ் பதவி உயர்வில் பாரபட்சத்தை ஏற்க முடியாது

## மனோ கணேசன் கண்டனம்

கொழும்பு,மார்ச்1

பிரதி பொலிஸ் மா அதிபர்களாக அண்மையில் பதவி உயர்த்தப்பட்ட பொலிஸ் அத்தியட்சகர்களில் தமிழ் அதிகாரிகளுக்கு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது என்று ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதி பொலிஸ் மா அதிபர்களாக தெரிவு செய்யப்பட்ட 22 பேரில் 21 சிங்களவர்களும், ஒரு முஸ்லிமும் உள்ளடங்குகிறார்கள். இதில் ஒரு தமிழரும் இல்லை என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

முஸ்லிம்களுக்கும் உரிய ஒதுக்கீடு வழங்கப்படவில்லை என்றே நான் எண்ணுகிறேன். இனரீதியான ஒதுக்கீடு என்பதைவிட, நேர்முகத்தில் தகுதியை பெற்ற தமிழ் அதிகாரிகளும் பின்தள்ளப்பட்டு, பெரும்பான்மை இனத்தை சார்ந்தவர்கள் தமிழர்களுக்கு உரிய இடங்களிலும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சர் என்ற முறையிலும், பெரும்பாலும் சிங்களமயமாக இருக்கின்ற பொலிஸ் துறையில் தமிழர்களுக்கு உரிய இடத்தை பெற்றுத் தரப்போவதாக அடிக்கடி ஊடகங்களில் சொல்லிவருபவர் என்ற முறையிலும் இதில் உடனடியாக அவர் தலையிடவேண்டும்.

அரச உயர் மட்டத்தில் எடுத்துக் கூறி ஒரு விசேட நடவடிக்கையின் மூலம் தமிழ் அதிகாரிகளுக்கு உரிய இடங்களை பெற்று கொடுக்க வேண்டும்.

உண்மையில் இன ஒதுக்கீடு என்ற அடிப்படையில் தமிழ் பேசும் அதிகாரிகளுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் உரிய தகுதி இருந்தும் தமிழ் அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை என்பது அநீதியானது. எனவே இருப்பவர்களுக்கே உரிய இடம் வழங்கப்படாதபோது, புதிதாக தமிழர்களை நியமிப்பது என்ற கருத்து நகைப்பிற்கு உள்ளாகின்றது. தமிழர்களுக்கு உரிய நியமனங்களை வழங்க முடியாவிட்டால் சொல்லிவிடவேண்டும். அதற் காக வாக்குறுதிகளை அரசு வழங்கக்கூடாது- என்றார். (ச)

# லலித், குகன் வழக்கு விசாரணை; பிரதிவாதிகளுக்கு கால அவகாசம்

**கடந்த டிசெம்பர் யாழ்ப்பாணத்தில் வைத்து லலித், குகன் ஆகியோர் காணாமல் போயிருந்தனர்.**

கொழும்பு,மார்ச் 1

மக்கள் போராட்ட இயக்கத்தின் செயற்பாட்டாளர்களான லலித், குகன் ஆகியோர் காணாமல் போன விடயம் குறித்து அவர்களது உறவினர்கள் தாக்கல் செய்துள்ள மனுவுக்கு எதிர் மனு தாக்கல் செய்ய பிரதிவாதிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக இராணுவத் தளபதி, பொலிஸ் மா அதிபர், யாழ்ப்பாணம் கட்டளைத் தளபதி ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்த மனு நேற்றுப் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிரதிவாதிகள் தொடர்பில் சட்டத்தரணி ஒருவர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

காணாமல் போனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தால் அது குறித்த விசாரணை அறிக்கையை எதிர்வரும் 21 ஆம் திகதி சமர்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டது.

அன்றைய தினம் பிரதிவாதிகள், எதிர்ப்பு இருப்பின் தெரிவிக்க முடியும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கடந்த டிசெம்பர் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வைத்து லலித், குகன் ஆகியோர் காணாமல் போயிருந்தனர். காணாமல் போயுள்ளவர்களை நீதிமன்றில் முன்னிலைப் படுத்துமாறு கோரி லலித் மற்றும் குகனின் உறவினர்கள் மனு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 13ஆம் திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க முயற்சி

கொழும்பு,மார்ச் 1

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்ட 13 ஆம் திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க தேசிய மற்றும் பௌத்த அமைப்புக்கள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன.

13ஆம் திருத்தச் சட்டத்தை இல்லாதொழிப்பதற்காக பத்து லட்சம் கையொப்பங்கள் திரட்டும் நடவடிக்கை நேற்றுமுன் தினம் புறக்கோட்டையில் ஆரம்பமானது.

13ஆம் திருத்தச் சட்டத்தை நாடாளுமன்ற சட்டமொன்றின் மூலம் ரத்து செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பௌத்த பிக்குகளும், சிங்கள அடிப்படைவாத அமைப்புக்களும் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா
# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். மற்றவர்கள் மத்தியில் உங்களை பெரிய ஆளாகக் காட்டிக் கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள். நாளை வரும் என்று நினைத்த பணவரவு ஒன்று இன்றே வந்து சேரலாம். பெண்கள் வழியில் சுபச்செலவுகளைச் சந்திக்கலாம்

**இடபம்:** அவசரப்பட்டு சில வேலைகளைச் செய்து விட்டு, பின்னர் ஏன்டா செய்தோம் என்று, கவலை அடைவீர்கள். நீங்கள் செய்த வேலை ஒன்றை மற்றவர்கள் தாங்கள் செய்ததாகக் காட்டிக் கொள்ளலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். பெரிய மனிதர்களின் கோபமான பேச்சுக்கு ஆளாகலாம். சிலருடன் வாக்குவாதத்தில் ஈடுபடலாம்.

**மிதுனம்:** மனைவி, குழந்தைகளின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். பயணங்களால் செலவுகள் அதிகரிக்கலாம். இரண்டு, மூன்று நாள்களாகச் செய்ய வேண்டிய வேலைகளை இன்றே செய்வீர்கள். மாற்று மதத்தினர் உதவி கிடைக்கும். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். சகோதரர்கள் வழியில் உதவி கிடைக்கும்.

**கடகம்:** தொலைந்து போனதாக நினைத்த பொருள் ஒன்று மீண்டும் கைக்குக் கிடைக்கலாம். அவசரமாக முடிக்க வேண்டிய சில வேலைகளால் அவதிகளுக்கு ஆளாகலாம். தவறு என்று தெரிந்தும் சில காரியங்களைச் செய்வதால், பதற்றம், படபடப்பு அடையலாம். வெளியூர்களில் இருந்து உறவினர்கள் சிலர் வீட்டுக்கு வரலாம். சில விடயங்களில் துணிச்சலாகச் செயற்படுவீர்கள்.

**சிங்கம்:** நண்பர்கள் சிலரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்வீர்கள். சிறிய தவறு ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப் படுவீர்கள். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் பங்கேற்கலாம். ஒன்று நடக்கும் முன்னரே அதை பற்றி மனக்கோட்டை கட்டுவீர்கள். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்னை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம்.

**கன்னி:** உறவினர்கள், உங்களுக்கு உதவிக் கரம் நீட்டுவர். பொலிஸ் தொடர்பான விடயங் களில் எச்சரிக்கை அவசியம். நண்பர் ஒருவர் மூலம் முக்கிய தகவல் ஒன்றைக் கேட்கலாம். சோர்வு, சோம்பல் இருந்தாலும் அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அவதிப்படலாம். குல தெய்வ வழிபாடுகளில், இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும்.

**நாளை**

மாசி 19 வெள்ளிக்கிழமை 02.03.2012
திதி:நவமி மா. 06.49 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.இ. 07.26வரை
சுபநேரம்: 06.27- 07.27 வரை,
ராகு காலம்: 10.57- 12.27 வரை

**துலாம்:** சிலருக்கு உதவி செய்ய முற்பட்டு, அதனால் உபத்திரவங்களைச் சந்திக்கலாம். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாகலாம். முன்யோசனையுடன் செயற்படாததால், சில காரியங்களில் வீண் அலைச்சல் ஏற்படும். நன்றி மறந்த ஒருவரை நினைத்துக் கவலை அடைவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்க்க வேண்டும்.

**விருச்சிகம்:** தடைகள் விலகி தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள். தூரத்து உறவினர் ஒருவரைப் பார்க்கலாம். செலவுகளில் தாராளம் காட்டு வீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகமாகச் செயற்பட வைக்கும். சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள்.

**தனுசு:** உழைப்புக்கேற்ற செல்வாக்குக் கிடைக்கும். வியாபாரிகள் தொழிலில் ஏற்படும் சுறுசுறுப்பால் உற்சாகமாகக் காணப்படுவர். வீடு, கட்டடம் போன்றவற்றைச் சீரமைப்பதில் அக் கறை காட்டுவீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன் வைத்த கோரிக்கை நிறைவேறலாம். வெளியிடங்களுக் குச் செல் லும்போது, சில பொருள்களை எடுத்துச் செல்ல மறக்கலாம்.

**மகரம்:** எதிர்கால முன்னேற்றத்திற்கான திட்டங்கள் போடும் நாள். தொழில் கூட்டாளிகள் அனுசரணையாக நடந்து கொள்வர். எதிர்பாராத திடீர் பணவரவுகளைப் பெறலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர், உங்களைத் தேடி வரலாம். கல்மனம் படைத்த சிலரிடமும், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**கும்பம்:** பூர்வீக சொத்து விவகாரங்களுக் காக, பிள்ளைகள் கல்விக்காக செலவுகள் செய்யலாம். சக ஊழியர்கள், உங்களின் கருத்துக்கு மாற்றுக் கருத்துக் கூறி எரிச்சல் உண்டாக்கலாம். வழக்கத்துக்கு மாறான பணிச்சுமையால் அவதிப்படலாம். தொழில் புரிவோர் தேவையான பணத்தைப் புரட்டிக் கொள்ளலாம். கனவுத் தொல்லையுண்டு.

**மீனம்:** அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். தம்பதியர் இடையே அன்பு அதிகரிக்கும். மறைமுக போட்டிகள், எதிர்ப்புகள் விலகும். பெண்கள் சிறப்பாகச் செயற்பட்டு, குடும்பத்தினரின் பாராட்டுக்களைப் பெறுவர். நண்பர்களுக்காக சில செலவுகளைச் செய்வீர்கள். பல நாள் முயற்சி ஒன்றில் வெற்றி கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | | 1 | 2 | | | |
| 1 | | | | 7 | | 9 | | 3 |
| 4 | 2 | | 6 | | | | 7 | |
| | 8 | 2 | | 3 | 5 | | | 9 |
| | | | 7 | 8 | 4 | | | |
| 7 | | | 9 | 2 | | 8 | 3 | |
| | 4 | | | | 7 | | 8 | 6 |
| 2 | | 5 | | 4 | | | | 7 |
| | | | 2 | 6 | | 4 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 3 | 9 | 5 | 8 | 4 | 7 | 4 |
| 8 | 1 | 9 | 3 | 4 | 7 | 5 | 2 | 6 |
| 5 | 7 | 4 | 1 | 2 | 6 | 8 | 9 | 3 |
| 9 | 6 | 8 | 5 | 3 | 4 | 7 | 1 | 2 |
| 1 | 4 | 2 | 7 | 6 | 9 | 3 | 5 | 8 |
| 3 | 5 | 7 | 2 | 8 | 1 | 9 | 6 | 4 |
| 2 | 9 | 5 | 8 | 1 | 3 | 6 | 4 | 7 |
| 4 | 8 | 1 | 6 | 7 | 5 | 2 | 3 | 9 |
| 7 | 3 | 6 | 4 | 9 | 2 | 1 | 8 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத் தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்



## அழகரத்தினம் சிவகுமாரன்

அப்பையாலேன், கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட அழகரத்தினம் சிவகுமாரன் (27.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அழகரத்தினம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், உடுவிலைச் சேர்ந்த மார்க்கண்டு (மெக்கானிக்) நீலாம்பாள் தம்பதியரின் அன்பு மருமகனும், ரஞ்சனியின் அன்புக் கணவரும், டினூஜாவின் அன்புத் தந்தையும், கிஷோத்மனின் அன்பு மாமனும், அஸ்வினின் அன்புப் பேரனும், சந்திரகுமாரன், சூரியகுமாரன், சூரியகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2012) வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு இத்தாலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. சந்திரகுமாரன்,
அ. சூரியகுமாரன்.

அப்பையாலேன், கொக்குவில் மேற்கு,
பாலா (மெக்கானிக்), உடுவில். (15191)(45-7-21)

## மீள் புனரமைப்பை அடுத்து சொந்தக்கட்டடத்தில் ஒன்றுகூடல்

குருநகர், மார்ச்.1

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை கடந்த 1980 ஆம் ஆண்டு போரால் பாதிக்கப் பட்ட பின்னர் இடம்பெற்ற மீள் புனரமைப் பைத் தொடர்ந்து சொந்தக் கட்டடத்தில் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி முற்பகல் 11மணிக்கு தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலையின் மன நோயாளார் கலந்துரையாடல் மண்டபத்தில், வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் ஏ. ஜெயக்குமரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். 1980 ஆம் ஆண்டு இந்த வைத்தியசாலை யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த பின்னர், மீளவும் புனரமைப்புச் செய்யப்பட்டு இவ்வாண்டு சொந்தக் கட்ட டத்தில் முதல் முறையாக ஒன்று கூடல் நிகழ்வு நடைபெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. (வ-51)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
## கந்தையா சொர்ணம்மா
(திரியாய்)

சிரித்த முகம், செந்நிற உதடு, நீறு பூசிய நெற்றி, உடுத்திய
தூய ஆடை எம்மைக் கவர்ந்த உம் கண்ணாடி, அதட்டிப்
பேச மறுக்கும் உள்ளம் இவையனைத்துமாய் உம்மை
அழைத்த குரல் அம்மம்மா என்றனவோ.... நித்தமும்
உமக்கு தீபாவளி தான் - இல்லையென்றால்
ஏன் சண்டை குளிப்பதற்கு கத்திக் கத்திக் கதறினோம்
ஆனால் கட்டியள வந்த வேளை காட்டெருமைக்
கூட்டத்தில் தனித்து விடப்பட்டோம்....
நல்ல வேளை நீங்களில்லை அவ்விடத்தில்
நின்றிருந்தால் கேட்டிருப்பீர் நீதி அக்கணத்தில்
உங்களுக்குத் தான் புரியும் உண்மைகள்
ஆதலினால் அழைத்த குரல்கள்அம்மம்மா என்றனவோ....
ஆல நிழலில் நெருஞ்சி முட்கள் போல்
வேண்டாத பாசங்கள் தீண்டாத தூறல் போல்
பாரதத்தில் கூட அவமதிக்கப்பட்டது
பாண்டவர்கள்தானே....
கலியுகமாதலால் செவி வந்த பாசத்தை
கொம்பு வழி வந்த உறவுகள் மறைப்பதா ?
பொல்லாப்பே பேசாத உங்களுக்கு
பொல்லாத காலம் வந்ததுவோ....
மூவிரெண்டு மாதங்கள் எமைப் பிரிந்தீர்
காலனோ ஈரேழு ஜென்மத்திற்கும் உமைப்பிரித்தானே?
சிவந்த எம் விழிகள், சிரிக்க மறுக்கும் உதடுகள்
ஞாபக தூறல்களில் உம் நினைவுகள்
இவையனைத்தும் அழைத்த குரல்களாய்
அம்மம்மா என்றனவோ....

(திருகோணமலை, கருணை திவாக வீதி அன்னை தெரேசா முதியோர் இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் நடைபெறும்.)

என்றென்றும் கண்ணீருடன்,
பேரப்பிள்ளைகள்,
(திருகோணமலை)

(15139)(25-7-8)

# மரண அறிவித்தல்



## பரமலிங்கம் தயாபரன்

யாழ். நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்சில் வசித்தவருமாகிய பரமலிங்கம் தயாபரன் (27.02.2012) திங்கட்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் பரமலிங்கம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், கிருஸ்ணவேணியின் அன்புக் கணவரும், அக்ஷயா, அர்ச்சுன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரன், (கனடா), ரவீந்திரன், சந்திரபாலா, யசோதா (டென்மார்க்), காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் கேதீஸ்வரன், ரஞ்சினி, குகராசா, பிரதீபன், சிவரூபன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 647, 7ஆம் யூனிற்,
இராமநாதபுரம். (11050)(45-7-21)

தகவல்:
குடும்பத்தினர்

## புதியநிழற்குடை

காரைநகர் வலந்தலைச் சந்தியில் புதிய நிழற்குடை ஒன்று அமைக்கப் படுகின்றது. காரை நகர் அபிவிருத்திச் சபையால் அமைக் கப்பட்டுவரும் பயணிகளுக்கான நிழற் குடைக்காக பத்து லட்சம் நிதி செலவி டப்படவுள்ளது.

இந்த நிழற்குடை பயணிகள் தங்கிக் கொள்ளக் கூடியதாக நவீன வசதிகள் கொண்டதாக இருக் கும் என்றும் புலம் பெயர்ந்துள்ள காரை நகர் மக்கள் அன் பளிப்பாக வழங்கிய நிதியில் அமைக்கப் படுவதும் குறிப்பி டத்தக்கது. (வ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனசமூக நிலைய ஆண்டு விழாவை முன்னிட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 1

கோண்டாவில் கிழக்கு நாராயணா சனசமூக நிலையம் தனது 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியிலான தாச்சி, ''ஓவர் கேம்'' முறையிலான கரப்பந்தாட்டம், கிறிக்கெற், மரதன் மற்றும் சைக்கிளோட்டம் ஆகிய விளையாட்டுக்களை நடத்தவுள்ளது.

அத்துடன் மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரை ஆகிய கல்வி சார்ந்த போட்டிகளும், கலைப் போட்டிகளும் நடைபெற இருக்கின்றன.

மேற்படி போட்டிகளில் பங்கு கொள்ள விரும்புவோர், தமது பதிவுகளை கோண்டாவில் கிழக்கு நாராயணா சனசமூக நிலைய நிர்வாகத்திடம் எதிர் வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளலாம் என்று நிலையத் தலைவர் ரி.சுகிர்தன் கேட்டுள்ளார்.

(வ-288)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு
15 - 12 - 1937



இறப்பு
01 - 02 - 2012

அமரர் தம்பு சிங்காரம்

(ஓய்வுபெற்ற புகையிரத சாரதி)

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் இருந்து
அமுதூட்டி பாசத்தால் பாதுகாத்து
வாழ்க்கைக்கு நல் வழி காட்டியாய்
திகழ்ந்த எமதன்புத் தெய்வமே
நாமுள்ள வரைக்கும் எம் உள்ளங்களில் உங்கள்
நினைவலைகள் என்றுமே அழியா

கடந்த (01.02.2012) அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தந்தையின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைத் தொடர்புகள் மூலமும் அனு தாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்வதுடன், நாளை (02.03.2012) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடை பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புவனேஸ்வரி அம்மன்
கோயிலடி, உடுப்பிட்டி. (15144) (6,7,10) குடும்பத்தினர்.

## மதகு புனரமைப்பு

குருநகர்,மார்ச்.1

யாழ். பிரதான வீதியில் சின்னக்கடைப் பொதுச்சந்தைக்குச் செல்லும் பாதையில் நான்காம் குறுக்கு வீதியின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மதகு தற்போது துரிதகதியில் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது. இந்தத் திருத்த வேலைகளால் யாழ். பிரதான வீதிகளினூடாகப் பயணிப்போர் மிகுந்த சிரமங்களை அனுபவித்து வருகிறார்கள். இந்தப் பாதையூடாக யாழ். - கொழும்பு பஸ் சேவைகள் தற்போதும் நடைபெறுவதனாலேயே இந்தச் சிரமம் ஏற்பட்டுள்ளது. (ந)

## முன்பள்ளி ஆசிரியர்களின் செயலமர்வுகளால் குடும்பத்தினர் அவலம்

சாவகச்சேரி, மார்ச்1

பாடசாலை ஆசிரியைகள் போன்று முன்பள்ளி ஆசிரியைகளுக்கும் செயலமர்வுகள், கருத்தரங்குகள் நடத்தப்படுவது குறித்து ஆசிரியைகளின் குடும்பத்தவர்களால் விசனம் தெரிவிக்கப்பட்டது .

முன்பள்ளி ஆசிரியைகளுக்குப் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் டிப்ளோமா வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அத்துடன் வார நாள்களில் இரு தடவைகள் பிற்பகல் வேளையில் செயலமர்வுகள் நடத்தப்படுகின்றன. இதனால் வீட்டு வேலைகளுடன் நாள் முழுக்க சிறுபிள்ளைகளைப் பராமரிக்க வேண்டிய நிலை தமக்கு ஏற்பட்டுள்ளதாக முன்பள்ளி ஆசிரியைகளின் குடும்பத்தவர்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

அதுமட்டுமன்றி மாகாண ஆளுநர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் முயற்சியினால் மாதாந்தம் வழங்கப்பட்டு வந்த 5 ஆயிரம் ரூபா உதவித் தொகை தற்போது 3 ஆயிரமாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

## கண்ணீர் அஞ்சலி



எமது சிறியதாயாரான (எனது தந்தையின் சகோதரனின் மனைவி)

திருமதி
மனோன்மணி தர்மலிங்கம்

அவர்கள் கடந்த (27.02.2012) திங்கட்கிழமை இறைபதம் அடைந் ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தேவி ஸ்ரோர்ஸ் (ரவி)
சாவகச்சேரி. (15189)(45-6-25)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

உதிப்பு
27 . 07 . 1938



உதிர்வு
31 . 01 . 2012

அமரர் சின்னையா தர்மபூபதி

(அம்மாப்பிள்ளை அக்கா)

கடந்த 31.01.2012 இல் இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (01.03.2012) வியாழக் கிழமை மு.ப. 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளவும். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வீரசிங்கம் ம.வி.க்கு அருகில்
மீசாலை-வடக்கு, இராமாவில்,
கொடிகாமம். (C\2944) (7,10) குடும்பத்தினர்.

## வேலைக்கு ஆள் தேவை

கணினியில் அனுபவமுள்ள / பழக விரும்பும் பெண் பிள்ளைகள் வேலைக் குத் தேவை. நேரில் வரவும்

இன்று மாலை 3.30 - 6.00
நாளை காலை 8.00 - 11.00

அபிஷேக் மல்ரி ஸ்பொட் & நெற்கபே,
இராமநாதன் கல்லூரி முன்பாக,
மருதனார்மடம்.
071 8565540, 077 9005856

## தவறிவிட்டது

மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழையைச் சேர்ந்த தவராசா சதீசன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (843100791V) 20.02.2012 அன்று திருநெல்வேலிச் சந்திக்கும் கொக்குவில் சந்திக்கும் இடையில் பேசுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 0776315974

## தவறிவிட்டது

சாரதி அனுமதிப்பத்திரம், ஆள்அடையாளஅட்டை போன்ற முக்கிய ஆவணங்கள் பூநகரி வாடியடிக்கும் முக்கொம்பனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். 0779004046

இராசரத்தினம் தற்பரன்
ஆசிரியர் வீதி,சவகச்சேரி வடக்கு
சாவகச்சேரி

CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

அனைத்து தகவல்தொழில்நுட்ப பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் 3-03-2012

230,1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி, T.P : 021-2270267

துவிச்சக்கரவண்டி, முச்சக்கரவண்டி திருத்த வேலைப் பயிற்சி
வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்
47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி

## பயிற்சிக்கான விண்ணப்பம் கோரல்

துவிச்சக்கரவண்டி, முச்சக்கரவண்டி திருத்த வேலைப் பயிற்சி மேற்படி சைக்கிள், முச்சக்கரவண்டி திருத்த வேலைப் பயிற்சி பெற்றுக்கொள்ள விரும்பும் மாற்று வலுவுடைய ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சிக் காலம் - 3 மாதங்கள்

பயிற்சி பெற்றுக் கொள்ள விரும்புவோர் 05.03.2012 ஆம் திகதிக்கு முன்னர் காரியாலயத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தொலை பேசி இல: 021 3217718,
வைத்திய கலாநிதி ந.சிவராஜா
தலைவர் - AROD

## இறுவட்டு வெளியீடு

எமது தேவஸ்தானத்தில் இன்று (01.03.2012)
வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு
திருப்பள்ளியெழுச்சியும், புகழ் மாலையும்
என்ற இறுவட்டு வெளியீடு
ஹவாய் ஆதீன தொண்டுநாத சுவாமி
அவர்களின் ஆசியுடனும்
வணக்கத்துக்குரிய
குகநாத சுவாமிகள் - மலேசியா
வாழ்த்துரையோடும் மற்றும் பெரியோர்களின்
ஆசியுடனும், ஆறு. திருமுருகன் தலைமையில்
ஆலயமுன்றிலில் நடைபெறும்.
இந்த இறுவட்டு வெளியீட்டில் கலந்து சிறப்பிக்கும்
வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ சிவபூமகா காளியம்மன் தேவஸ்தானம்,
பொற்பதி வீதி, கோண்டாவில்.
(15200)(45-7-21)

## சுஜீவா வைத்தியசாலை விடுமுறை அறிவித்தல்

வைத்தியரின் மாமியாரின் மரணச் சடங்கு இன்று தம்பசிட்டி வீதி, பருத்தித்துறையில் இடம் பெறுவதால் இன்று முழுநாளும் (01.03.2012) வைத்தியசாலை மூடப்பட்டிருக்கும். மேலதிக விவரங்களுக்கு தொலைபேசியூடாக தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். மீண்டும் சனிக்கிழமை முதல் வழமைபோல் வைத்தியசாலை இயங்கும்.

தொ.பே.இல. 077 559 4147
கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (151914)(45-7-25)

வைத்தியர்: ஜெ. ஜெயலன்,
வைத்தியர்: திருமதி ச.ஜெயலன்,
சுஜீவா வைத்தியசாலை

## மரண அறிவித்தல்

திருமதி மனோன்மணி தர்மலிங்கம்



கல்லூரி வீதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி தர்மலிங்கம் (27.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஜெயசோதி, ஈஸ்வரபாதம், பரஞ்சோதி மற்றும் மனோகரி (பருத்தித்துறை), ஜெயந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தயாளினி (பிரான்ஸ்) தயாளன் (மலேசியா), தபேசன் (பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தாயும், சந்திரசேகரின் (பிரான்ஸ்) பாசமிகு மாமியும், பிரவீணாவின் (பிரான்ஸ்) பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் பொன்னுத்துரை, சிவக்கொழுந்து, தியாகராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2012) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பருத்தித்துறையில் உள்ள அவரது சகோதரி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தி.தங்கராசா, (பழம்)
தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.

தகவல்:
த.தபேசன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அகதிகளுக்கு ஆஸியில் புதிய தடுப்பு முகாம்

ஆஸ்திரேலியாவில், சட்டவிரோதமாக குடியேறும் இலங்கை உட்பட ஏனைய நாடுகளின் அகதிகளைத் தடுத்துவைப்பதற்கு தடுப்பு நிலையமொன்றை ஆஸ்திரேலியா அமைத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் கிழக்கு பேர்த்தில் நோர்த்தாம் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் இந்த தடுப்பு நிலையம், கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், கட்டுமானப் பணிகள் இழுபறிக்குள்ளாகியுள்ளதால், இந்த மாதமே முடிவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் இறுதிப் பகுதியிலேயே செயற்படத் தொடங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தடுப்பு நிலையத்தில், இலங்கை, ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 600 அகதிகள் தடுத்து வைக்கப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (வ)


## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி கூட்டுறவுப்பயிற்சிகளுக்கான விண்ணப்பம் கோரல்

2012 மார்ச் மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட இருக்கும் பின்வரும் கூட்டுறவுப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திர சாதாரண பிரிவு
2. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர் பிரிவு

மேற்படி பயிற்சிகள் தொடர்பான விவரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் ரூபா 20/= செலுத்தி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். விண்ணப்ப முடிவுத்திகதி:-15.03.2012

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை
கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத்தொகுதி, 2ம் மாடி
இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

அதிபர்
கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### திருமதி சாரதாதேவி தர்மராஜா



கொழும்பை பிறப்பிடமாகவும் மாவிட்டபுரம், மல்லாகத்தில் வசித்தவரும் தற்போது 60/1, குளுதாகொட கல்கிசையில் வசித்தவருமாகிய திருமதி சாரதாதேவி தர்மராஜா 27.02.2012 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - மீனாம்பாளின் அன்பு மகளும் சுப்பிரமணியம் - பூரணம் தம்பதியரின் மருமகளும் சு.தர்மராஜாவின் (நோர்வே) அன்பு மனைவியும், சமீபன் (U.S.A), தர்சன் (உரிமையாளர் - i 7 கம்பியூட்டர் நிறுவனம் யாழ்ப்பாணம், கொழும்பு) துஷிந்தன், ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சுசிலா தேவி, சற்குணராஜா, காலஞ்சென்ற ஜோதிராஜா மற்றும் மகேந்திரராஜா, மல்லிகா தேவி, ரவீந்திரராஜா (கனடா), மற்றும் ஜெயராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பாலசுப்பிரமணியம், சாந்தி, காலஞ்சென்றவர்களான திரு, திருமதி பாலசுந்தரம் ஆகியோரின் மருமகளுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (04.03.2012) ஞாயிற்றுக்கிழமை கல்கிசையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

60/1, குளுதாகொட வீதி,
கல்கிசை.

தகவல்:
குடும்பத்தினர்.

### சாராள் இந்திராவதி கிட்டிணன்



மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும் புத்தூர் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட (ஜெயஜீவிய சபையை சேர்ந்த) சாராள் இந்திராவதி கிட்டிணன் நேற்று (29.02.2012) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னாரின் அடக்க ஆராதனை (02.03.2012) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்
ஆ.கிட்டிணன்

(14668) (10)

## சுழிபுரம் கடற்கரை வைரவர் ஆலயத்தை புனரமைக்க ஏற்பாடு

கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களில் சேதமடைந்த சுழிபுரம், திருவடிநிலை கடற்கரை வைரவர் ஆலயம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

நீண்ட காலமாக பூசை வழிபாடுகள் இன்றிக் காணப்பட்ட இந்த வைரவர் ஆலயத்தை, வழி நடத்தி வந்த பரம்பரையைச் சேர்ந்த வெளிநாட்டில் வசிக்கும் சுழிபுரம் யாமனை வி.சரவணமுத்து என்பவர் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார். இதற்காக சுழிபுரம் மக்களை ஒன்றிணைத்து சபை ஒன்றை உருவாக்கியுள்ளார்.

இந்தச் சபையின் செயற்பாட்டின் மூலம் ஆலயத்துக்கு மூலஸ்தானம், தரிசன மண்டபம் என்பன அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மூலஸ்தானத்தை அமைப்பதற்குரிய கருங்கற்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது. கிடைத்ததும் கோயில் திருப்பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. (ந-28)

## பாதுகாப்பு நிலையத்தில் மோட்டார் சைக்கிள் திருட்டு

சாவகச்சேரி, மார்ச்.1

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற வாகனப் பாதுகாப்பு நிலையத்தில், நிறுத்தப்பட்டு திருட்டுப்போன மோட்டார் சைக்கிள் தொடர்பாக, மன்றத்தினால் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென மோட்டார் சைக்கிளைப் பறிகொடுத்த வர்த்தக நிலையத் தொழிலாளி தெரிவித்தார்.

சாவகச்சேரி நவீன சந்தை முன்பாக சாவகச்சேரி வர்த்தகர்களின் நலன் கருதி வணிகர் மன்றத்தினால் வாகன பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டு வர்த்தகர்களின் சைக்கிள்களும் மோட்டார் சைக்கிள்களும் மட்டும் நிறுத்தப்படுகின்றன.

இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் இந்த பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தப்பட்ட வர்த்தக நிலைய ஊழியரின் மோட்டார் சைக்கிள், இனந்தெரியாதோரால் திருடப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக வணிகர் மன்றத்தில் முறையிடப்பட்டபோது, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு கூறப்பட்டது. அதன் பிரகாரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு ஒரு மாதத்துக்கு மேலாகியும் இதுவரை மோட்டார் சைக்கிள் கிடைக்காததால் வணிகர் மன்றம் தனக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையெனக் கவலையுடன் தெரிவித்தனர். (ந-9)

## மரண அறிவித்தல்

### முருகேசு திருநாமம்



சங்கரத்தை

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு திருநாமம் நேற்று (29.02.2012) புதன்கிழமைகாலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க.நவரத்தினம் (மருமகன்)


## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)

### பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தை ரூபா 20/- செலுத்தி கடமை நேரத்தில் சபையில் பெற்றுக்கொள்ளலாம்.

**பதவி-அச்சக முகாமையாளர் தரம் 115/10**
சம்பளத் திட்டம் - 10700-120 X 10 - 130 X 10 - 13200/-

**கல்வித் தகைமை**

அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 11 ஆவது சம்பளத் திட்டத்தில் தொடர்புபட்ட வியாபார அலுவல்கள் பற்றிய பதவி ஒன்றில் 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 12 ஆவது சம்பளத்தில் தொடர்புபட்ட வியாபார அலுவல்கள் பற்றிய 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிப் பரீட்சையில் சித்தி அல்லது அதற்கு சமமான தகைமைகள்

இ) கூட்டுறவுச் சங்க ஊழியர் உயர்தரம் சான்றிதழ் / க.பொ.த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் தொடர்புபட்ட வியாபார அலுவல்கள் பற்றிய மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**பதவி - அச்சக இயந்திர இயக்குநர் தரம் 318/14**
சம்பளத் திட்டம் - 9700-80 X 10 - 85 X 10 -11350/-

**கல்வித் தகைமை**

அ) க.பொ.த. சாதாரணதரம் பரீட்சையில் கணிதம்/ எண்கணிதம்/ தமிழ்/சிங்களம் உட்பட ஆறு பாடங்களுடனான சித்தியுடன் இயந்திர இயக்குநர் பதவியில் ஆகக் குறைந்தது 01 வருட அனுபவம்

**பதவி காவலாளி தரம் 314/16**

சம்பளத் திட்டம் - 9200 - 70 X 10 - 75 X 10 - 10650/-

**தகைமை**

கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத் திட்ட பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது ஒரு வருடகால அனுபவம்

**அல்லது**

எட்டாம் வகுப்புச் சித்தியுடன் நல்ல தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

**ஏனைய விவரம்**

வயதெல்லை - 18-45 வரை
கூட்டுறவுப் பணியாளருக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப் பட மாட்டாது.
கணினி மற்றும் மொழி ஆற்றல் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
தெரிவு செய்யப்படுபவர் சபையால் கோரப்படும் பிணை செலுத்த வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி 15-03-2012**

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**
செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக்கூட்டுறவுச் சபை,
வீரசிங்கம் கட்டடத்தொகுதி, 2ஆம் மாடி,
இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்.மாவ.கூ.சபை. செயலாளர்.

(C19506) (10)



## Lanka Health Medical Fair 2012

6,7&8 April 2012 at Ariyalai Saraswathy Community Centre

லங்கா மெடிகல் பெயார்-2012

- Free consultation of general physicians and specialists
- Display of reptiles and human body parts
- Free eye clinic and diabetic clinic
- Medical fair - book shops/medi labs/Clinics /and much more
- Interesting Evenings with Cultural events

6,7,8 April2012

விசேட வைத்திய நிபுணர்களின் இலவச ஆலோசனைகள்.

இந்த மாபெரும் நிகழ்வில் உங்கள் வர்த்தக நிறுவனங்களை/உற்பத்திப்பொருட்களை காட்சிப்படுத்த உடனே அழையுங்கள்

Book Stalls now : 0771249864/021-3208342

Organized by : Lanka health Magazine

Marketed by : jaffnaonline.info

1st Time in Jaffna



இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வருகை தரும் விசேட வைத்தியநிபுணர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் இலவச மருத்துவ முகாம்

Organized by : Lanka health

Find details at : www.jaffnaonline.info/listing


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது ஆபிரிக்கா



நியுசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் ஆட்டத்தில் 6 இலக்குகள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றுள்ளது.

நியுசிலாந்து -தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையேயான இரண்டாவது ஒரு நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதன் மூலம் நியூசிலாந்து அணி துடுப்பெடுத்தாடியது. நியூசிலாந்து அணியில் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய நிகோல் 11 ஓட்டங்களும், மார்டின் குப்தில் 58 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் பிரண்டன் மக்கலம் 85 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இறுதியில் நியூசிலாந்து அணி 47.3 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 230 ஓட்டங்கள் எடுத்தது. தென்னாபிரிக்க அணியில் மோர்கல் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

இதனையடுத்து தென்னாபிரிக்க அணி 231 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது.

தென்னாபிரிக்க அணியில் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய ஹசிம் அம்லா 92 ஓட்டங்கள் எடுத்து அணியை பலப்படுத்தினார். இறுதியில் தென்னாபிரிக்க அணி 38.2 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்குகள் இழப்பிற்கு 231 ஓட்டங்கள் எடுத்து 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக மோர்கல் தெரிவானார். (5)





# மறக்க முடியாது

இமாலய இலக்கை விரட்டி 'போனஸ்' புள்ளி பெற வேண்டும் என்ற இக்கட்டான நிலையில், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினேன். இது, எனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையின் சிறந்த இன்னிங்சாக அமைந்தது, என்று விராத் ஹோக்லி பெருமிதத்துடன் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான முத்தரப்பு ஒருநாள் லீக் ஆட்டத்தில் 133 ஓட்டங்களை விளாசி, வெற்றிக்கு வித்திட்ட விராத் ஹோக்லி, இந்திய அணியின் இறுதிக்கான வாய்ப்பை பிரகாசமாக்கினார்.

**தந்தை மரணம்:**

டில்லியை சேர்ந்தவர் ஹோக்லி. இளம் பருவத்தில் இருந்தே துணிச்சலான வீரராக விளங்கினார். 2006 இல் கர்நாடகாவுக்கு எதிரான ரஞ்சி தொடரில் டில்லி அணி 'பாலோ- ஒன்' தவிர்க்க போராடியது. முதல் நாளில் ஹோக்லி 40 ஓட்டங்கள் எடுத்திருந்தார். அடுத்த நாள் அதிகாலை 2 மணி அளவில் இவரது தந்தை மரணமடைந்தார். கனத்த இதயத்துடன் காலையில் கிரிக்கெட் களத்துக்கு வந்தார். 90 ஓட்டங்கள் விளாசி, ஆட்டம் சமநிலையில் முடிய முக்கிய காரணமாக இருந்தார். பின் மாலையில் தந்தையின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டார்.

இதே போன்று நேற்று முன்தினமும் உறுதிமிக்க ஆட்டத்தை வெளிப்படுத்திய இவர், இந்திய ரசிகர்களின் நெஞ்சங்களை கவர்ந்தார். இது குறித்து ஹோக்லி கூறியதாவது:

மிகவும் இக்கட்டான ஒரு ஆட்டமாக இருந்தது. 321 ஓட்டங்களை விரைவாக 'சேஸ்' செய்ய வேண்டும். அப்போது தான் 'போனஸ்' புள்ளி கிடைக்கும் என்ற நிலையில், சரியான நேரத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினேன். இதுவே, எனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையின் சிறந்த இன்னிங்சாக அமைந்தது.

ஒவ்வொரு பந்து பரிமாற்றத்துக்கும் ஒரு நான்கு ஓட்டம் அடிப்பது என்று திட்டமிட்டு விளையாடினோம். கடைசி 10 பந்து பரிமாற்றங்களில் 100 ஓட்டங்கள் என்றால், 'ரி-20' பாணியில் எடுத்து விட முடியும் என்று நம்பினேன். கடந்த ஆட்டத்தில் பந்தை நன்றாக அடித்து விளையாடினேன். அப்போது நிலைத்து நின்று துடுப்பெடுத்தாட வேண்டும் என்று அணித்தலைவர் டோனி ஆலோசனை கூறினார். இதனையும் மனதில் கொண்டு செயல்பட்டேன். இறுதிக்கு தகுதி பெற முடியும் என்று நம்புகிறேன். ஒருவேளை தவறினால், சிறப்பாகக் கிரிக்கெட் விளையாடிய திருப்தி கிடைக்கும். - என்றார். (5)

# சேவாக் ஓய்வு



ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியிலிருந்து வீரேந்தர் சேவாக்கிற்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் மார்ச் 11 முதல் 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஆசிய கிண்ண சுற்றுத் தொடருக்கான இந்திய குழாம் நேற்று புதன்கிழமை அறிவிக்கப்பட்டது.

இந்தக் குழாமில் வீரேந்தர் சேவாக் இடம் பெறவில்லை. இதனால் ஹோக்லி உபதலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். வேகப்பந்து வீச்சாளர்களான சகீர்கான், உமேஸ் யாதவ் ஆகியோருக்கும் ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் இந்தக் குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார். சி.பி. கிண்ணத் தொடரில் 7 போட்டியில் பங்குபற்றிய சச்சின் மொத்தமாக 143 ஓட்டங்களை மாத்திரமே பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் அவரின் எதிர்காலம் குறித்து சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சகலதுறை வீரர் யுசுப் பதான், வேகப்பந்து வீச்சாளர் அஷோக் டிண்டா ஆகியோர் மீண்டும் இந்திய அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய குழாம் விவரம்: மஹேந்திரசிங் டோனி (தலைவர்), ஹோக்லி (உப தலைவர்), சச்சின் டெண்டுல்கர், கௌதம் கம்பீர், ரோஹித் சர்மா, சுரேஷ் ரெய்னா, மனோஜ் திவாரி, ரவீந்திர ஜடேஜா, ரவிச்சந்திரன் அஸ்வின், பிரவீன் குமார், வினய் குமார், ராகுல் சர்மா, யுசுப் பதான், இர்பான் பதான், அசோக் டிண்டா.

இதேவேளை இந்திய அணியில் இருந்து விரேந்தர் சேவாக் மற்றும் சகீர்கான் ஆகியோர் நீக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உடற்தகுதி காரணமாக இருவருக்கும் இந்தத் தொடரில் ஓய்வளிக்கப்பட்டுள்ளதாக இந்திய அணியின் தேர்வுக்குழுத் தலைவர் கே.ஸ்ரீகாந் தெரிவித்துள்ளார்.

அணியின் உடல்கூற்றியல் நிபுணர்களின் அறிக்கை தமக்கு கிடைத்துள்ளதாவும், உபாதை காரணமாக அவர்களுக்கு ஓய்வளிக்கப்பட வேண்டுமென அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சி.பி கிண்ண சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் திறமையை வெளிப்படுத்த தவறியதை அடுத்து இருவரும் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உபாதை காரணமாக வேகப்பந்துவீச்சாளர் உமேஷ் யாதேவும் அணியில் இருந்து விலக்கப்பட்டுள்ளதாக இந்தியத் தேர்வுகுழு தலைவர் கே.ஸ்ரீகாந் சுட்டிக்காட்டியுள்ளார். (5)

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்றுவரும் முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் இந்திய, இலங்கை அணிகள் முக்கியமான ஆட்டத்தில் நேற்று முன்தினம் மோதின. இந்த ஆட்டத்தில் இந்திய அணி இமாலய வெற்றியைப் பதிவு செய்தது.

இந்திய அணி தலைவர் இலங்கையுடனான இமாலய வெற்றி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், நான் பங்கேற்ற ஒரு நாள் போட்டியில் சிறப்பானவற்றில் இதுவும் ஒன்று. 40 பந்து பரிமாற்றங்களில் 321 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், சச்சின், சேவாக் நல்ல தொடக்கம் கொடுத்தனர். இதை ஹோக்லி, கம்பீர் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். ஒட்டுமொத்தமாக சிறப்பான முறையில் திறமை வெளிப்படுத்தியதே வெற்றிக்கு காரணம். இறுதிக்கு முன்னேற இனி எங்கள் கையில் எதுவும் இல்லை, என்றார்.

**தாங்கிக் கொள்ள முடியவில்லை**

இந்தியாவுக்கு எதிரான முத்தரப்பு ஒரு நாள் தொடரின் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் தோல்வி அடைந்தது ஜீரணிக்க முடியாத ஒன்று என்று இலங்கை அணித் தலைவர் ஜெயவர்தனா கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 320 ஓட்டங்கள் எடுத்த பின்பும் தோல்வி என்பது ஜீரணிக்க முடியாத ஒன்றாகும். விராத் ஹோக்லி மிக அற்புதமாக விளையாடினார். எனது கிரிக்கெட் வாழ்க்கையில் எதிரணியின் வீரர்கள் அற்புதமாக விளையாடியதைப் பார்த்துள்ளேன். அப்படிப்பட்ட சிறந்த ஆட்டங்களில் ஹோக்லியின் ஆட்டமும் ஒன்று.

நாங்கள் சிறப்பாகப் பந்துவீசவில்லை என்பது உண்மை. சரியாக களத்தடுப்பும் செய்யவில்லை. இருப்பினும் அதனால் இந்திய அணியின் வெற்றியைக் குறைத்து மதிப்பிட முடியாது. இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற இன்னமும் வாய்ப்பு உள்ளது. லீக் ஆட்டங்களில் இரண்டு முறை ஆஸ்திரேலியாவை வீழ்த்தியுள்ளோம். எனவே கடைசி லீக் ஆட்டத்திலும் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

**அதிவேக சதம்**

இந்த ஆட்டத்தில் 44 பந்துகளில் அரைசதம் கடந்த விராத் ஹோக்லி, 76 பந்துகளில் சதம் அடித்து அசத்தினார். ஒரு நாள் அரங்கில் இவர் எடுத்த அதிவேக சதம் இது தான். இதுவரை 9 சதம் அடித்துள்ளார் ஹோக்லி. இதில் 8 போட்டியில் இந்தியா வென்றது. இந்த ஆட்டத்தில் இவர் எடுத்த 133 ஓட்டங்கள் தான், ஒரு நாள் கிரிக்கெட்டில் ஹோக்லி எடுத்த அதிகபட்ச ஓட்டங்கள்.

ஆஸ்திரேலிய மண்ணில் இந்திய வீரர் எடுத்த மூன்றாவது அதிகபட்ச ஓட்டம் இது. இதற்கு முன் கங்குலி (141, எதிர்-பாகிஸ்தான், அடிலெய்டு-2000), யுவராஜ் சிங் (139, எதிர்-ஆஸ்திரேலியா, சிட்னி, 2004)

**சிறந்த 'சேஸ்'**

321 ஓட்டங்களை துரத்தி வெற்றி பெற்ற இந்திய அணிக்கு, ஆஸ்திரேலிய மண்ணில் இது, சிறந்த 'சேஸாக' அமைந்தது. இதற்கு முன்னர் இந்தத் தொடரில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 270 ஓட்டங்களை 'சேஸ்' செய்து வென்று இருந்தது.

ஒட்டுமொத்தமாக இந்திய அணிக்கு, ஒரு நாள் அரங்கில் இது மூன்றாவது சிறந்த 'சேஸ்'. முன்னதாக, இங்கிலாந்து (326 ஓட்டங்கள், லோர்ட்ஸ் -2002), மேற்கிந்தியத்தீவுகள் (325 ஓட்டங்கள், அகமதாபாத், 2002), அணிக்கு எதிராக பெரிய இலக்கை துரத்தி வெற்றி பெற்றது.



# எங்கள் கையில் எதுவும் இல்லை

# தொடரை வென்றது இங்கிலாந்து



பாகிஸ்தானுக்கு எதிரான 'ரி-20' கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.

பாகிஸ்தான்- இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3 ஆட்டங்கள் கொண்ட 'ரி-20' கிரிக்கெட் தொடர் டுபாயில் நடைபெற்று வந்தது. இதில் முதலாவது 'ரி-20' ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியும் இரண்டாவது 'ரி-20' ஆட்டத்தில் இங்கிலாந்து அணியும் வெற்றி பெற்றிருந்த நிலையில் மூன்றாவது 'ரி-20' கிரிக்கெட் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

இங்கிலாந்து அணி 20 பந்து பரிமாற்றங்களில் 6 இலக்குகள் இழப்புக்கு 129 ஓட்டங்கள் எடுத்தது. தொடக்க வீரர் பீற்றர்சன் 52 பந்தில் 6 நான்கு ஓட்டங்கள், 1 ஆறு ஓட்டத்துடன் 62 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்கள் மட்டுமே எடுத்தனர். பாகிஸ்தான் அணி சார்பில் அஜ்மல் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

130 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 20 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகள் இழப்புக்கு 124 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் 28 ஓட்டங்களும், ஆசாத் சபிக் 34 ஓட்டங்களும் எடுத்தனர்.

இந்த வெற்றியின் மூலம் 'ரி-20' கிரிக்கெட் தொடரை இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதற்கு முன் நடைபெற்ற டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் 3-0 என்ற கணக்கிலும், ஒரு நாள் கிரிக்கெட் தொடரை இங்கிலாந்து 4-0 என்ற கணக்கிலும் வெற்றி கொண்டமை குறிப்பிடத்தக்கது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பாலசுப்பிரமணியம் சுகந்தன்



மீசாலை வடக்கைப்(எழுதுமட்டுவாழ்) பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் சுகந்தன் கடந்த 09.02.2012 வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் - தில்லைநாயகம் தம்பதியரின் மூத்த மகனும், சுந்தராம்- பாக்கியலீலா தம்பதியரின் மருமகனும், விமலினியின் அன்புக் கணவரும், அபிநயாவின் அன்புத் தந்தையும், சுதன், சுஜிதன், சுவர்ணா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜாலினி, சங்கீதா, சிந்துகா, சுஜிவன், விஜிதன், சுபாஸினி, கல்யாணி, சுரேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.03.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு, கொடிகாமம். தகவல்: குடும்பத்தினர்.

## சிதம்பரப்பிள்ளை சண்முகம்

( பண்டிதர், ஓய்வுபெற்ற அதிபர் )

கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகவும், வவுனியா சின்னப் புதுகுளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட க.சி.சண்முகம் (பண்டிதர், ஓய்வுபெற்ற அதிபர் ) நேற்று (29.02.2012) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் சிதம்பரப்பிள்ளை- சின்னச்சி தம்பதியரின் அன்பு மகனும், கந்தையா- லக்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மனோன்மணிஅம்மாவின் அன்புக்கணவரும், Doctor முகுந்தன், கலைவாணி ஆகியோரின் பெரிய தந்தையும், Doctor சுதர்ஷினி, முருகுசெழியன் ஆகியோரின் அன்பு மாமனும், அட்சரன், நேத்திரன், சாயகி ஆயகி ஆகியோரின் அன்புப் பேரனும், வள்ளிப்பிள்ளை, பாக்கியம், குலசிங்கம், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், பேரம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வடிவாம்பிகை, தர்மராஜா காலஞ்சென்ற நடராஜா மற்றும் தியாகராஜா, நாகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.03.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 5.00 மணிக்கு வவுனியா சின்னப் புதுக்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னப்புதுக்குளம், வவுனியா தகவல் : தங்கராஜா.

# அரச படகுகளில் பாவனைப் பொருள்களை கொண்டு செல்ல முடியாத நிலைமை

யாழ்ப்பாணம், மார்ச்.1

நெடுந்தீவுக்கான அரச படகுகளில் பயணப் பொதிகளுடன் வீட்டுப் பாவனைக்கென மக்கள் சிறிய அளவில் கூட பொருள்களைக் கொண்டு செல்ல முடியாத நிலைகுறித்து நெடுந்தீவு மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக நெடுந்தீவுப் பிரதேச செயலர் தெரிவித்ததாவது:- குறிப்பிட்ட அறிவிப்பு வீதி அபிவிருத்தி அதிகார சபையாலேயே வெளியிடப்பட்டது என்றார். இதே வேளை வர்த்தக நோக்குடனான பொருள்களைக் கொண்டு செல்வது கடந்த 6 மாதங்களுக்கு முன்னரே தடைசெய்யப்பட்டுள்ளதால் தனியார் படகுகளிலேயே அவை கொண்டு செல்லப்படு வதாகவும் தெரிவித்த பொதுமக்கள், நெடுந் தீவுக்கான அரச படகுச் சேவை உல் லாசப் பயணிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் மட்டுமேஎன்றநிலையே உள்ளது எனவும் தெரிவித்தனர். (வ-7)


## சட்டமாணிக்கற்கை (LL.B-U.K) யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக

★ இலங்கை மற்றும் சர்வதேச அங்கீகாரம்
★ முதல் 100 மாணவர்களுக்கு விசேட சலுகைக் கட்டணம்
★ ஆகக் குறைந்த தகைமை க.பொ.த (உயர்தரம்)2S



நாளை நீங்களும் சட்டத்தரணியாகலாம்

வழிகாட்டி கருத்தரங்கும் பதிவுகளும்

திகதி:- 03.03.2012, 04.03.2012
நாட்கள்:- சனி, ஞாயிறு
நேரம்:- 2.00 Pm -5.00 Pm
T.P:- 0775949272



இடம்:- யாழ்ப்பாணக் கல்லூரி(பட்டப்படிப்புக்கள்பிரிவு) போதனாவைத்தியசாலை முன்பாக இல.464.ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்


# சேவையில் தூய்மை

'சாத்வீக சேவை செய்தல்' என்பதே தூய்மை நிறைந்தது. சேவை செய்தலில் எது சாத்வீகமானது எது ராஜசிகமானது என்று தோ்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். வெளியே சென்று கிராமங்களுக்கு வீதி அமைத்தல், கிணறு தோண்டுதல், வீதிகளைச் சுத்தப்படுத்துதல் போன்ற பணிகளில் ஈடுபடுகிறீர்கள். இவைகளை சமூக சேவையாகவே செய்கிறீர்கள். ஆனால் நீங்கள் செய்யும் சேவை உண்மையில் சம்பந்தப்பட்டோருக்குத் திருப்தியையும் ஆனந்தத்தையும் தரவேண்டும். "சமூகத் தொண்டு" செய்யும் நோக்கத்துடன் மருத்துவமனைக்குச் சென்று ஒரு நோயாளியைக் கண்டு உரையாடுகிறீர்கள். இது உண்மையில் தொண்டு.

நீங்கள் எவருக்குச் சேவை செய்ய விழைகிறீர்களோ, அவரைக் கடவுளின் உருவமெனக் கருதவேண்டும். திக்கற்ற அநாதைகளுக்கும் கவனிப்பின்றிக்கை விடப்பட்டுத் தவிப்போருக்கும் செய்யும் தொண்டு உண்மையில் கடவுளுக்குச் செய்யும் தொண்டேயாகும்.

எனவேசேவையின் தூய்மை நிலை புரிந்து சேவையாற்றவேண்டும்.



சாயி சிந்தனை

# கண்ணீர் அஞ்சலி

கடந்த 27.02.2012 அன்று சிவபதமடைந்த யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்றுறை தொழில்நுட்ப உத்தியோகத்தர் அமரர்



## இராசையா ஜெயகோபால்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறையருளை இறைஞ்சி நிற்கின்றோம்

விரிவுரையாளர்கள் மற்றும் சக ஊழியர்கள்
பௌதிகவியல் துறை.
விஞ்ஞான பீடம்.
யாழ்.பல்கலைக்கழகம்.
யாழ்ப்பாணம்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



மண்ணில் 1926-02-17
விண்ணில் 2012-01-31

அமரர் திருமதி.
## வேலுப்பிள்ளை இராசம்மா

கடந்த 31.01.2012 அன்று சிவப்பேறெய்திய எமது குடும்பகுலவிளக்கு அமரர் திருமதி வேலுப்பிள்ளை இராசம்மா அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் 28.02.2012 செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (01.03.2012) வியாழக்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சாவகச்சேரி வடக்கு, மடத்தடி. (14667) (7,10) குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எனது தந்தையின் சகோதரி திருமதி மனோன்மணி தர்மலிங்கம் (மணி அத்தை) அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

Dr. ஜெ. ஜெயலன்,
சுஜீவா வைத்தியசாலை.


## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரில் இருந்து 6km சுற்று வட்டாரத்தில் 2 பேர் கொண்ட குடும்பத்துக்கு சிறிய வீடு வாடகைக்குத் தேவை.

(15188)(25-7-8) தொடர்பு : 077 1067394

## சாரதி தேவை

Tipper வாகனம் ஓடக் கூடிய சாரதி தேவை. உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு : 077 9589718

## PHYSICS ENGLISH MEDIUM. CLASS

A/L - 2014 MECHANICS
A/L 2012 ELECTRICITY

ஆரம்பம்:- 03.03.2012
நேரம்:- 3.30 P.M. தொடர்பு: 077 4287373,
இடம்:- Green Pearl Institution
Navalar Junction. (15107)(6-7-8)

## காணி வீடு விற்பனைக்குண்டு

கல்வியங்காடு பிளேக்கிறவுண்ட் றோட்டில் (Play ground road), கோப்பாய் தெற்கு 3 ½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:0773174372. (15103)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி வசந்தமாலா சோமசேகரம்



ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தமாலா சோமசேகரம் (27.02.2012) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் மா. சோமசேகரத்தின் (அதிபர் - யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்), அன்பு மனைவியும், லக்ஸ்மன், நீரஜா, லவன் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2012) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று 9.30 மணியளவில் பூதவுடல் அராலி பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. (15189)(45-6-25) தகவல்: குடும்பத்தினர்

## இராசையா ஜெயகோபால்

(தொழில் நுட்ப உத்தியோகத்தர், பௌதிகவியல் துறை யாழ். பல்கலைக்கழகம்)



தொல்புரம் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா ஜெயகோபால் (27.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற அதிபர்கள் இராசையா-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், நடராசா-கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சின்னப்பிள்ளையின் அன்புப் பேரனும் லலிதாதேவியின் (முகாமைத்துவ உதவியாளர்-வலி. மேற்கு பிரதேச செயலகம்-சங்கானை) அன்புக் கணவரும், ஜெயசோதியின் (ஆசிரியை, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) அன்புச் சகோதரரும், இ. மதிவதனன் (அதிபர், ஊர்காவற்றுறை றோ.க. ஆண்கள் பாடசாலை), இன்பமலர் (ஆசிரியை யாழ். பண்டத்தரிப்பு ஜெந்தா மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஹர்ஸன், காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2012) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் மத்தி, சுழிபுரம். (15136) (6,7,10) தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அராஜகத்தை மறைக்க ஜெனிவாவை துரும்பாகப் பயன்படுத்துகிறது அரசு

## எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 1

மஹிந்த அரசின் குடும்ப ஆட்சியால் இன்று நாட்டில் அராஜகங்கள் தலைவிரித்தாடுகின்றன. இதனால் நாடே இன்று பெரும் அபாயகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் காக்க வேண்டிய கடப்பாட்டை உடைய கூட்டு எதிர்க்கட்சிகளாகிய நாம், அரசின் நாசகார செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

அரச எதிர்ப்பிற்கான எமது இரண்டாவது ஆர்ப்பாட்டத்தை நாளை (இன்று) பாணந்துறையில் நடத்தவுள்ளோம். இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. முதலான எதிர்க்கட்சிகளுக்கும் நாம் அழைப்பு விடுத்துள்ளோம். அரசின் அராஜகங்களுக்கு எதிரான இந்த ஆர்ப்பாட்டத்தில் மக்கள் அனைவரும் அணி திரண்டு வந்து தங்களது பங்களிப்பை வழங்கவேண்டும் எனக் கூட்டு எதிர்க்கட்சிகள் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளன.

அரசின் அராஜக செயல்களுக்கு நாட்டின் புனிதமான தேசியக் கொடியைப் பகடைக்காயாகப் பயன்படுத்தவேண்டாம். அரசின் அராஜகங்களை மூடி மறைப்பதற்காகத் தற்போது ஜெனிவா களத்தைத் துரும்பாகப் பயன்படுத்தி நாட்டு மக்களிடையே கபட நாடகத்தை மஹிந்த அரசு அரங்கேற்றி வருகின்றது எனவும் கூட்டு எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டு எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறின.

இந்தக் கூட்டு எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு செயற்றிட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் சார்பில் செயலாளர் சிறிதுங்க ஜெயசூரிய, நவசமசமாஜக்கட்சியின் சார்பில் கட்சி உறுப்பினரும் மற்றும் தொழிற்சங்கத் தலைவருமான லங்கா பேலி, ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் குமரகுருபரன், நவ சிஹல உறுமய கட்சியின் சார்பில் சரத் மனமேந்திர மற்றும் ருஹுணு மக்கள் கட்சியின் சார்பில் அருண சொய்சாவும் பங்கேற்றனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கூறுகையில்:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தினமும் காலையில் எமது கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் படத்திற்கு விளக்கேற்றி வணங்கவேண்டும். மஹிந்தவையும், இராணுவத் தளபதியையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவாளிகளாக நிறுத்துவதற்கே எதிர்க்கட்சிகள் சதிசெய்கின்றன என விமல் வீரவன்ஸ கூறி நாட்டு மக்களை ஏமாற்றி வருகின்றார். எமது நாட்டின் எந்தப் பிரஜையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிற்கவேண்டிய நிலை ஏற்படாத வகையில் ரணில் விக்கிரமசிங்க அடித்தளம் இட்டுள்ளார். அதனாலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ரணிலின் படத்தை வைத்து வணங்கவேண்டும்.

ராஜபக்ஷ குடும்ப ஆட்சியின் நாசகார செயல்களால் நாட்டு மக்கள் இன்று பாரிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர். அரசின் அராஜகங்களை மூடி மறைக்கவும், அரசுக்கு எதிரான மக்கள் போராட்டத்தை முடக்கி மக்களைத் திசைதிருப்புவதற்காக ஜெனிவா களத்தைத் துரும்பாகப் பயன்படுத்தி அரசு கபட நாடகத்தை அரங்கேற்றி வருகின்றது.

மஹிந்த அரசின் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. இது மகிழ்ச்சிக்குரிய விடயமே. சர்வதேசத்தின் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றபோது நேரத்திற்கு பொய் கூறி பாய்ந்து செல்கின்ற அரசு, இப்போது ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்திக் காட்டவேண்டும்- என்றார். (த-சி)

# முன்னாள் புலிப் பிரமுகர் வாகனத்தில் கடத்தப்பட்டார்

»1 கப்பட்டார். அதன் பின்னர் கிளிநொச்சி உதயநகரில் உள்ள தனது வீட்டில் குடும்பத்தினருடன் வசித்துவந்தார். அப்பகுதி கிராம சேவையாளருக்கு உதவியாளராக இவர் பணியாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 27 ஆம் திகதி இரவு 9 மணிக்கு இவரது வீட்டுக்கு வாகனத்தில் வந்த இனந்தெரியாதோர் இவரை பெயர் கூறி அழைத்து விசாரிக்க வேண்டும் என வீட்டுக்கு வெளியே கூட்டிச் சென்றதாகவும் பின்னர் அவரை தயாராக நின்ற வாகனத்தில் தூக்கிப் போட்டுக் கொண்டு விரைந்ததாகவும் குடும்பத்தினர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வவுனியா மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்திலும் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு இனந்தெரியாதோரால் முன்னாள் போராளி ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஏற்கனவே புனர்வாழ்வு பெற்று விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் இந்தச் சம்பவத்தால் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

(த-6)

# டக்ளஸை ஜெனிவா அனுப்பியது உலகில் மிகப் பெரிய நகைச்சுவை

»1 என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஜெனிவா மாநாடு தொடர்பில் கருத்து வெளியிடும் போதே ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துமாறு அமெரிக்கா அரசுக்கு அழுத்தம் கொடுத்துவருகின்றது.

ஜெனிவாவில் விசேட உரையொன்றை நிகழ்த்திய அமைச்சர் மஹிந்த சமரசிங்க, நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவோம் என தெரிவித்திருந்தார். அதற்கு அவர் சர்வதேசத்தின் உதவியையும் கோரியுள்ளார்.

அப்படியானால், அமெரிக்காவுக்கு எதிராக உள்நாட்டில் ஏன் ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகின்றது? அமெரிக்காவுக்கு கடும் எதிர்ப்பை வெளியிடும் அரசு அவர்களின் கோரிக்கையை ஏற்று மண்டியிட்டுள்ளது.

உள்நாட்டில் ஒரு முகத்தையும், வெளிநாட்டில் இன்னொரு முகத்தையும் காட்டும் அரசின் கபடத்தனம் இதன் மூலம் அம்பலமாகியுள்ளது.

உள்நாட்டில் அண்மையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள், மனித உரிமைகள் பேரவைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் அல்ல, எரிபொருள்கள், விலைவாசி உயர்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் வீதியில் போராடுவதைத் திசைதிருப்புவதற்கு திட்டமிட்டு நடத்தப்பட்டவையே.

வடக்கு, கிழக்கில் கருணா, டக்ளஸ் ஆகியோர் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்றும், ஆயுதக்குழுக்களாகச் செயற்படுகின்றனர் என்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவோம் எனக் கூறும் அரசு, ஜெனிவாவுக்கு அமைச்சர் டக்ளஸை அழைத்துச் சென்றமை உலகில் மிகப் பெரிய நகைச்சுவையாகும்.

உள்நாட்டில் மனித நலன்களைப் பாதுகாத்து ஜனநாயகத்தை ஏற்படுத்தியிருந்தால் எந்தவொரு பிரேரணையையும் தோற்கடித்திருக்கலாம் - என்றார்.

(த-சி)

# கூட்டமைப்பு நாளை கூடுகிறது

»1 பாடுகள் குறித்தும் கலந்தாலோசிப்பதற்கே இந்தக் கூட்டம் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். நாளை வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் ஜெனிவா மனித உரிமைக் கூட்டத்தொடர் குறித்தும் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் எனவும் அவர் மேலும் கூறினார். (த-10)

# இலங்கைக்கு கியூபா ஆதரவு

»1 ஜனாதிபதி ராஹுல் காஸ்டோவின் நிலைப்பாட்டை இலங்கைக்கான அந் நாட்டுத் தூதுவர் மரிசியா காஸ்ட்ரோ நேற்று அறிவித்துள்ளார்.

அமைச்சர் விமல் வீரவன்சவுக்கும் இலங்கைக்கான கியூபா நாட்டுத் தூதுவருக்கும் இடையில் நேற்று முக்கிய சந்திப்பொன்று அவரது அமைச்சில் இடம்பெற்றுள்ளது. இதன்போதே, இலங்கை விவகாரம் தொடர்பில் கியூபாவின் நிலைப்பாட்டை அவர் தெளிவுப்படுத்தியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக பிரேரணைவரும் பட்சத்தில் கியூபா உட்பட அதன் நேச நாடுகள் அந்தப் பிரேரணையை தோற்கடிப்பதற்கு தயாராகவே உள்ளது என்றும் இதன்போது அவர் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார். (த-சி)

# ஜெனிவா இராஜதந்திரப்போர் உச்சம் இலங்கைக்காகக் களத்தில் தக்ஷின்

»1 இதற்கமைய தக்ஷினுடன் தொலைபேசியூடாகப் பேச்சு நடத்தியிருக்கும் இலங்கை அரசின் அதி உயர் மட்டத் தலைவர்கள் இலங்கைக்கெதிராக மேற்கொள்ளப்படும் மேற்குலகின் சதி முயற்சியைத் தோல்வியுறச் செய்ய முழு அளவிலான ஆதரவை வழங்குமாறு கேட்டிருப்பதாக அறிய முடிந்தது.

இலங்கையின் கோரிக்கைக்கிணங்க லத்தீன் அமெரிக்க மற்றும் ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் சிலருடன் அவசரப் பேச்சுகளை நடத்தியிருக்கும் ஷின்வத்ரா, ஜெனிவாவில் மேற்குலக நாடுகள் எடுக்கும் தீர்மானத்திற்கு ஆதரவை வழங்குவது போருக்குப் பின்னராக இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்துமென்று சுட்டிக்காட்டியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்தின் தற்போதைய ஆட்சி அதிகாரத்தின் நிர்வாகச் செயற்பாடுகளுக்குத் தக்ஷின் ஷின்வத்ராவின் முழுமையான ஆலோசனைகளே பின்னணியில் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த-சி)

# ஜெனிவாவில் எக்காரணம் கொண்டும் இலங்கையை ஆதரிக்கக் கூடாது

»1 விக்கப்பட்டுள்ளவை வருமாறு-

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை இனியும் அனுமதிக்கக் கூடாது எனும் நோக்கில், இலங்கைமீது போர்க்குற்ற விசாரணைக்கு ஆணையிட வேண்டுமென்று வலியுறுத்தும் பிரேரணை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், அமெரிக்கா, பிரான்ஸ், நோர்வே உள்ளிட்ட நாடுகள் கொண்டுவரவுள்ளதாகவும் இந்தப் பிரேரணையின் மீது நடைபெறவிருக்கும் வாக்கெடுப்பில் இலங்கைக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்று இலங்கை அமைச்சர் மஹிந்த சமரசிங்க கருத்து தெரிவித்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெறும்போது, எக்காரணம் கொண்டும் இந்திய அரசு இலங்கை அரசை ஆதரித்திடக்கூடாது என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறிட விரும்புகிறேன் - என்று கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எழுதியுள்ள கடிதத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கையின் இறுதி கட்ட போரின் போது பல்லாயிரகணக்கான அப்பாவி தமிழ் மக்களை இலங்கை ராணுவம் கொன்று குவித்தது. இதற்கு கண்டனம் தெரிவித்து தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் அப்பாவி மக்கள் கொன்று குவித்ததை கண்டித்து, இலங்கைக்கு கண்டனம் தெரிவித்து ஐ.நா., மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வர உள்ளது. இந்த விவகாரத்தில் இந்தியா தங்களை ஆதரிக்கும் என இலங்கை அமைச்சர் கூறியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது மிகவும் கவலை அளிக்கிறது. அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா ஆதரித்து, இலங்கையின் செயலை கடுமையாக கண்டனம் தெரி[illegible] முதல்வர் [illegible] தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (த-சி-10)

# ஜூன் 31 இல் மனிக்பாம் மூடப்படும்

»1 நிலையத்தில் உள்ள கதிர்காமம், இராமநாதன் முகாம்கள் ஜூன் 31 ஆம் திகதியுடன் முற்றாக மூடப்படும் எனவும் அதற்கு முன்னதாக அங்குள்ள மக்கள் அனைவரும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படுவர் எனவும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். தற்போது மீள்குடியேற்றத்துக்கான நிதி போதியதாக இல்லாமையால் இந்த முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கான வசதிகளில் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட உள்ளதாகவும் அவர் அங்கு கூறினார்.

தற்போது இந்த முகாம்களி[illegible] இற்கும் மேற்பட்ட [illegible]ங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-400)

# ஜெனிவாவில் கடமை முடித்த கையோடு நாடு திரும்ப அமைச்சர்களுக்கு உத்தரவு

»1 தங்கியுள்ள அமைச்சர்களுக்கிடையே கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலும், ஜெனிவா சென்றுள்ள அமைச்சர்கள் குழாம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் பல்வேறு கோணங்களில் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வரும் நிலையிலுமே அரச தலைமைப்பீடம் இவ்வாறானதொரு பணிப்புரையைத் தமது அமைச்சர்கள் குழாமுக்கு விடுத்துள்ளது.

அமைச்சர் குழாமுக்கிடையே அதிகரித்துவரும் கருத்து மோதல், வீண் கிரயங்கள் உட்பட முக்கியமான காரணிகளைக் கருத்திற்கொண்டே இவ்வாறானதொரு முடிவை அரசு எடுத்துள்ளது என்றும் அறியக்கூடியதாகவுள்ளது.

அரச உயர்பீடத்தின் இந்த உத்தரவுக்கமைய, அமைச்சர்கள் குழு தமது கடமைகள் நிறைவடைந்த கையோடு நாடு திரும்பவேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் முக்கியஸ்தர்களுடன், தற்போதைய இலங்கை நிலைவரங்கள் தொடர்பில் பேச்சு நடத்தி இலங்கைக்கு ஆதரவு திரட்டும் பணிகள் இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெனிவா விரைந்த 52 பேர் அடங்கிய அமைச்சர்கள் குழாமில் மஹிந்த சமரசிங்க, நிமால் சிறிபால டி சில்வா, ஜீ.எல்.பீரிஸ், டக்ளஸ் தேவானந்தா, ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் உள்ளடங்கியிருந்தனர். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழிபுரத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு: சரவணபவன் எம்.பி. நேரில் ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 1

சுழிபுரம் திருவடி நிலை கடற்கரைப் பகுதியில் சட்ட விரோதமாக கடற்படையினர் மணலை அகழ்ந்து வருவதாகப் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர் நேற்று குறித்த பகுதிக்கு நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தார். அவருடன் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சபாநாயகமும் சென்றிருந்தார்.



இதன் பின்னர் "பொது மக்கள் தெரிவித்ததைப் போல பல இடங்களில் சட்ட விரோதமாக மணல் அகழப்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. இது குறித்து உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்து இத்தகைய சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்க உரிய நடவடிக்கை எடுப்பேன்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மக்களிடம் உறுதியளித்தார். (ங)

# மாணவ முதல்விகளை விசாரணைக்கு அலுவலகத்துக்கு அழைத்த ஆளுநர்

## இந்து மகளிர் கல்லூரியில் பரபரப்பு

யாழ். இந்துக் கல்லூரியின் மாணவ முதல்விகள் வடமாகாண ஆளுநரின் பணிமனைக்கு அழைக்கப்பட்டுக் கடுமையான விசாரணைகளின் பின்னர் நேற்று மதியம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது-

கடந்த மாதம் 17ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள், குறித்த பாடசாலைக் கட்டடத்தில் அமைந்திருந்த நல்லூர் கல்விக் கோட்டப் பணிமனையை இடமாற்றம் செய்யுமாறு கோரி வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தால் நல்லூர் கல்விக் கோட்டப் பணிமனை யாழ். கல்வி வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் மற்றும் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் வடமாகாண ஆளுநரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இதன் தொடர்ச்சியாக நேற்றுக் காலை யாழ். இந்து மகளிர் கல்லூரிக்குச் சென்ற யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அங்குள்ள மாணவ முதல்விகள் ஆறு பேரை விசாரணைக்காகப் பாட வேளையின் போது அதிபரின் அனுமதியுடன் அழைத்துச் சென்றுள்ளார்.

ஆளுநர் அலுவலகத்தில் மாணவிகளிடம், பாடசாலைப் புறக்கணிப்பை மேற்கொள்வதற்குப் பின்னணியில் இருந்தவர் யார்? என்றும் அவர்களை இனங்காட்டுமாறும் மிரட்டும் தொனியில் ஆளுநர் விசாரணை செய்துள்ளார்.

அதற்கு மாணவ முதல்விகள் "பாடசாலை மாணவர்களாலேயே இந்தப் புறக்கணிப்புப் போரட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதற்காக தாம் மன்னிப்புக் கேட்கிறோம்" என்று தெரிவித்தனர். இதன் பின்னரே வடமாகாண ஆளுநர் அவர்களை விடுவித்துள்ளார்- என்று தெரியவருகிறது. (ங-5)

## செங்கல் விற்பனைக்கு

அத்திவார கற்கள், 1 ½ அங்குல கருங்கல் சல்லி, 1 அங்குல கருங்கல் சல்லி, 3/4 அங்குல கருங்கல் சல்லி, ½ அங்குல கருங்கல் சல்லி,

சல்லி கற்கள்

நிலப்பதிப்புக் கற்கள்

பல வடிவங்களில் பல்வேறு அளவுகளில் நிலப்பதிப்புக் கற்கள் மற்றும் பூகற்கள் (Grill) விற்பனைக்கு உண்டு,

யாழ் மற்றும் வன்னி பிரதேசங்களுக்கு விநியோகம் செய்யப்படும்

பிரணவன் என்ரபிறைசஸ்

பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

077 3818799 (சங்கிலியன் சிலைக்கு முன்)

## எல்லா நாடுகளுக்கும் விசா ஆலோசனை

என்றால் அது

## திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனத்திடம் மட்டும் தான்.

எல்லா நாள்களும் (சனி- ஞாயிறு உட்பட)

காலை 9.00- பி.ப 5.30 வரை

★ 37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 0212219016

★ 115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. 0212285544

★ வவுனியா- மன்னார்: 0773454304.

★ மெல்பேர்ண், ஆஸ்திரேலியா- 0061412479209

Nalin Information Techonlogies Pvt Ltd

198/4 Parameswara Junction, Palaly Road, Thirunelvely.

T.P:- 021 2221166, 021 2221121

## நளின் நிறுவனத்தின் அறிவித்தல்

எனது நிறுவன உத்தரவாதம், நிறுவன உத்தரவாதம் தவிர்ந்த திருத்த வேலை, சேவையை பெற்றக் கொள்ளும் நோக்கில் எம்மிடம் 2009,2010,2011,2012 ஆகிய காலப் பகுதியில் ஒப்படைத்த கணனி, கணனி உதிர்ப்பாகங்களையும் உரிய பற்றுச்சீட்டு, உத்தரவாத பற்றுச்சீட்டு என்பவற்றை காட்டி 01.03.2012 தொடக்கம் 20.03.202 வரையான காலப் பகுதிகள் பெற்றுக் கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

Note:
எமது நிறுவன உத்தரவாத முத்திரை பொறிக்கப்பட்ட கணனி உதிரிப் பாகங்களை நீங்கள் எந்த நிறுவனத்தில் கொள்வனவு செய்தாலும் அதற்கான உத்தரவாதத்தினை எம்மிடம் நேரடியாக பெற்றுக் கொள்ள முடியும் (நிபந்தனையின் அடிப்படையில்)

## ஒரு மணிநேரத்தில் உங்களாலும் ஆங்கிலம் பேச முடியும்!

புத்தகம்,CD, இலக்கண விளக்கம் எதுவுமின்றி வெறும் பழக்கப்படுத்தலின் மூலம் ஆங்கிலத்தில் ஒரு சொல் கூட தெரியாது என்பவரையும் உங்கள் முன்னிலையிலேயே நாம் ஆங்கிலத்தில் பேசப் பயிற்றுவிக்கிறோம் வாருங்கள்

## இலவச ஆங்கிலப் பயிற்சிப் பட்டறை - 03.03.2012

காலை I 08-09 மாலை III 01-02
காலை II 10-11 மாலை IV 03-04

ஆங்கிலம் கடினமானதா இல்லையா என்பதையும், உங்களாலும் தமிழைப் போல சரளமாக ஆங்கிலம் பேச முடியுமா or இல்லையா என்பதையும் ஒரு மணித்தியாலத்தில் நீங்கள் தீர்மானியுங்கள்.

SAAMSON ENGLISH

279, மணிக்கூட்டு வீதி, (யாழ். ஆஸ்பத்திரி பின்புறம்) TEL- 0776214567

# புலம்பெயர் தமிழர் ஜெனிவாவில் இராஜதந்திர சந்திப்பு

கொழும்பு, மார்ச், 1

ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள ஐ .நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கலந்து கொண்டிருக்கும் புலம்பெயர் தமிழ் மக்களின் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் குழு அங்கு கூடியிருக்கும் பல வெளிநாட்டமைச்சர்கள், இராஜதந்திரிகள், மனித உரிமைகள் நிபுணர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் என்று பலருடனும் தொடர்ச்சியான சந்திப்புகளை நடத்தி வருகின்றது.

பிரிட்டன் தமிழர் பேரவையின் ஒருங்கிணைப்பில், கனேடிய தமிழர் காங்கிரஸ், அமெரிக்க தமிழ் அரசியல் செயலவை, பிரிட்டன் தமிழ் இளையோர் அமைப்பு ஆகிய அமைப்புகளின் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் குழுவே இந்த இராஜதந்திரச் சந்திப்புக்களில் ஈடுபட்டு வருகிறது.

அமெரிக்காவினால் இலங்கைக்கெதிராக கொண்டு வரப்படவிருக்கும் தீர்மானத்திற்கு ஆதரவு வழங்கும்படி உறுப்பு நாடுகளை வலியுறுத்தியும், தமிழ் மக்களுக்கெதிராக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையை எடுத்துக்கூறியுமே இந்த சந்திப்புகள் நடைபெற்று வருகின்றன.

அதேசமயம், இந்தத் தீர்மானம் தமிழ் மக்கள் வலியுறுத்தி வரும் நீதி தொடர்பிலோ அன்றி அவர்களின் அரசியல் உரிமைகள் தொடர்பிலோ காத்திரமான எந்த ஒரு அம்சத்தையும் கொண்டிருக்கவில்லை என்ற தமிழ் மக்களது கவலையையும் ஏமாற்றத்தையும் அவர்கள் எடுத்துக் கூறி வருகின்றனர்.

இதுவரை நடைபெற்ற சந்திப்புகள் நம்பிக்கை அளிப்பதாகவும் தீர்மானம் தொடர்பில் இதுவரை முடிவு எதனையும் எடுக்காத நாடுகள் தம்முடனான சந்திப்பில் பல விடயங்கள் குறித்து கலந்துரையாடியதாகவும் இக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசினால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஏன் பயனற்ற ஒன்று என்பது பற்றிய ஆங்கில, ஸ்பானிய மற்றும் பிரெஞ்சு மொழிகளிலான ஆவணம் ஒன்றை இவர்கள் கூட்டத்தொடரில் கலந்துகொண்டிருப்பவர்களுக்கு வழங்கி வருவதுடன், தமிழ் மக்களுக்கெதிராக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையை விளக்கும் பிரசுரங்களையும் விநியோகித்து வருகின்றனர்.

கடந்த திங்கள் என்று ஆரம்பமான ஜெனிவாக் கூட்டத்தொடரின் உள்ளக அமர்வுகளிலும் இவர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தொடர் முடியும் வரை இக் குழுவினர் ஜெனிவாவில் தங்கியிருந்து செயற்பட இருக்கின்றனர்.

# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் தருமராசா

(முன்னாள் வர்த்தகர்)



உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் தருமராசா நேற்று (29.02.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிவஞானம் தம்பதியரின் மருமகனும் காலஞ் சென்ற சாரதாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், பராசக்தி மற்றும் திருநாவுக்கரசு (லண்டன்), சுகிர்தமலர், கனகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா, அமரசிங்கம், பரராஜசிங்கம், இந்திராதேவி, குமாரசிங்கம் மற்றும் புனிதவதி, இராஜேஸ்வரி, மகேஸ்வரி, பாலசுந்தரம், இராஜரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுகுமார், சுஜிதா ஆகியோரின் பெரிய தந்தையும் யுகராசா, சிறிஸ்கந்தராசா, தவராஜசிங்கம், நவரஞ்சனாதேவி, லிங்கராணி ஆகியோரின் சிறிய தந்தையும் காலஞ்சென்ற புவனேஸ்வரன், பாமினி, அமுதினி ஆகியோரின் அன்பு மாமனும் பிரதாபன், பிரகாசன், பிரதீபா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2012) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் இணுவில் பூவோடை இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்

டச்சு வீதி, உடுவில்,
சுன்னாகம். (15201)

## திருமதி செல்லம்மா சிதம்பரப்பிள்ளை



பெரிய அரசடி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சிதம்பரப்பிள்ளை நேற்று (29.02.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும் திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற நகரசபை மின் உத்தியோகத்தர்), சிவப்பிரகாசம் (பிரதம தாதிய உத்தியோகத்தர் - கனடா), மனோன் மணி மகேஸ்வரன் (M.L.T. கனடா), சச்சிதானந்தன் (வயறிங் ஆனந்தன்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சி.சச்சிதானந்தன் (மகன்)
கா.சுப்பிரமணியம் (மருமகன்)

பெரிய அரசடி,
சாவகச்சேரி. (சி/9513)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org